மலர் - 04 இதழ் - 11 மே 2025

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

தீந்தமிழர் நீ தலைமை தமிழணங்கீர் முகவரி திருமதி கெ. ராஜேஸ்வரி

வீரநாராயணச்சேரி
மு. தனிஷி, இரா. கலைக்கோவன்

தேர்தல் பொருளாதாரம்
சு. அய்யம்பிள்ளை

திருவாசகம் எனும் தேன்
டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்

கவிஞனின் காதலி - நூலாய்வு
முனைவர் ப. கிருஷ்ணன்

மா விளக்கு ஏற்றுதல் - பௌத்தம் புகுத்திய மந்திரச் சமயச் சடங்கு
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி



தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 11
மே 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்

செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. **வீரநாராயணச்சேரி** — 3
மு. நளினி, இரா. கலைக்கோவன்

2. **ஆதிச்சநல்லூர் சைட் மியூசியம்** — 7
முத்தாலங்குறிச்சி காமராசு,

3. **பாண்டிய நாட்டின் ஆகாயத் திருத்தலம் - தேவதானம் நச்சாடை தவிர்த்தருளிய சிவன் கோயில்** — 10
பொதிகை குடும்பன் சண்முகக் குமார்

4. **மா விளக்கு ஏற்றுதல் - பௌத்தம் புகுத்திய மந்திரச் சமயச் சடங்கு** — 14
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி,

5. **தேர்தல் பொருளாதாரம்** — 21
ச. அய்யம்பிள்ளை,

6. **தமிழ்ப்புலவர் சரித்திரம் - சயங்கொண்டான்** — 27
பரிதிமாற் கலைஞர்

7. **வாழ்ந்து பழகிய இல்லம் : வாழ்விட வரைவியல்** — 32
மு. பழநிச்சாமி

8. **திருவாசகம் எனும் தேன்** — 35
டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்

9. **மதுரையும் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தலங்களும்** — 41
சி. அபிஷேக்

10. **கவிஞனின் காதலி - நூலாய்வு** — 55
முனைவர் ப. கிருஷ்ணன்

11. **மரபின் வேர்கள் - 5** — 61
டாக்டர் புதேரி தானப்பன்

12. **பராசக்தியும் மொழிப்போரும் (3)** — 72
முனைவர் சிவ இளங்கோ

13. **மலைகளில் இளைய மலை: இமயமலை** — 77
ச. சபாரத்தினம்,

14. **"பௌதிக அறிவியலின் தோற்றமும் பண்டய இந்தியாவின் பங்களிப்பும்--1** — 80
டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்

15. **எளிய முறையில் யாப்பறிவோம்.** — 86
நெருப்பலையார்.இராம இளங்கோவன்

16. ***TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor*** — 88
Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

சிற்றருவி

செண்பகாதேவி அருவி

புலி அருவி

தேனருவி

ஐந்தருவி

பிரதான அருவி

பழையகுற்றலம்

சிற்றருவி மூலிகைவனம்

வீரநாராயணச்சேரி

மு. நளினி, இரா. கலைக்கோவன்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாட்டில் இதுநாள்வரை கிடைத்துள்ள செப்பேடுகளில் பெரும்பான்மையன பிராமணர்களுக்கோ, சமயஞ் சார்ந்த கோயில், மடம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கோ, நிலம் அல்லது ஊரை அரசர்கள் கொடையளித்த செய்திகளையே கொண்டுள்ளன. 'தானப்பத்திரமாக' விளங்கும் இத்தகு ஆவணம் வரலாற்றுக்கு எப்படி உதவமுடியும் என்ற கேள்வி மிக இயல்பானது. அந்தக் கேள்விக்கு விடை சொல்வதென்றால், ஏதேனும் ஒரு செப்பேட்டுடன் உறவாடவேண்டும். சோழர் செப்பேடுகளில் காலத்தால் பழைமையானதும் எளிய அமைப்பினதுமான உதயேந்திரம் செப்பேடுகள் இதற்கு உதவக்கூடும்.

சோழ அரசமரபு

பழஞ் செப்பேடுகளுள் பெரும்பாலன இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளன. சமஸ்கிருத சுலோகங்களால் எழுதப்பெற்ற முதற்பகுதி கொடையளிக்கும் அரசரின் மரபுவழி பேசுவதால் சிறப்புப் பெறுகிறது. அந்த மரபுவழியில் தேவர்கள், புராண அரசர்கள், இலக்கிய அரசர்கள் என நீளும் பட்டியலின் இறுதியில் வரலாற்று அரசர்களும் உள்ளனர்.

முதல் பராந்தக சோழரால் வழங்கப்பெற்ற உதயேந்திரம் செப்பேட்டின் மரபுவழிப் பட்டியலில் புராண அரசர்களாகச் சிபி உள்ளிட்ட மூவரும் இலக்கிய வழி அரசர்களாகக் கோக்கிள்ளி, கரிகாலர், கோச்செங்கணான் ஆகியோரும் இடம்பெற, வரலாற்று அரசர்களாகப் பராந்தகரின் பாட்டனார் விஜயாலயரும் தந்தை ஆதித்தரும் சுட்டப் பெற்றுள்ளனர்.

பராந்தகருக்கு முற்பட்ட கால இலக்கியங்கள் பேசும் சோழ அரசர்களுள் மூவரை மட்டுமே இச்செப்பேடு குறிப்பதால் சோழமரபு இம்மூவரையும் பெருமையுற நினைத்தமை உணரப்படும். பத்துப்பாட்டு இலக்கியங்களில் பட்டினப் பாலையும் மலைபடுகடாமும் கரிகாலரை முன்னிட்டு எழுந்தவை. கோச்செங்கணானோ அப்பர், சம்பந்தர், மங்கையாழ்வார் எனத் தமிழ்நாட்டின் இரு பெருஞ் சமயப் பதிக ஆசான்களால் புகழப்பட்டவர். மாடக்கோயில் எனும் புதிய கலைஉத்தியைத் தமிழ் மண்ணில் அறிமுகப்படுத்திய மாபெரும் கலைஞர். சோழர்கள் வெளியிட்ட வேறு சில செப்பேடுகளும் இம்மன்னர்களைக் குறிப்பது இங்கு நினைக்கத்தக்கது.

முதல் பராந்தகர்

மிக எளிய செப்பேடு என்பதால், வரலாற்று அரசர்களில் பராந்தகரைக் குறித்து மட்டுமே உதயேந்திரம் சில பயனுள்ள தரவுகளைப் பதிவுசெய்துள்ளது. அவற்றுள் முக்கியமானவையாக அவர் கோயில்களை எடுத்தமை, கேரள அரசர் மகளை மணந்தமை, இரண்டு பாண அரசர்களை வென்றமை, பாண்டிய அரசர் இராஜசிம்மனையும் அவருக்குத் துணையாக வந்த இலங்கைப் படையையும் தோற்கடித்து சங்கிராமராகவன் எனும் சிறப்புப் பெயர் ஏற்றமை ஆகியவற்றைக் குறிக்கலாம். இந்நான்கனுள், இடையிலுள்ள இரண்டு செய்திகளும் வேறெந்தச் சோழர் செப்பேட்டிலும் இடம்பெறாதவை. பராந்தகர் மணந்த கேரள அரசரின் மகளாக அருமொழிநங்கையையும் அவர் தந்தையாகப் பழுவேட்டரைய அரசர் குமரன் மறவனையும் கல்வெட்டுகளின் அடிப்படையில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் அடையாளப்படுத்தியுள்ளது. பராந்தகர் வென்ற பாண அரசர்களாக இரண்டாம் விக்கிரமாதித்தனையும் மூன்றாம் விஜயாதித்தனையும் ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர்.

கேட்டவரும் தந்தவரும்

உதயேந்திரம் செப்பேடு சோழ அரசமரபுடன் கங்கர்களைப் பற்றியும் விரித்துரைக்கிறது. அதற்குக் காரணமும் இருக்கிறது. உதயேந்திரச் சதுர்வேதிமங்கலத்தில் வாழ்ந்த பிராமணர்களுக்கு நிலத்துண்டுகளை உரிமையாக்கக் கருதி, அதற்கான கொடை வேண்டிப் பராந்தகரிடம் விண்ணப்பித்தவர் இந்த கங்க மரபில் தோன்றிய இரண்டாம் பிருதிவிபதி. அவர் கேட்டதால்தான் பராந்தகர் இக்கொடையில் ஈடுபட்டார்.

படுவூர்க் கோட்டத்தின் மேல்அடையாறு நாட்டிலிருந்த கடைக்கோட்டூரைக் கொடையாக வழங்கிய பராந்தகர், அதை உதயசந்திரமங்கலத்தோடு இணைத்து ஓரூராக்கி வீரநாராயணச்சேரி எனப் பெயரிட்டு, பிராமணர்களுக்கான இடமாக, பிரமதேயமாக்குமாறு

தம் 15ஆம் ஆட்சியாண்டில், அதாவது, பொதுக்காலம் 922 இல் உத்தரவிட அடித்தளம் இட்டவர் இரண்டாம் பிருதிவிபதி. அதனால்தான், அவரைப் பற்றியும் அவர் மரபு பற்றியும் விரிவாகப் பேசுகிறது செப்பேடு.

கங்க மரபு

கங்கப் பரம்பரையின் முதல் அரசர் தொடங்கிக் கருநாடக மாநிலம் கோலாரில் நிகழ்ந்த முடிசூட்டைக் காட்டி, அவ்வழியில் வந்த சிறந்த வீரரான முதலாம் பிருதிவிபதியை முன்னிருத்துகிறது செப்பேடு. அந்த இடத்தில்தான் தமிழ்நாட்டின் புகழ்வாய்ந்த போர்க்களங்களுள் ஒன்றான திருப்புறம்பியம் பேசப்படுகிறது. அப்போரில் தம்மை எதிர்த்து வந்த பாண்டிய அரசர் வரகுணரைப் பல்லவ வேந்தர் அபராஜிதர் எதிர்கொண்டார். அவருக்குத் துணையாகப் போரிட்டுக் களத்தில் உயிரிழந்தவர் முதல் பிருதிவிபதி. அவரது பெருமைக்குரிய பெயரர்தான் உதயேந்திரம் செப்பேடு உருவாகக் காரணமான இரண்டாம் பிருதிவிபதி. அவரது போர்த்திறமும் வீரமும் பாராட்டியே அவருக்குப் பராந்தகர், 'மாவலிவாணராயர்' பட்டமளித்துச் சிறப்பித்ததாகச் செப்பேடு கூறுகிறது.

திருவடி சூட்டியவர்

கடைக்கோட்டூரில் இரண்டு நிலத்துண்டுகள் ஏற்கனவே திகம்பர சமணர்களுக்குத் தரப்பட்டிருந்தமையால் அவற்றை நீக்கி, எஞ்சிய ஊர்ப்பகுதியே பிரமதேயமாக்கப்பட்டது. இந்த அறச்செயலை எதிர்கால அரசர்கள் காக்கவேண்டிடும் பராந்தகரைக் குறிக்கும் செப்பேடு, அவர் சிவபெருமானின் திருவடிகளைத் தம் தலையில் சூடியவர் என்று பெருமை பேசுகிறது.

இது போல் சிவபெருமானின் திருவடிகளைத் தலையில் சூடியவராகக் கல்வெட்டு வழித் தம்மை அறிவித்துக்கொண்ட முதல் தமிழ்நாட்டு மன்னராகப் பல்லவ அரசர் இராஜசிம்மரைக் குறிக்கலாம். 'சிவசூடாமணி' என்றே சிறப்புப் பெயர் கொண்டிருந்தவர் அவர். 'இடைவிடாத ஈடுபாட்டால் புனிதப்படுத்தப்பட்ட தம் தலையில் சிவபெருமானின் திருவடிகளைச் சூடியவர்' என்று அவரது பனைமலைக் கல்வெட்டு அவரைக் கொண்டாடுகிறது.

சோழமரபில் பராந்தகரைத் தொடர்ந்து சிவபெருமானின் திருவடிகளைத் தலையில் அணிந்தவராக அறியப்படும் முதலாம் இராஜராஜர், சிவபாதசேகரன் என்றே தம்மை அழைத்துக் கொண்டவர். அத்திருப்பெயரில் சிவபாதசேகர மங்கலம் என்று ஓர் ஊரே விளங்கியதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவர் மகன் இராஜேந்திரனோ தம்மை சிவசரணசேகரனாகக் காட்சிப்படுத்தி மகிழ்ந்தவர்.

வீரநாராயணச்சேரி

உதயேந்திரம் செப்பேட்டின் வடமொழிப்பகுதி, கடைக்கோட்டூர் என்ற பெயருள்ள பூமியை உதயசந்திரச் சதுர்வேதிமங்கலத்திற்கு அரசர் தானமாக அளித்தார் என்று கூற, தமிழ்ப்பகுதி, பெருமானடிகள் பெயரால் கடைக்கோட்டூர் வீரநாராயணச்சேரி என்ற பிரமதேயமாய் வழங்கப்பட்டதாகச் சொல்கிறது. வீரநாராயணன் பராந்தகரின் விருதுப் பெயர்களுள் ஒன்று என்பதும் அப்பெயரிலேயே இப்போது வீராணம் என்றழைக்கப்படும் வீரநாராயணன் ஏரி அமைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கன.

எல்லைகள்

வீரநாராயணச்சேரியின் எல்லைகளைச் சுட்டுகையில் பாலாறு, விண்ணமங்கலத் தெற்றேறி, விண்ணப்புலியன் ஏரி, கங்காயன் ஏரி, வயிர வாய்க்கால், சிராங்குட்டை, சிற்றறியூர், மலை, முப்பெண்டிர் குறுக்கு, மொட்டைக் குறுக்கு, குதிரை வடி, அதியமான் முண்டை, பிடாம்புழை, எருமைச்சரி, ஆலந்தொட்டை மேடு, கல்லாலிஓட்டை, கற்குறும்பு, வேம்பு-ஆலம்-மருதம்-எட்டி-துரிஞ்சில்-தணக்கு முதலிய மரங்கள் ஆகியன வெளிப்படுகின்றன. திசை விளக்கிச் சொல்லப்படும் இந்த எல்லை வண்ணிப்பு ஒரு கிராமத்தின் வரைபடத்தையே நமக்குத் தந்துவிடுகிறது.

அறையோலையும் ஆவணமும்

அரசாணை கிடைக்கப்பெற்ற படுவூர்க் கோட்டத்து சபையார், கடைக்கோட்டூர் எல்லைகளை வரையறுத்து அவற்றை அடையாளப்படுத்தக் கல்லும் கள்ளியும் நட்டுச் செய்தியை மக்கள் அறியுமாறு அறையோலை செய்ய, மாவலிவாணராயனான இரண்டாம் பிருதிவிபதி அதைச் செப்பேட்டு ஆவணமாக்கி ஊரைப் பெற்ற பிராமணர்களுக்கு உரிமையாக்கி மகிழ்ந்தார்.

கங்க மன்னர் வேண்டுகோள் ஏற்றுச் சோழ மன்னர் வழங்கிய ஒரே பிரமதேயக் கொடை இதுதான் என்பதாலும் பல அரிய வரலாற்றுத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதாலும் உதயேந்திரம் செப்பேடு சிறப்புப் பெறுகிறது.

ஆதிச்சநல்லூர் சைட் மியூசியம்

முத்தாலங்குறிச்சி காமராசு,
வரலாற்று ஆராய்ச்சியாளர், நெல்லை

ஆதிச்சநல்லூரில், இந்தியாவிலேயே முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ள 'சைட் மியூசியத்தில்' (Site Museum) மீண்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்காகத் திருச்சி மத்திய தொல்லியல் இயக்குநர் அறவாழி அவர்களுக்கு, பொருநை ஆதிச்சநல்லூர் தொல்லியல் கழக நிறுவனர் முத்தாலங்குறிச்சி காமராசு நன்றி தெரிவித்துள்ளார்.

வரலாற்றுப் பின்னணி:

ஆதிச்சநல்லூர் உலக நாகரிகத்தின் தொட்டிலாகும். இவ்விடத்தில் 1876-ல் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஜாகோர் ஆய்வு செய்தார். தொடர்ந்து 1902-ல் அலெக்ஸாண்டர் ரீயாவும், 2004-ல் மத்திய தொல்லியல் துறை சார்பில் தியாக சத்தியமூர்த்தியும் ஆய்வு செய்தனர். அப்போது தியாக சத்தியமூர்த்தியுடன் ஆய்வில் இருந்தவர் முனைவர் அறவாழி ஆவார். காலங்கள் கடந்தும் 2017-ஆம் ஆண்டு வரை இதற்கான ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால், எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். வழக்கறிஞர் டாக்டர் அழகுமணி இவ்வழக்கை நடத்தினார். அப்போதைய நீதியரசர்கள் கிருபாகரன், எஸ். எஸ். சுந்தர் மற்றும் தாரணி ஆகியோர் இவ்வழக்கை விரைந்து விசாரித்துத் தீர்ப்பு வழங்கினர்.

அரசின் நடவடிக்கைகள்:

இக்காலகட்டத்தில் தமிழக அரசு ஆதிச்சநல்லூரில் இரண்டு கட்டங்களாகவும், சிவகளையில் மூன்று கட்டங்களாகவும், கொற்கையில் முதற்கட்டமாகவும் அகழாய்வு நடத்தியது. அதில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு 'பொருநை அருங்காட்சியகம்' அமைத்துத் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்தது.

இதற்கிடையில், மத்திய தொல்லியல் துறை மூலம் திருச்சியில் புதிய தொல்லியல் வட்டம் உருவாக்கப்பட்டு, முனைவர் அருண்ராஜ் அதன் இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவரின் முயற்சியால் இந்தியாவிலேயே முதல் 'சைட் மியூசியம்' ஆதிச்சநல்லூரில் அமைக்கப்பட்டது. இதற்கு அப்போதைய தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் டாக்டர் செந்தில்ராஜ், இடத்தேர்வு உள்ளிட்ட பல உதவிகளைச் செய்தார். 2023-ஆம் ஆண்டு இந்த அருங்காட்சியகம் திறக்கப்பட்ட பிறகு ஏற்பட்ட மழை வெள்ளத்தால், அங்கிருந்த மாதிரி அருங்காட்சியகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. 'சி' (C-Site) தளத்தில் அகழாய்வு செய்யப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகப் பந்தல் மழையினால் சேதமடைந்து விழும் நிலையில் இருந்தது.

ஆதிச்சநல்லூர் சைட் மியூசியம்: மீண்டும் பணிகள் தொடக்கம்

புதிய முன்னெடுப்புகள்:

தற்போது திருச்சி மண்டல தொல்லியல் இயக்குநராக முனைவர் அறவாழி நியமிக்கப்பட்டுள்ளார். மீண்டும் ஒரு தமிழர் இப்பொறுப்பை ஏற்றது தொல்லியல் ஆர்வலர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரது முயற்சியால் 2026-

27 நிதியாண்டிற்காக, இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறை ஆதிச்சநல்லூர் வரலாற்றுத் தளத்தில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, ஆற்றங்கரைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட இடங்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு உறைவிடங்கள் (Protection Shelters) அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொல்பொருட்களின் நீண்டகாலப் பாதுகாப்பை உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பூமிபூஜை மற்றும் வரவேற்பு:

இப்பணிகளின் தொடக்கமாக 12.04.2026 அன்று ஆதிச்சநல்லூர் 'சி' தளத்தில் பூமிபூஜை நடைபெற்றது. இந்தியத் தொல்லியல் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில், கண்காணிப்புத் தொல்பொருள் ஆய்வாளர் அறவாழி இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

அடிக்கல் நாட்ட வந்த இயக்குநர் அறவாழி அவர்களுக்கு, முத்தாலங்குறிச்சி காமராசு பொன்னாடை போர்த்தி வரவேற்பு அளித்தார். அப்போது அவர் கூறுகையில்:

"ஆதிச்சநல்லூரில் இந்தியாவிலேயே முதன்முதலாகச் சைட் மியூசியம் அமைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணிகள் முடங்கிக் கிடந்தது வருத்தமாக இருந்தது. தற்போது 2004-ல் இங்கு அகழாய்வு செய்தவரே இயக்குநராகப் பொறுப்பேற்றிருப்பது நம்பிக்கையைத் தருகிறது. அவர் வந்தவுடன் பொதுமக்களால் வழங்கப்பட்ட நிலத்தில் முள்வேலி அமைப்பது மற்றும் கிடப்பில் இருந்த பணிகளைத் தொடங்குவது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார். மத்திய நிதியமைச்சர் பட்ஜெட்டில் அறிவித்தபடி ஆதிச்சநல்லூரில் கலாச்சார மையம் அமையும் பணிகள் தற்போது தொடங்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.

மாநில அரசு அமைத்த பொருநை அருங்காட்சியகத்தைப் போலவே, ஆதிச்சநல்லூர் சைட் மியூசியத்தையும் மிகச் சிறந்த முறையில் செம்மைப்படுத்த வேண்டும் எனத் தொல்லியல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாண்டிய நாட்டின் ஆகாயத் திருத்தலம் - தேவதானம் நச்சாடை தவிர்த்தருளிய சிவன் கோயில்

பொதிகை குடும்பன் சண்முகக் குமார்

தென் பொதிகை ஆவணக் காப்பகம், தென்காசி

முன்னுரை:

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் இருந்து தென்காசி செல்லும் நெடுஞ்சாலை அமைந்தள்ள ஊர் **தேவதானம்**. இவ்வூரின் மேற்கே சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் நச்சடை தவிர்த்தருளிய ஈசன் திருக்கோயில் அமைந்துள்ளது. இவ்வூர் மக்களால் **பெரிய கோயில்** என்று அழைக்கப்படும் பெருமையும் பெற்றது. கோயிலின் பிரதான வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி வளம் காணப்படுகிறது. கோயிலின் முன்புறம் அகன்ற தெப்பக்குளம் அமைந்துள்ளது. குளத்தைச் சுற்றி படிகள் அமைந்த நாற்புற கரை அமைந்துள்ளது.

தேவதானம் - பெயர்க்காரணம்:

முன்னொரு காலத்தில் இவ்வடம் அடர்ந்த காடுகளும், உயர்ந்த மலைப் பிரதேசங்களும் கூடிய வனமாக காட்சியளித்துள்ளது. இந்த வனத்தில் தெய்வம் வந்து குடியேறியதால் **தெய்வ வனம்** என்றும், **தெய்வ கானம்** என்றும் பெயர் பெற்றுள்ளது. பின்னர் அதுவே தேவதானம் என்றும் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. தேவர்கள் யாவரும் அழகிய நகரம் என்று போற்றிய காரணத்தால் தேவதானம் என்று பெயர் பெற்றுள்ளது.

கோயில் கட்டப்பட்ட காலம்:

அருள்மிகு நச்சடைத் தவிர்த்தருளிய ஈசன் திருக்கோயில் பிற்காலப் பாண்டியர் காலமான கி.பி - 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். கற்றளியாக உருவாக்கப்பட்ட இக்கோயிலின் சுற்றுச்சுவர்கள் மட்டும் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.

தல புராணம்:

தேவதானத்தின் வரலாறு **சேறை தலபுராணம்** என்ற நூலில் இடம்பெற்றுள்ளது. திருநாட்டுப் படலம் முதல் சிவபூசைப் படலம் வரையில் முப்பது படலங்கள் கொண்ட தலபுராணத்தை எழுதியவர் **சேற்றூர் பொன்னாயிரம் கவிராயர்** ஆவார்.

சிவபெருமான் பாண்டிய மன்னனுக்கு போர்ச் சேவகம் செய்தது:

வீரபாண்டியன் எனும் மன்னன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். சிவபூசையில் சிறந்து விளங்கினான். அந்த நேரத்தில் விக்கிரமச் சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையே கடும் போர் நிகழ்ந்தது. அப்போது சிவபெருமான் பாண்டிய மன்னனின் கனவில் தோன்றி பாண்டியனுக்குத் துணையாகத் தாமும் பூதகணங்களுடன் வந்து உதவுவதாகக் கூறி 'நீ போய் சோழனுடன் போர் செய். நான் உரிய விதத்தில் உதவுகிறேன்' என்றார். . பாண்டிய மன்னனும் ஈசன் காட்டிய வழிப்படி தனது ஆட்பெருஞ்சேனையுடைன் சோழன் பாசறை சென்று போர் செய்தான். சிவபெருமான் போர் வீரனாக வேடம் பூண்டு சோழனுடன் போரிட்டு பாண்டியனுக்குச் சேவகம் செய்து வெற்றி ஈட்டித் தந்ததாக பொன்னையிரங்கவிராயர் சேறை தல புராணத்தில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு சிவபெருமானின் திருவருளால் சோழ மன்னனின் சேனைகள் தோற்கடிக்கப்பட்டன. இதுவே சிவபெருமான் பாண்டியனுக்குப் போர்ச் சேவகம் செய்த வரலாறு ஆகும்.

நச்சாடை தவிர்த்தருளுதல்:

தோல்வியுற்ற விக்கிரமச் சோழன் பாண்டிய மன்னனுக்குப் பல தீமைகளைச் செய்யலானான். அதனால் சோழ மன்னன் கண் பார்வையை இழந்து துன்புற்றுள்ளான். பின்பு சிவனை வழிபட்டு கண்பார்வை பெற்றான். கண்பார்வை பெற்ற காரணத்தால் தேவதானம் அருகே அமைந்துள்ள சேத்தூரில் திருக்கண்ணீஸ்வரர் ஆலயம் அமைத்து சிவனையும், தேவியையும் பிரதிஷ்டை செய்து வழிபட்டான். சோழனுக்குப் பார்வை தந்ததால் ஈசன் திருக்கண்ணீஸ்வரர் என்ற திருநாமத்தால் அழைக்கப்பட்டார். சிவன் அருளைப் பெற்ற பின்பும் சோழன் மனம் மாறவில்லை.

சோழ மன்னன் தனது ஊர் திரும்பாமல் பாண்டிய மன்னனுக்கு மேலும் துன்பங்களை செய்தான். பாண்டிய மன்னனைக் கொல்லும் நோக்கத்தோடு நஞ்சு கலந்த ஓர் நச்சடையைத் தயாரித்து தூதுவன் மூலம் பாண்டியனுக்கு அனுப்பி வைத்தான். பக்தனைக் காப்பாற்ற எண்ணிய ஈசன் பாண்டியன் கனவில் தோன்றி தூதுவன் கொண்டு வரும் நச்சாடையைத் தார் கோலால் எடுத்து தூதுவன் மேலே போர்த்துமாறு கட்டளையிட்டார். பாண்டிய மன்னனும் தூதுவன் வரவை எதிர்நோக்கி இருந்தான். மறுநாள் தூதுவன் நச்சடையைக் கொண்டு வந்து பாண்டியனிடம் கொடுத்தான். ஈசன் ஆணையின்படியே பாண்டியனும் அவ்வடையைக் கோலால் வாங்கி தூதுவன் மீது போர்த்தினான். தூதுவன் நச்சடையால் எரிந்து அழிந்து போனான். இவ்வாறு பாண்டியனுக்குப் போர்த்த இருந்த நச்சாடையைத் தவிர்த்து மன்னனின் உயிரைக் காத்ததால் சிவபெருமானுக்கு ***நச்சக்ஷடை தவிர்த்தருளிய ஈசன்*** என்ற திருநாமத்துடன் அழைக்கப்பட்டார். பாண்டிய மன்னன் தன்னை ஆபத்தில் இருந்து காப்பாற்றிய ஈசனைப் போற்றிப் புகழ்ந்து பல திருப்பணிகள் செய்தான்.

மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல சிவபெருமான் எழுதும் காட்சி

தேவதானத்தின் வேறு பெயர்கள்:

தேவைதானத்திற்கு அபேயகாபுரம், மந்தாகினிபுரம், மதவாபுரம், சிவபுரம், முக்திமாநகரம் என்று பல பெயர்களைத் தலபுராணம் குறிப்பிடுகிறது.

தீர்த்தம்:

தேவதானம் எனும் திருக்கோயிலுக்குச் செல்வோர் தருமாசலம் என்னும் மலையிலிருந்து ஓடி வரும் கோராற்றில் நீராடி பாவங்களைத் தீர்ப்பதால் இந்நதி **அகோ நதி** எனும் பெயர் பெற்றது. இந்நதி உமையும் கங்கையும் தவம் செய்த பேறு பெற்றது.

தலப் பெருமைகள்:

தெய்வ வனமான தேவதானம் என்ற இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளையும் கொண்டது. பலாசவனம் என்ற சிறப்புப் பெயர் இதற்கு வழங்கப்படுகிறது. இங்குத் தலவிருட்சமாக சரக்கொன்றை மரம் உள்ளது. நாகலிங்க மரமும் இங்கே மிகவும் சிறப்பு வாய்ந்த மரம் ஆகும்.

ஆகாயத் தலம்:

பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டைப் போலவே பஞ்ச பூதத் திருத்தலங்கள் உண்டு. அவையாவன:

- சங்கரன்கோவில் - நிலம்
- தாருகாபுரம் - நீர்
- கரிவலம் வந்த நல்லூர் - நெருப்பு
- தென்மலை - காற்று
- தேவதானம் - ஆகாயம்

சிவராத்திரி அன்று இரவு முழுவதும் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பஞ்ச பூத தலங்களுக்கும் சுற்றுப்புறக் கிராம மக்கள் சென்று தரிசனம் செய்து புண்ணியம் அடைகின்றனர்.

மா விளக்கு ஏற்றுதல் - பௌத்தம் புகுத்திய மந்திரச் சமயச் சடங்கு

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி,

ஆசிரியர், தமிழணங்கு, மதுரை

மாவிளக்கு எடுத்தல்என்பது நாட்டுப்புறத் தெய்வங்களுக்குச் செய்யப்படும் ஒரு நேர்த்திக்கடன் ஆகும். இடித்த அரிசி மாவினால் விளக்குச் செய்து அதில் எண்ணெய் அல்லது நெய் விட்டுத் திரி இட்டு விளக்கு ஏற்றுவதாகும். சில மலைக் கோவில்களில் பாறைகளில் உரல்கள் செதுக்கியிருப்பர். பக்தர்கள் இந்தப் பாறை உரல்களில் அரிசியைக் குத்தி எடுத்து மாவாக்கி ஏலம் சுக்கு கலந்து பிசைந்து உருண்டையாக உருட்டி அதில் ஒரு குழி அமைத்து எண்ணெய் அல்லது நெய் ஊற்றி விளக்குப் போடுவார்கள். பெரும்பாலும் அம்மன் கோவில்களில் மாவிளக்கு எடுப்பது மரபு சில வைணவ கோவில்களிலும் மாவிளக்கு போடும் பழக்கம் உள்ளது

மாவிளக்கு எடுத்தல்

கோயிலில் அம்மன் முன்பு இலைகளில் வைத்து மாவிளக்கை ஏற்றுவர். ஒருவர் தன்னுடைய தனக்கு நெஞ்சு வலி, வயிற்று வலி வரும் போது 'நான் நெஞ்சில் மாவிளக்கு எடுக்கிறேன்' 'வயிற்றில் மாவிளக்கு எடுக்கிறேன்' என்று நேர்ந்து கொண்டு தட்டின் மீது இலை வைத்து அந்த இலையின் மீது மாவிளக்கை வைத்து கோவிலின் முன்பு படுத்து தங்கள் வயிற்றின் மீது மாவிளக்கு தட்டை வைத்து எரிய விடுவார்கள். பத்து நிமிடம் 15 நிமிடம் வரை இவ்வாறு விளக்கு எரியும். நெஞ்சில் மாவிளக்கு எடுக்கிறேன் என்ற நேர்ந்து கொள்பவர்கள் படுத்த படி தங்கள் நெஞ்சின் மீது வைத்து மாவிளக்குத் தட்டைக் கைகளால் பிடித்துக் கொள்வார்கள்.

போன்மைச் சடங்கு

மா விளக்கு என்பது சர் ஜேம்ஸ் ஃபிரேசர் சொல்வது *The Golden Bough* நூலில் விளக்கியஸது போல ஒரு போன்மைச் சடங்கு *(Imitative ritual)* ஆகும். தனக்கு உயிரை கொடுத்த இறைவனுக்கு தன் இன்னுயிரைக் காணிக்கை ஆக்குவதாகும். தன் உடம்பைத்தானே நெருப்பிட்டு எரித்துக் கொள்ளுதல் *(தீ குளித்தல்)* போன்ற வழிபாட்டுச் சடங்கு முறை ஆகும். ஃபிரேசர் பழங்குடி மற்றும் நாட்டுப்புற மக்களிடம் புழக்கத்தில் உள்ள சடங்குகளை ஆராய்ந்து நூலாக எழுதினார் என்றாலும் அச்சடங்குகள் அவர்கள் காலத்தோடு மறைந்து போய்விடவில்லை. அவை மாறியும் திரிந்தும் காலத்துக்கேற்ப புதிய முறைகளில் தொடர்கின்றன.

ஒளி வழிபாட்டின் தொன்மை

ஒளி வழிபாடு என்பது மனித வரலாறு தோன்றிய காலம் தொட்டு இருந்து வருகின்றது. இதில் சூரிய சந்திரர் அக்கினி அல்லது நெருப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இரவின் இருளைப் போக்கக் கதிரொளி வந்ததும் கதிரவனைக் கடவுளாகத் துதித்துப் போற்றினர். இரவின் இருட்டைப் போக்க நிலவொளி வந்ததும் அதனையும் தெய்வமாகக் கருதினர். குறிப்பாக பௌர்ணமி நாட்களில் மக்கள் ஆடிப் பாடிக் கூடி மகிழ்ந்தனர். தங்களுக்கு உணவு சமைக்கவும் ஒளி தரவும் ஏற்றிய விளக்கின் சுடராக இருந்து ஒளி ஊட்டிய நெருப்பைக் கடவுளாக வழிபட்டனர்.

பௌத்த மதம் பரப்புதல்

தமிழகத்தில் தோன்றிய ஆசிவகம் மெல்ல மெல்ல வடக்கே பரவிய போது அசோக மாமன்னர் ஆசிவகரின் தலை ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் பொன் என்று விலை வைத்தார். தான் பின்பற்றும் பௌத்த மதம் மட்டுமே

உலகில் அனைவரும் பின்பற்றும் மதமாக இருக்க வேண்டும் என்று விரும்பித் தன் மகனையும் மகளையும் தெற்கே அனுப்பி பௌத்த சமயத்தைப் பரப்பினார். இதனால் ஆசிவகம் மறைந்து பௌத்தம் தழைத்தது. பௌத்தம் மதங்கொண்டு பரவியது. இச்சமயம் மக்களிடையே இருந்த பழைய வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் தன்னுடையதாக்கிக் கொண்டது. இதே நிலை இச்சமயத்திற்கும் பின்னர் பக்தி இயக்கக் காலத்தில் சைவ சமயப் பேரெழுச்சியின் போது ஏற்பட்டது.

தீக் குளித்தல் - தன்னையே படைத்தல்

புத்த துறவி உலக நன்மைக்காகத் தன் உடலை நெருப்புக்கு இரையாக்குதல்

கௌதம புத்தர் பசியோடு இருந்த வேளையில் அவருக்கு உணவாக வேண்டும் என்று முடிவெடுத்த சிறுமுயல் ஒரு அங்கு எரிந்து கொண்டிருந்த நெருப்பில் குதித்து தன் உயிரைத் தியாகம் செய்தது, என்று ஒரு கதை பௌத்த சமயத்தில் வழங்குகின்றது. எனவே பொதுநலத்துக்காக தன் உயிரைத் தியாகம் செய்தல் என்ற நடைமுறை அச்சமயத்தில் துறவிகளிடம் ஏற்பட்டது. இவர்கள் தங்கள் உடம்பில் எண்ணெய்த் துணியைச் சுற்றிக்கொண்டு தீ வைத்து மரணம் அடைவர். துறவிகளுக்கு தீ குளித்தல் பக்தி நடைமுறைகளில் ஒன்று. இல்லறத்தாருக்கு பல்வேறு இல்லறக் கடமைகள் இருப்பதால் அவர்கள் தீ குளிக்காமல் மாவைத் தன் உடம்பாகப் படைத்து அதில் விளக்கேற்றித் தன்னையே இறைவனுக்குப் படைத்தனர்.

பௌத்தத்தில் நெருப்பின் சிறப்பு

பௌத்த சமயத்தில் நெருப்பு சிறப்பாகப் போற்றப்படுகிறது. . கௌதம புத்தர் மனிதர்களைப் பிடித்திருக்கும் பற்று வெறுப்பு அறியாமை ஆகிய மூன்று நஞ்சும் நெருப்புப் போல நம்மைச் சுற்றி ச் சுழன்று எரித்து விடும், என்றார். இவ்வுலகத்தை அவர் சம்சார லோகம் என்றும் மறு உலகத்தை தீப்பிழம்புகளின் லோகம் என்றும் குறிப்பிடுவார்.

தீப்பிழம்பு என்பது தூய்மையைக் குறித்தது. புத்தர் இவ்வுடம்பை நெருப்பு என்கிறார். 'நாம் எரியும் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்று தாமரை சூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

போதிசத்துவ சபதம்

1963இல் அமெரிக்கா வியட்நாம் நாட்டுடன் போர் செய்தது. அமெரிக்காவின் பௌத்தர்களுக்கு எதிரான அடக்கு முறையைக் கண்டித்து பௌத்தத் துறவிகள் தல சா லோய் பகோடா முன்பு ஒரு ஊர்வலம் நடத்தினர். அச்சமயம் குவான் டாக் என்ற துறவி தீக்குளித்து உயிர் நீத்தார். இவ்வாறு தீக்குளிப்பதை மகாயான பௌத்த மரபு 'போதி சத்துவா சபதம்' என்கிறது. தீக்குளித்த இவர்கள் போதிசத்துவராகப் போற்றப்படுவர். இங்கு சப்தம் என்றால் வைராக்கியம், மன உறுதி என்று பொருள்

அமெரிக்காவில் தீக்குளிப்பு

2022 ஏப்ரல் மாதம் வட அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முன்பு பௌத்த சுற்றுச்சூழல் ஆர்வலர் விண் ப்ரூஸ் புவி தினத்தன்று இப் பூமியை காப்பாற்ற வேண்டும் என்ற உயர்நோக்கத்துடன் தீக்குளித்தார். இச்செய்தி பரவலாக ஆராயப்பட்டது இதனை தற்கொலை என்று தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. இதனை ஒரு எதிர்ப்புச் செயல் என்றும் புரிந்து கொள்ளக்கூடாது. தீக்குளித்தல் என்பது பௌத்த சமயத்தின் பக்தி முறையாகும் என்று விக்டோரியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரிஸ் கோட்டா ஜோன்ஸ் தெரிவித்தார். எனவே நெருப்பாக எரிந்து போதல் என்பது பௌத்த சமயத்தில் தன்னையே காணிக்கையாகத் தருவதாகும்.

உயிர்ப் பலிக்குப் பதிலாக

தமிழகத்தில் உயிருக்கு உயிர் என்ற வகையில் விலங்குகளையும் பறவைகளையும் பலி கொடுத்தனர். உயிர்ப்பலியையும் ஃபிரேசர் போன்மைச் சடங்கு என்பார். உயிரைக் கொடுத்த இறைவனுக்கு நாமும் ஓர் உயிரைக் கொடுக்க வேண்டும் என்று பக்தன் விரும்புகிறான். ஆனால் பௌத்தம் உயிர்ப் பலியை ஏற்கவில்லை. எனவே மாவில் விளக்கு செய்து ஏற்றுகிறான். மணிமேகலைக் காப்பியத்தில் ஆபுத்திரன் பலி கொடுக்க வைத்திருந்த பசுவைக் காப்பாற்றினான். வடக்கே வைதீகர்கள் குதிரைகளையும் பசுக்களையும் யாகத்தில் பலியாக்கினர். அவற்றை அவைதீக சமயமான பௌத்தம் எதிர்த்தது. எனவே தென்னகத்தில் பரவிய பௌத்த சமயம் உயிர்ப் பலிக்குப் பதிலாக வேறு சில புதிய போன்மைச் சடங்குகளை அறிமுகம் செய்தது.

மந்திர வழிபாட்டுச் சடங்கு

மக்கள் தன் உடலைக் குறிக்கும் வகையில் மாவை உருட்டி வைத்து அதில் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றித் தங்கள் உடம்பையும் உயிரையும் இறைவனுக்கு முன் பலியாக கொடுக்கும் போன்மை வழிபாட்டுச் சடங்கை நிறைவேற்றினர். மாவினால் பாவை (பொம்மை) செய்வது மந்திர தந்திர நடைமுறையாகப் பல நாடுகளிலும் (voodoo magic in

Africa) இருந்துள்ளது. இங்கும் ஏவல், பில்லி சூனியம் போன்ற மந்திரச் செயல்களில் 'மாவுப் பாவை' மனிதருக்குத் பதிலியாக அமைந்தது. பௌத்தர்கள் மந்திர தந்திரங்களில் கை தேர்ந்தவர்கள் என்பதால் இச்சடங்கை அவர்கள் அறிமுகம் செய்தனர். இதனை ஃபிரேசர் மந்திர வழிபாட்டுச் சடங்கு *(Magic religious ritual)* என்பார். மாவில் விளக்கு ஏற்றுவது, மாவில் ஊசி குத்துவது, மாவுப் பொம்மையின் கை, கால்களைப் பிய்த்து எறிவது போன்றவை குறிப்பிட்ட மனிதருக்கு மறைமுகமாகச் செய்யப்படும் நன்மை தீமைகள் ஆகும். மாவிளக்கு ஏற்றுதல் நன்மை தரும் மந்திர சமயச் சடங்கு ஆகும்.

வைணவத்தில் மாவிளக்கு

சைவ சமயத்தில் மாவிளக்கேற்றும் மரபு கிடையாது. ஆனால் வைணவ சமயத்தில் உள்ளது. ஏனெனில் பௌத்தக் கோவில்கள் வைணவக் கோவில்களாக மாற்றப்பட்டபோது அங்கு நரசிம்மரை அறவாழியின் (தர்மச் சக்ரா) பின்புறம் பிரதிஷ்டை செய்தனர். சில பௌத்த வழிபாட்டு மரபுகளையும் அவர்கள் தொடர்ந்து பின்பற்றினர். அவற்றுள் ஒன்று மாவிளக்கு ஏற்றுதல் ஆகும்.

வைணவப் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பொய்கையாழ்வார்

வையம் தகளியா வார் கடலே நெய்யாக/
வெய்ய கதிரோன் விளக்காக செய்யச்/
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை/
இடராழி நீங்குகவே என்று'

என்ற பாசுரத்தில் பெருமாளுக்குப் பூமியை அகலாக்கி கடலை நெய்யாக்கி கதிரவனை திருவிளக்காக்கினர்.

பூதத்தாழ்வாரும்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்'

என்று தன்னுடைய அன்பை அகலாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் தன் சிந்தையை திரியாகவும் கொண்டு ஞான விளக்கேற்றினார். ஆக தன்னையே விளக்காக்கி இறைவனுக்கு அர்ப்பணிக்கும் வழிபாட்டு முறை பௌத்தத்திலிருந்து தோன்றி சில வைணவக் கோவில்களில் தொடர்கின்றது.

விசுவாமித்திரர்

பௌத்த சமயத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரைப் பெருமாளின் அவதாரங்களில் ஒன்றாகச் சேர்த்துக்கொண்ட ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய புராணங்கள் விசுவாமித்திரர் பிரம்ம ரிஷியான கதையை விளக்குகின்றது. வசிட்டரைப் போல் தானும் பிரம்மரிஷி ஆக வேண்டும் என்று ஆசைப்பட்ட இவர் தன் உடலையே விளக்காக இறைவனுக்கு ஏற்றுகின்றார். ஐந்து முக தீபத்தைப் போல இவர் தழையும் இரு கால்களும் கைகளும் எரிந்தன. திரிகள் போல ஐந்து உறுப்புக்களும் எரிந்தன. இக் கதை பௌத்த சமயத் தீக்குளித்தல் மற்றும் மா விளக்கேற்றுதல் ஆகியவற்றின் புராணக் கதை வடிவமாகும்.

நெருப்புச் சடங்குகள்

வேளாண் குடிகள் வாழ்ந்த மருத நிலம் செழித்திருந்த தென்னகத்தில் நெருப்புச் சடங்குகள் மிகுதியாக இருந்தன. நீர் சடங்குகள் வடக்கே இருப்பது போல் இங்கு இல்லை. சங்க இலக்கிய காலத்தில் இருந்தே விளக்கேற்றுதல் என்பது கார்த்திகை மாதத்தில் நடந்துள்ளது. அதே மாதத்தில் சொக்கப்பனை கொளுத்துதல் சுளுந்து சுற்றுதல் போன்றவையும் இருந்தன. ஐப்பசியின் அடை மழையும் கார்த்திகையின் கனமழையும் பெய்து ஓய்ந்த பிறகு வயல் வழிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் தோன்றும் பூச்சிகளில் இருந்து பயிர்களைப் பாதுகாக்கும் நோக்கில் பூச்சிக்கொல்லி பாதுகாப்பு வேளாண் முறைகளாக நெருப்பும் புகையும் இணைந்த வேளாண் சமூகச் சமயச் சடங்குகள் தோன்றின. பிற்காலத்தில் சொக்கப்பனை கொளுத்துதல் கார்த்திகை விளக்கேற்றுதல் ஆகியவை சைவ சமயச் சடங்குகளாக உருமாறியதற்குக் காரணம் சைவ சமயம் வழக்கில் புகுத்திய புராணக் கதைகளாகும்.

நிறைவு

நெருப்பு தொன்று தொட்டு தமிழர் வாழ்வியலுடன் இணைந்து இருந்ததால் பௌத்தர்கள் அறிமுகம் செய்து வைத்த மாவிளக்கு ஏற்றுதல் என்பதும் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணிக்கும் ஒரு போன்மைச் சடங்காகத் தொடர்கிறது

உதவிய நூல்கள்

1.The Golden Bough:A Study in magic and religion (II), Vol 1, Macmillan, UK, 1976

2. முனைவர் தே ஞானசேகரன், மந்திரம் சடங்குகள் சமயம், பார்த்திபன் பதிப்பகம் திருச்சி 2000 .

3. முனைவர் தேமொழி, தமிழகத்தில் பௌத்தம், தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு, சென்னை 2023.

4 மயிலை சீனி. வேங்கடசாமி பௌத்தமும் தமிழும், ஸ்ரீ சண்பகா பதிப்பகம், பாண்டி பஜார் சென்னை 17, 2010.

5. விக்கிப்பீடியாவில் பௌத்த சமயம் பற்றிய பல பதிவுகளும் கட்டுரைகளும்

6.https://theconversation.com/understanding-self-immolation-in-buddhism-after-wynn-bruces-earth-day-action-182007

7.முனைவர் பரமசிவன் தொ. அழகர் கோவில், பதிப்புத்துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை. 1989

8.தொ.பரமசிவன், அறியப்படாத தமிழகம், நற்றிணை பதிப்பகம் சென்னை, 2024.

9.முனைவர் செ. ராஜேஸ்வரி, சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்), சந்திரோதயம் பதிப்பகம், மதுரை, 2024.

10.முனைவர் செ. ராஜேஸ்வரி, மலைக்கோவில்கள் - சிவன் & விஷ்ணு, சந்திரோதயம் பதிப்பகம், மதுரை, 2025.

தேர்தல் பொருளாதாரம்

ச. அய்யம்பிள்ளை,

பொருளாதார துறை, மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

வயது வரம்பைத் தவிர, வருமானம், சொத்து, கல்வி போன்ற எந்தவிதக் கட்டுப்படுகளும் இன்றி, உலகிலேயே மிக அதிக வாக்காளர்களைக் கொண்டு, நீண்ட காலமாக ஜனநாயக முறைப்படி நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களை நடத்திவரும் நாடு, நம் நாடு என அறியும்போது மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. இருக்கின்ற பிரச்சனைகளோடு, பரந்த, பெரிய பல சவால்களைக் கொண்டுள்ள நம் நாட்டில், சில குறைபாடுகள் இருப்பினும், முடிந்தளவிற்கு நேர்த்தியாகத் தேர்தல்களை நடத்தி, முடிவுகளை வெளியிட்டு, அரசாங்கங்களை அமைத்து, நம் நாட்டுப் பொருளாதாரத்தைச் சிறந்த முறையில் செயல்பட வைப்பது, பாராட்டப்பட வேண்டிய ஒரு பெரிய சாதனைதான்.



வேட்பாளர்கள், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது வாக்காளர்கள் அருகில் வர, சந்திக்க, தேர்தல்கள் ஒரு வாய்ப்பைத் தருகின்றன. தேர்தல் வர ஓர் ஆண்டு இருக்கும்போதே; அரசியல் கட்சிகளுக்குள் பல மாற்றங்கள் வருகின்றன; புதிய கட்சிகள் முளைக்கின்றன; புதிய உறவுகள் மலர்கின்றன; பழைய உறவுகள் தளர்கின்றன; அரசியல்வாதிகளுக்கு மக்கள் மேல் பாசம் வந்துவிடுகிறது; இலவசங்கள் வழங்கப்படுகின்றன மற்றும் அறிவிக்கப்படுகின்றன; கடன்கள் மற்றும் உதவிகள் வழங்கப்படுகின்றன; விளம்பரங்கள் எல்லா ஊடகங்களிலும் சுவர்களிலும் பெருகிவிடுகின்றன; பணமும் பட்டுவாடா செய்யப்படுகிறது எனச் செய்திகள் வருகின்றன; அதைத் தடுக்க அல்லது குறைக்க தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி தேர்தலுக்கும் முன்பாக சுமார் இருபது நாட்கள் (போதுமா !) *Flying Squad Teams* மற்றும் *Static Surveillance Teams* வலம் வர ஆரம்பித்துவிடுகின்றன; மக்களுக்குத் தேர்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்சிகள், பேரணிகள் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன; வாக்குப் பெட்டிகளோடு அலுவலர்களும் வாக்குச் சாவடிக்குப் பயணிக்கின்றனர்; எங்கு பார்த்தாலும் தேர்தல் பற்றிய உரைவீச்சுக்கள்; உரையாடல்கள்; ஊர்வலங்கள், விவாதங்கள்; ஆடல்கள்; பாடல்கள்; ஒரே கொண்டாட்டம்தான். ஆனால், கொடுமை என்னவெனில், வாக்களிப்பதோடு, ஜனநாயகக் கடமை முடிந்துவிடுவதாக வாக்காளர்களும், வேட்பாளர்களும் நினைத்து, தேர்தலுக்குப்பின் ஓய்வு எடுக்க ஆரம்பித்துவிடுகின்றனர் (இடைத் தேர்தல் வந்தால் ஒழிய). பின்னர், ஐந்தாண்டுகளுக்கு மக்களும் அரசியல்வாதிகளும் ஒருவரை ஒருவர் குறை சொல்வதே வேலையாகிவிடுகிறது.

இந்த ஆண்டு (2026) ஏப்ரல் மாதம் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களிலும், பாண்டிச்சேரியிலும் தேர்தல்கள் நடந்தன (இக்கட்டுரை எழுதும்போது). அவற்றுள் ஏராளமான அலுவலர்களும், அரசியல்வாதிகளும், வேட்பாளர்களும், வாக்காளர்களும், பணியாளர்களும், ஈடுபடுத்தப்பட்டனர்; பொருளாதார, இயந்திரக் கட்டமைப்புக்களும் பயன்படுத்தப்பட்டன; ஏகப்பட்ட பணம் வாரி இறைக்கப்பட்டது; பலருக்குப் பல அசௌகரியங்களும் ஏற்பட்டிருக்கலாம்; வீண் செலவுகளும் அதிகரித்து இருக்கலாம். இவ்வாறாகத் தேர்தல்களால் பல பொருளாதார நிகழ்வுகள், நடவடிக்கைகள் சாதகமாகவோ, பாதகமாகவோ பாதிப்புக்குள்ளாகின்றன. அதுபற்றி, சில கருத்துக்களைப் பகிர்வதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

> *"ஓங்கி ஒளிதெரியும் ஊரெல்லாம் சத்தமெழும்*
> *ஆங்கேயாள் கூடும், அரும்பணமும் – தீங்குக்கே*
> *போகும், அதனால்தான் தீப்பிடிக்கும் நாளுக்கொப்*
> *பாகும் வரும்தேர்தல் நாள்".*

என ஒரு வெண்பா வடிவில் அமைந்த சிலேடைப் பாடலை சமீபத்தில் கண்டேன். யாப்பிலக்கணம் சரியோ, தவறோ தெரியவில்லை. ஆனால், தேர்தலால், பணம் வீணடிக்கப்படுவதாகவும் பல தீங்குகள் நிகழ்வதாகவும் பொதுவாகப் புரியப்படுகிறது; பேசப்படுகிறது; எழுதப்படுகிறது.

ஜனநாயகத்தின் பெருமைதனைப் பலர் புகழ்ந்துள்ளனர். உதாரணத்திற்கு, பொருளியலில் நோபல் பரிசு பெற்ற நம் நாட்டுக்காரர், அமர்த்யா குமார் சென், நாம் சுதந்திரம் பெறும் முன்பு, நம் நாட்டில் நிகழ்ந்த பல பஞ்சங்கள், அவலங்கள், இறப்புக்கள், இனி ஜனநாயக நாட்டில் நிகழ வாய்ப்பில்லை என ஜனநாயகத்தின் பெருமையினைக் கூறியுள்ளார். தற்போது அமெரிக்கா,

இஸ்ரேல், ஈரான் தாக்குதல்கள், மூன்றாம் உலகப் போராக உருவெடுக்காமல், பெருமளவுப் பாதிப்பை உண்டுபண்ணாமல், மக்களால் தேர்ந்தேடுக்கப்பட்ட நம் அரசாங்கங்கள் (இக்கட்டுரை எழுதும் வரையில்) சமாளித்துள்ளன. இக்கட்டுரை வெளிவரும்போது, சூழ்நிலை எப்படி இருக்குமோ என்கிற பயம் இருக்கத்தான் செய்கிறது; அதற்கும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட, அதிகமாக மனித உரிமை பேசுகிற, ஒரு வல்லரசு (!) நாட்டின் அதிபர்தான் காரணம்.

நம் நாட்டுத் தேர்தல் முறைகளில் உள்ள குறைகளைப் பலர் எழுதுகின்றனர், பேசுகின்றனர். தேர்தலில் போட்டி இடாமலேயே நீண்ட காலம் அமைச்சராக இருப்பது மற்றும் நிதிநிலை அறிக்கை தயார் செய்வது; ஒருவரே ஒன்றிற்கு மேலான தொகுதிகளில் போட்டி இடுவது; தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்றை ஏற்றுக்கொண்டு, மற்றவற்றில் மீண்டும் தேர்தல் நடத்துவதற்குக் காரணமாக இருப்பது; அதனால் அரசுக்கு மேலும் செலவையும் சிரமத்தையும் உண்டுபண்ணுவது; வேண்டுமென்றே போலியான வேட்பாளர்களை நியமனம் செய்துவிட்டுப் பின்னர் திரும்பப் பெறுவது; அரசின் செலவோடு, கணக்குக் காட்டாமல் சேகரித்த கட்சிப் பணம், கணக்கில் காட்டப்பட்ட சொந்தப் பணம், கறுப்புப்பணம் என ஏகப்பட்ட பணம், செலவு செய்தால்தான் வெற்றிபெற முடியும் என்கிற நிலைமையை உருவாக்குவது; ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, கண்டுகொள்ளாமல் போய் விடுவது; நீண்ட காலம் செய்ய முடியாத அளவிற்கான இலவசங்களை அளிப்பது, அறிவிப்பது; ஏராளமான கட்சியினர் (சில தொகுதிகளில் நாற்பது வேட்பாளர்கள்) போட்டியிடுவது (அமெரிக்காவில் இரு கட்சிகள் மட்டுமே போட்டியிடுகின்றன); போலியான கூட்டணிகள் வைத்துவிட்டு, தேர்தலுக்குப் பின்பு விலகிவிடுவது; குற்றப் பின்னணியுடன் போட்டியிடுவது மற்றும் வெற்றிபெறுவது (Milan Vaishnav எழுதியுள்ள "Why Crime Pays" எனும் நூலில், குற்றப் பின்னணி உள்ள பலருக்கு வாகாளர்கள் பெரும் ஆதரவு தெரிவித்து இருப்பதாகக் கூறியுள்ளார்); தேர்தலில் வெற்றி பெற்றபின், கட்சி மாறுவது போன்றவை அவற்றுள் சில. சற்று யோசித்தால், "இவை அனைத்துக்கும் பொருளாதாரக் காரணிகள் காரணமாக இருக்கின்றன; மற்றும், இவை அனைத்தும் பொருளாதாரத் தாக்கங்களைக் கொண்டுள்ளன" என்பது புரியும்.

புயல், வெள்ளம், நில நடுக்கம், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள், தவிர்க்க முடியாதவை. ஆனால், மனிதர்கள் உருவாக்குகிற தேர்தல் போன்ற ஜனநாயகத் திருவிழாக்களில் உள்ள குறைபாடுகளைக் களையும் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அதனால், தேர்தல் செயல்பாடுகளைப் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மனிதர்களால் உருவாக்கப்படுகிற போர்களால் விளைகின்ற அளவுக்கு இழப்புக்கள், சிரமங்கள் இல்லாவிட்டாலும், தேர்தல்களை நடத்துவதில் பல வகையான பொருளாதார இழப்புக்கள், சிரமங்கள் நிகழ்கின்றன என்பதில் ஐயமில்லை. தேர்தல் கூட்டங்களில் நிகழும் மனித இழப்புகளுக்குச் சரியான பொருளாதார மதிப்பைக் கணக்கிட முடியாது. ஆனால், சொத்துக்கள் மற்றும் பொருள்களின் இழப்புக்களை ஓரளவு மதிப்பிட முடியும்; மீண்டும் உற்பத்தி செய்யவும் முடியும்; அதன் மூலம், புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும் முடியும். எடுத்துக்காட்டாக, ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் போரில், தங்களின் பழைய போர்க்கருவிகளையும் கட்டமைப்புக்களையும் இழந்தாலும், புதிய போர்க்கருவிகளையும் கட்டமைப்புக்களையும், இன்னும் நவீனமாக உற்பத்தி செய்துகொள்ள இயலும்; வேலை வாய்ப்பும், வருவாயும் பெருகும்.

இதனைக் "creative destruction" என்று சென்ற ஆண்டு (2025) பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற ஓர் அறிஞர் கூறுகிறார். சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு, இரண்டு அணுகுண்டுகளைத் தாங்கி, இலட்சக் கணக்கான மக்களை இழந்த ஜப்பான், வெகு வேகமாக எல்லா நிலைகளிலும் முன்னேறியுள்ளது அல்லவா?.

தேர்தல்களினால் பணம் விரயம் ஆகிறது எனப் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஒருவருடைய செலவு, மற்றவருடைய வருவாய் ஆகும். தேர்தல் நடவடிக்கைகளின் மூலம், பலருக்கு இலவசமாய்ப் பொருள்களும் பணமும் கிடைக்கிறது; வாக்காளர்களுக்கு பொருள்கள் இலவசமாக அளிக்கப்பட்டால், பொருள் உற்பத்தி பெருகுகிறது; பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது; வாக்காளர்களுக்கு இலவசங்களை வழங்கும்போது, வாக்காளர்கள் சந்தோசம் அடைகின்றனர்; அரசியல்வாதிகளின் முடக்கி வைக்கப்பட்டு இருந்த பணம், மக்களுக்குக் கிடைக்கிறது; கறுப்புப்பணம் வெளியே வருகிறது; பணப் புழக்கம் அதிகமாகிறது; பொருளாதாரம் முடுக்கிவிடப்படுகிறது.

கிடைத்துள்ளதற்போதைய புள்ளிவிவரங்களின்படி. இந்தச்சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் போட்டியிடுகிற ஒரு பெண் வேட்பாளரின் அறிவிக்கப்பட்ட சொத்தின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகம்; அவருடைய கணவரும் தனியாக அந்த அளவுச் சொத்துக்குச் சொந்தகாரர். நம் நாட்டில் 93 விழுக்காடு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோடீஸ்வரர்கள். அரசு ஆணையின்படி, தேர்தலுக்காக, அரசு செய்கிற செலவு அல்லாமல், கட்சி செய்கிற செலவு அல்லாமல், ஒரு பாராளுமன்ற வேட்பாளர் ரூ. 95 இலட்சமும், சட்டமன்ற உறப்பினர் ரூ.40 இலட்சமும் செலவு செய்யலாம். ஆனால், ஒவ்வொரு வேட்பாளரும், குறைந்தது ரூ.50 கோடி முதல் 100கோடி வரை

செலவு செய்கிறார்கள் *(Have elections in India become plutocratic?, The Hindu, April 10, 2026, p,9).* ஒருவர், தான் ரூ. *20* இலட்சம் தேர்தலுக்காகச் செலவு செய்ததாகவும், *1.35* இலட்சம் வாக்குகள் பெற்றதாகவும், அது அந்தத் தொகுதியின் *12* சதவீத வாக்காகும் எனவும், இருப்பினும் தோல்வியையே தழுவினார் எனவும் வெளியிட்டுள்ளார்.

அரசியல் கட்சிகள் செய்கின்ற செலவிற்கும், பெறுகின்ற வாக்குகளின் எண்ணிக்கைக்கும் பெரும்பாலும் நேரடி உறவு இருப்பதாகவே தெரிகிறது. அதுபோல, அரசியல் கட்சிகள் பெறுகின்ற வாக்குகளின் எண்ணிக்கைக்கும், அவர்கள் பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து பெறுகின்ற, கணக்கில் காட்டப்படாத, பணத்தின் அளவிற்கும் நேரடி உறவு இருப்பதாகவே தெரிகிறது. இழப்புக்களைச் சந்திக்கிற நிறுவனங்கள் கூட, தவறான வழிகளில், சில அரசு சலுகைகள் பெறுவதற்காக, தேர்தல் பத்திரம் மூலம் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கியுள்ளது தெரியவருகிறது; இது அந்த நிறுவனங்கள் தம் பங்குதாரர்களுக்குச் செய்கிற பாவம் / துரோகம் ஆகும். வணிக நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவது *1960*கள் வரை நம் நாட்டில் தடை செய்யப்பட்டு இருந்தது; *15* ஆண்டுகளுக்குப் பின்னர், அரசியல் காரணங்களுக்காக அந்தத் தடை நீக்கப்பட்டது.

*2024*ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், பாரதிய ஜனதா கட்சி ரூ.*1,500* கோடியும், காங்கிரஸ் கட்சி ரூ.*600* கோடியும் செலவு செய்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்து இருந்தது. எல்லா மாநிலக் கட்சிகளும் செய்த செலவு ரூ. *3,400* கோடி என அறிவிக்கப்பட்டது. ஆனால், *Centre for Media Studies*ன் கணிப்புப்படி, இது ஒரு இலட்சம் கோடி ரூபாய் ஆகும். இவ்வாறாக, ஜனநாயகம் பண நாயகமாக மாறி வருவது சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனால், இப்போதுள்ள சமூக, அரசியல், பொருளாதார அமைப்பில் நம் நாட்டில், தேர்தல்களுக்காகச் செய்யப்படும் செலவுகளைக் குறைப்பதோ, அதன் பயன் மக்களுக்குச் சென்று சேராமல் தடுப்பதோ, அவ்வளவு எளிதல்ல என்றே நிபுணர்கள் எழுதுகிறார்கள்.

வாக்காளர்களுக்கு இலவசமாகப் பொருள்களையும் பணத்தையும் வேட்பாளர்கள் கொடுப்பதைத் தவிர்க்க (குறைக்க), தேர்தல் தேதி அறிவித்தது முதல், தேர்தல் நாள் வரை

(தோராயமாக இருபது நாட்கள் மட்டும்) Flying Squad Teams மற்றும் Static Surveillance Teams பணியில் அமர்த்தப்படுகின்றனர்; ஆனாலும், அது எந்தளவுக்கு எதிரபார்க்கிற பலனைத் தரும் என்பது புரியவில்லை. இலவசங்களைக் கிண்டல் செய்த, செய்கிற அரசியல் கட்சிகள், அதற்கும் மேலான இலவசங்களை அளிப்பதையும் காண முடிகிறது. இலவசங்களைப் பெறுபவர்கள் இன்பம் அடைவதையும், பெற இயலாத சிலர் எரிச்சல் அடைவதையும் எளிதாகக் காண முடிகிறது. எது இலவசம், எது மக்கள் நல மேம்பாட்டுச் செயல், என முடிவு செய்ய முடியாமலும் இருக்கிறது.

மேலே, கூறப்பட்ட குறைபாடுகளைக் களைவதில் வாக்காளர்களுக்கும் மக்களுக்கும் ஒரு பெரிய பங்கு உண்டு என்பது அவ்வளவாகப் பேசப்படுவது இல்லை. வாக்குகளை அளிப்பதோடு ஜனநாயகப் பணி முடிந்துவிடுவதாக வாக்காளர்கள் கருதுவதாகத் தெரிகிறது. அது தவறு. மக்களுடைய ஆதரவில்தான் அரசாங்கம் இயங்குகிறது; மக்களுடைய உழைப்பில்தான் பொருளாதாரம் வளர்கிறது. அரசாங்கத்திற்கு வருவாய் அளிப்பவர்கள் மக்கள்; செலவு செய்பவர்கள் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள். அந்த அரசியல்வாதிகள், நம் நண்பர்களாகவோ, உறவினர்களாகவோதான் இருக்கிறார்கள். எனவே, பொதுவாக அரசாங்கத்தையும் அரசியல்வாதிகளையும் மட்டும் குறை கூறுவது சரியல்ல என்பதும் புரியப்படவேண்டும்.

இந்த ஆண்டு தமிழ்நாட்டுத் தேர்தல் நிலவரங்கள் மிகுந்த திகைப்பைத் தருகின்றன. இந்த ஆண்டு, தேர்தல் களத்தில் ஒரு புதிய ஜல்லிக்கட்டுக் காளை புகுந்து, ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது; நடிகர்களைப் பார்க்க சில பெண்கள் ஏங்குவதும், நடிகைகளைப் பார்க்க சில ஆண்கள் ஏங்குவதும் தமிழகத்தில் புதியதல்ல. ஆனாலும், இப்போது காணப்படுகிற கூட்டம் பலருக்கு அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும், ஆச்சரியத்தையும் தருகிறது என்பதில் ஐயமில்லை. மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5.67 கோடி; மொத்த தொகுதிகள் 234; மொத்த வேட்பாளர்கள் 4,600க்கும் மேல்; மொத்த வாக்குச்சாவடிகள் 75,035; மொத்த Flying Squad Teams 2,106; Static Surveillance Teams 2,106. இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கான செலவுகள், வாகனங்கள், வாக்குப் பெட்டிகள், விளம்பரங்கள்..... என அரசுக்கும் அரசியல் கட்சிளுக்கும், வேட்பாளர்களுக்கும் ஏகப்பட்ட செலவு.

அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்குள் நுழைந்து பார்த்தால், பலர் மது மயக்கத்தில் இருக்கிறார்கள்; கூட்டம் முடிந்த பின், ஒரு தொகை கிடைக்கும் என்கிறார்கள்; கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு ஒரு "நல்ல" கமிஷன் கிடைக்கும் என்கிறார்கள். இவ்வாறாகச் சிலருக்கு செலவும், பலருக்கு வருவாயகவும் அரசியல் கூட்டங்கள் முடிகின்றன.

தேர்தலுக்குப் பின்பு, தேர்தல்களின் பலன் சரிவரக் கிடைக்கவில்லை எனில், அதற்கு மக்களும், வாக்காளர்களும், வேட்பாளர்களும் காரணமாக இருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது. மக்கள் வாக்களிப்பதோடு நின்றுவிடாமல், அவர்களும் தொடர்ந்து ஜனநாயகப் பணியாற்றவேண்டும்; அரசு செய்யும் பணிகளைக் கவனிக்க வேண்டும்; ஆராயவேண்டும்; நிறை-குறைகளைப் பேசவேண்டும்; எழுத வேண்டும்; குறைகள் இருப்பின், அவற்றைச் சரி செய்ய முயலவேண்டும்; எல்லாவற்றிற்கும் அரசே பொறுப்பு; எல்லாவற்றையும் அரசே செய்யவேண்டும் என ஒதுங்கிவிடுவது, ஜனநாயகக் குற்றம் ஆகும். அவரவர், தம்மால் முடிந்த நல்ல செயல்களைத் தொடர்ந்து செய்யவேண்டும். ஊர் கூடினால்தான் தேரை இழுக்க இயலும்.

தமிழ்ப்புலவர் சரித்திரம் - சயங்கொண்டான்

பரிதிமாற் கலைஞர்

இப்புலவர் பெருமானது பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு முதலியனவற்று ளொன்றும் நன்கு புலப்படவில்லை. ஆயினும் யாமாராய்ந்தமட்டில் தெளிந்தனவற்றை யீண்டெடுத்துரைக்கின்றாம். இப்புலவர் பெருமான், உபயகுலோத்தமனெனவும், அபயனெனவும், சயதுங்கனெனவும் பல்வகைய சிறப்புப் பெயர்களும் பெற்ற விசயதர சோழனது வாயில் வித்துவான்கடந் தலைவன். ''தெண்ணீர் வயற்றொண்டை நன்னாட்டு சான்றோருடைத்து,'' என்ற மூதுரையை மனக்கொளாது தென்னாட்டுப் புலவருட் சில்லோர் போந்து புரிந்த வாதப் போரின்கண் தந்தம் புலவர்பிரான் வென்றமை காரணமாகச் சயங்கொண்டானெனப் பட்டப் பெயர் பெற்றுத் திகழா நிற்புழி, விசயதரன் வடகசிங்கரைத்தொலைத்துவாகையந்தார்மிலைந்துபோந்து, சயங்கொண்டானை நோக்கி, (யானுஞ் சயங்கொண்டானாயினேன்;' என்றான். எனவே, சயங்கொண்டான் சயங்கொண்டான் மீது பரணி நூற்புனைவான்,' என்று நம் பாவலர் கோமான் கூறிச் சென்று சின்னாட்களுள், 'கலிங்கத்துப் பரணி' என்னும் நாலினை யியற்றி யரசளரவைக்களத்தே பன்னூற் புலவர்முன் பகர்ந்து அரங்கேற்றிய கருதி, அவ்வாறே செய்யாநின்றுழி, பரணிநூற் பாடல்களைப் பரிவு கூர்ந்து செவிமடுத்து வீற்றிருந்த வேந்தர் வேந்தன் ஒவ்வொரு தாழிசையி னிறுதியிலு மொவ்வொரு பொற்றேங்காய் பரிசிலாவுருட்டுபு தனக்கு அவ் வித்துவான் மீதும் அவனது நாலின்மீதுமுள்ள அன்பினையு மார்வத்தினையும் வெளிப்படுத்தானென்று கூறுப.

இக்கூற்றினை மெய்யெனக் கொண்டக்காற் சயங்கொண்டானென்பது கலிங்கத்துப் பரணியாக் கியோன் தியற்பெயரன்றெனல் சொல்லாமலே விளங்கும்.

சமயம் :

இனித் ''திருவுடைமன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்,'' என்ற திருவாய்மொழியை யொரு தூய்மொழியாக்கொண்டு விசயதரனை நேரே திருமாலெனவே கூறுகின்றனனேனும், இப்புலவர் பெருமானது சமயஞ்

சைவமெனலே யமைவுடைத்தாம். அஃது கலிங்கத்துப் பரணியிற் கூறப்பட்டிருக்கும் முதற் செய்யுளாகிய கடவுள் வாழ்த்தினாற் றெளிவு பெறக்காண்க. அது வருமாறு:

புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
றெழில்காட்டப் புவன வாழ்க்கைச்
செயல்வண்ண நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தைசெய்வாம்.
அருமறைக ணெறிகாட்ட வயன் பயந்த
நிலமகளை யண்டங் காக்கு
முரிமையினிற் கைப்பிடித்த வுபயகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே.

என்னை ? கலிங்கத்துப்பரணியில் திருமான் முதலிய ஏனைய தேவர்க்கு முன்னர்ச் சிவபிரானது வணக்கங் கூறப்பட்டிருத்தலானும், உமாதேவி விநாயகர் முருகவேளாகிய இவர்கட்கெல்லாம் தனித்தனி வெவ்வேறு துதி கூறப்பட்டிருத்தலானும், உமாதேவியினது அம்சமாகிய சத்தமாதர்களது வணக்கங் கூறப்பட்டிருத்தலாலும் இவருடைய சமயஞ்சைவமென அறியக் கிடக்கின்றது.

இஃதிவ்வாறாகவுஞ் சிலர் நான்முகன் மாலாதி கடவுளர்க்குந் துதியுடன் கூறுதலிற் சைவ சமயத்திற் பற்றுடையானல்லனென வாய் கூசாது மொழிவர். ஏனைக்கடவுளர்க்கும் துதி கூறுதல் சைவசமயிகளாயினார்தம் மீயல்பென்பதும் வைணவராதி புறச்சமயிகளே அவ்வாறு சிவபெருமானாதி கடவுளர்க்குத் துதிகூறாரென்பதும் இருதிறத்தாரது நூல்களையும் தூக்கி யொப்ப வாய்குநர்க்கு இனிது விளங்கும். அதான்றியும் சயங்கொண்டான் சைவனே யென்பது, சிவமூர்த்தங்கட்கெல்லாந் துதியுரைத்தமையே யன்றி யம் மூர்த்தத் துதிகளில் விசேடப் பற்றுக்காட்டு மாற்றலுடைய சொற்களைப் பெய்துரைத் தமையினானே பசுமரத்தாணி யறைந்தென காட்டப்படும். இனி யித்துணையு முற்றுநோக்ககில்லாது சயங்கொண்டான் சைவனல்லன் சமரச நன்னிலை யுடையானென அன்னார் துணிந்த துணிவு அறிவாளர் கழகத்து நகையுண்டு அழியுமென்றறிக.

காலம் :

இது கிடக்க. இனிச் சயங்கொண்டான் இருந்த காலத்தினை வரைந்து சுட்டிய புகுகின்றாம். ஒரு சாரார் இவன் முன் காலம் கடைச்சங்கத்தார் காலத்துக்குப் பிற்பட்ட தென்பதும் கம்பர் காலத்திற்கு முற்பட்ட தென் பதும் மட்டுங் கூறலியலுமே யன்றி யின்ன யாண்டுகடாம் என்று வரையறுத்துக் கூறுதல் யாவர்க்கும் முடியாதென்பாராயினார். மற்றொரு சாரார் சிலா சாதா சரித்திர வாராய்ச்சியின்படி விசயதரன் கலிங்கத்தை வென்ற - காலம் கி. பி. 1066- ஆம் ஆண்டிற்கும் 1113-ஆம் ஆண்டிற்கும் உட்பட்ட தெனப் புலப்படுகின்றதென்பர், ஆயின் ஏறக்குறையச் சாலிவாகன சகாத் தம் 1060-ஆம் யாண்டாகும். ''எண்ணிய

சகாத்தமெண் ணூற்றேழன் மேல்" எனுஞ் செய்யுளை மெய்யெனக் கோடலாமெனில், அதில் கூறியாங்குக் கம்பர் காலம் 807-ஆம் யாண்டாம். அற்றேல் இந் நாலாசிரியனது காலம் கம்பர் தங்காலத்திற்கு இருநூற்றைம்பதியாண்டு பிந்திய தாம், இக் கால வரையறை, ஏனைய சான்றுகளோடு முரணுபு காலத்தை இன்னதெனச் சுட்டவொண்ணா வழியினிற் சிலர் அமையுய்த்து இடர்ப்படுத்தும் ; என்னை? கலிங்கத்துப் பரணியினது நடை கம்பர் காலத்தினரும் அவர்க்குப் பிந்திய காலத்தினரும் ஆயவரது நடைகளைப் போலாது வட சொற்கள் மிகுதியுங் கலவாத செந்தமிழ் நன்னடையிற் செய்யப்பட்டுச் சங்கச் செய்யுளாய சிந்தாமணி சூளாமணிகளோடு சேர்த்தெண்ணப்படத்தக்க பெருமை வாய்ந்து விளங்குதலினென்க' வென்பர், அல்லதூஉம் அடியார்க்கு நல்லார், கலிங்கத் துப்பாணிச் செய்யுட்களுட் சிலவற்றைத் தமது சிலப்பதிகார வுரையின் கண் மேற்கொண்டதூஉம் அந்நூல் கம்பர் காலத்தினுக்கு முன்னரே பயிலப்பட்டு வந்ததென்பதற்குப் போதிய சான்றாமெனவும் அன்னூர் கூறுப.

இனி மெய்ம்மை வழியா னாராயப்புக்குழி, அந்நூலின் கண்ணே சோழ ராசரது தலைநகராகக்காஞ்சிமாநகரினைக்கூறலானேஇஃதுஉறந்தைதஞ்சைகளினின்றும் விலகி அரசனது வாசத்தானம் காஞ்சியாயின பின்னரே கலிங்கத்துப்பரணி யாக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனக் கோடாலியலும்.

அன்றியும், கருணாகரத் தொண்டைமான் சென்று கலிங்கநாட்டை வென்றன்னெனக் கூறுதலிற் சோணாட்டினின்றுந் தொண்டைநாடு வேறு பிரிந்ததூஉம் இக்காலத்தின் கண்ணேயாம் என்பதும் ஏற்படுகின்றது. இக் காரணங்களினானே முன்னர்க்கூறிய சிலாசாதா பரிசோதகர் கூறாநிற்குங் காலக்கணக்கே யொருவாறு வலியுறுகின்றமை காண்க, இத்துணையும் வாய்வது கம்பர் தங்காலஞ் சாலிவாகன சகாத்தம் 807-ஆம் யாண்டென்பது நிலை நின்றக் காலேயாம். மற்று ஆங்கில மொழியின்கண் அச்சிட்டுப்போ தரும், இந்திய புராதன கலைஞன் என்னும் மாதாந்தப் பத்திரிகையினாற் கி. பி. 1063-ஆம் யாண்டு பட்டத்திற்குப் போந்த இராசேந்திர சோழனிரண்டாவ னெகன்ற குலோத்துங்க சோழன் முதலாவலும், கி. பி 1127-ஆம் பாண்டு பட்டமெய்திய குலோத்துங்க சோழனிரண்டாவதுமென்ற வீரரசர் கூறப் பட்டுளர். அவர் தம்முட் குலோத்துங்க சோழன் முதலாவனது காலமே நமது கம்பர் தங் காலமுமே யாமென்பது யாவர்க்கு மொப்பு முடிந்ததாம். [1]

ஆகவே கம்பரது காலம் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதி யென்பது தானே போதரும். இனிக் கலிங்கத்துப் பரணியின் செய்யுணடை கம்பரது செய்யுணடையினும் எளிதாகவுஞ் சொன்முடிபு பொருண்முடிபுகள் செவ்வாக வாய்க்கப் பெற்றதாகவும் வடசொற்கள் பெரிதும் விரவப்பெற்றதாகவு மிருத்தலிற் கம்பர் காலத்திற்குப் பிந்தியவனே சயங்கொண்டானென நிராடங் கடமாய்ப் பெறப்படுதலறிக. மேலுங் கலிங்கத்துப்பரணியின் களம்பாடிய பகுதியில் 83-ஆஞ் செய்யுளின் கட் 'குலோத்துங்கச் சோழனைப் பாடீரே; யெனக் கூறுதலி

னீண்டைக் கூறிய குலோத்துங்கன் கி.பி. 1127-ஆம் யாண்டி" லாசுரிமை யெய்திய மன்னனே யென்க.

இவன் குலோத்துங்கன் முதலாவனது பேரனாமா றும் விசயதர சோழ னாமாறு முய்த்துணர்க, எனவே சயங்கொண்டான து காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டென்பது பெற்றாம்.[2] இது நிற்க.

காலிங்கத்துப் பரணியினை இயற்றினார் ஒட்டக் கூத்தரென்பது ஒரு சாரார் துணிபு. இது யாமேற் கூறிய காரணங்களினானே சிதையுண்டொதுங்கு மாறுணர்க. அன்றியும் ஒட்டக்கூத்தரது செய்யுளாடையும் இந்நூலினது செய்யுணடையும் வேறுபடுமாறு மோர்ந்தறிக. மற்றும் ஒட்டக் கூத்தர் செய்த பரணிகளும் வேறுள. அவை அண்டத்துப் பரணியும் பிறவுமாம். இனிக் கூத்தன் கவிச்சக்கரவர்த்தி யென்ற தமிழ்ப் புலவர் செய்த தக்கயாகப்பரணி யென்றொரு நூலுளது. இக்கூத்தன் கவிச்சக்கரவர்த்தியே யொட்டக் கூத்தரெனச் சிலர் கூறாநிற்பர். அஃதெவ்வாறாயினுமாகுக.

கலிங்கத்துப் பரணியைப்போலவே யதுவும் பகுக்கப்பட்டுச் சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து திகழ்கின்றது. அதற்கோரரிய வரும் பதவுரையுமுளது. அதனையிப்பரணியினோடு தூக்கியாய்குநர்க்கு இரண்டனது நயங்களும் ஏற்றமு மினிது புலப்படும். விரிவஞ்சி யாமவ்வாறு செய்யாது விடுத்தனம்.

கலிங்கத்துப் பரணியின் கண்ணே பண்டையரசர்களது சரிதங்கள் பல கூறப்படுதலின் அவையனைத்துத் தக்கவாறு ஆராயப்படிற் சோழராசர்களைப் பற்றி யொரு சரித்திரம் வகுப்பதற்குப் பெருந்துணைக் கருவியாயிருக்கு மென்பதுணர்க.

கவித்திறமை :

சயங்கொண்டானது பாக்களனைத்தும் சுருங்கச் சொல்லலாதிய பத்தழகுமுள்ளனவாய் விளங்குகின்றன. சொன்னயமும் பொருணயமும் பாட றொறுங் காணலாம். இவன் நான் பாக்கள் சந்தவின்பம் பெரிதும் பயக்கும். 'இழுமெனு மோதையினொழுகுறு மருவிபோல்' இவன்றன் செய்யுட்க ளெல்லாஞ் செல்லுகின்றன. குறிப்புப் பொருளும் இறைச்சிப் பொருளும் உள்ளுறையுவமங்களும்ஆங்காங்குப் பாடல்களிற்காணப்படும். சமயோசிதமாகச் சொற்களைப் பெய்தலும், கற்பனை செய்தலும், வீரம், வெகுளி, அவலம், அச்சம், காமம் முதலிய சுவைகளும், அச்சுவைகட்கேற்ற ஓசை யுடைமையும், எதுகை, மோனை நியமம் பிழையாமையும், இடர்ப்பட்ட சொன்முடிபு பொருண்முடிபுக ளில்லாமையும், இன்ன மிவைபோல்வன பிறசிறப்புக்களும், அந்நூலின்கண் மிகவுமுள்ளன, மேலும் இப்பாணி யாவராலும் மேற்கோளாக எடுத்துப் பாராட்டத்தக்க சிறப்பு வாய்ந்த தாமாறு வெள்ளிடை மலையென விளங்குதலறிக, கலிங்கத்துப் பரணியின் கண்ணே 54-சந்தபேதங்கள் காட்டப்படுகின்றன.

இதனாராய்ச்சியினாற் பண்டைக் காலத்து ஒழுக்க வழக்கங்களும் பின்னரறியக் கிடக்கும்.

இவை பற்றியன்றே :

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்
சயங்கொண்டான் விருத்த மென்னு
மொண்பாவி லுயர் கம்பன் கோவையுலா வந்தா
திக் கொட்டக் கூத்தன்
கண்டாய கலம்பகத்திக் கிரட்டையர்கள்
வசைபாடக் காளமேகம்
பண்பாய பகர் சந்தம் படிக்காசு
லாதொருவர் பகரொ ணாதே,'

என்று பிற்காலத்தாராய பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் சிறப்பித்தெடுத் துரைத்ததூம் என்க.

குறிப்புகள்:

[1] The Indian Antiguary (Pages 296--299) October 1894.

[2] கலிங்கத்தை வென்று பரணிகொண்டவன் விஜயதரன் என மறு பெயர் பூண்ட முதலாம் குலோத்துங்கனே யென்பதும், அவன் காலம் கி. பி. 1070 முதல் 1118 வரை யென்பதும், எனவே சயங்கொண்டான் காலமும் இதுவே யென்பதும் : பின்னெழுந்துள்ள ஆராய்ச்சிகளாற் பெறப்படுகின்றன.

கம்பர் காலத்தைப் பற்றித் தற்போது தமிழ்நாட்டிற் பல அபிப்பிராயங்கள் பாவியுள்ளன. எண்ணிய சகாத்த மெண்ணாற்றேழன் மேல், என்ற கவியின் ஆதாரத்தைக்கொண்டு அவர் காலம் கி. பி, 885 என் று ஒரு சாராரும், கி, பி. 1118 முதல் 1130 வரை சோணாட்டில் அரசு புரிந்த விக்கிர சோழன் காலத்தவர் - என்று மற்றொரு சாராரும் கூறுவர். ஆயினும், சோழமண்டல சதகத் தக் தலைப்பு வரலாற்றை நம்பி, கம்பர் இரங்கல் உருத்திரனைப் பாடி, திருப்பதால், அவர் பன்னிரண்டாம் காற்றாண்டின் கடைக்காலைச் சார்ந்தவர் என்று மகா வித்துவான் ஸ்ரீ ரா. ராகவையங்கார் அவர்கள் செந்தமிழிற் பல ஆராய்ச்சிக் குறிப்புகளோடு வரைந்துள்ளார்.

வாழ்ந்து பழகிய இல்லம் : வாழ்விட வரைவியல்

மு. பழநிச்சாமி

நூலக அதிகாரி– பணி ஓய்வு
நாகமலை, மதுரை –19

முன்னும் பின்னும், ஓங்கிப் பெருகி உயர்ந்து வளர்ந்து, மேனிக்குச் சுகந்தந்து மென்மையாக வீசி வரும் வேப்பங்காற்று

காலை எழுந்தவுடன், காணும் கண்ணிற்குப் பூத்து மலர்ந்து சிரித்துச் சுகம் தரும் செம்பருத்தி

நெஞ்சம் மகிழ, சரஞ்சரமாய்த் தொடுத்து மலர்ந்த மஞ்சரளியின் குளுமை

வெள்ளை வெளேரனரெனக் காட்சி தந்து மலரும் பூக்களை, தலையிலும் தோளிலும் தாங்கி மலரும் நந்தியாவட்டைச் செடியின் சுகந்தரு காட்சி

இடதுபுறப் பக்கத்து வீட்டில் வேரூன்றி வளர்ந்து பூத்துக் குலுங்கி, நம் பகுதியில் அவைகளைக் கொண்டு வந்து கொட்டும் பன்னீர் புஷ்பங்களின் முத்துச் சிதறல்கள்

பின்பகுதியில், தாளுண்ட நீரைத் தலையில் தரும் தென்னை மரக் காட்சியின் மாட்சி

பின்புறக் கொல்லையில், வளர்ந்து விரிந்த வாழை இலை தரும் கிளர்ச்சிக் காட்சி

கிணற்றோரத்தில், பூமித்தாயின் பரிசாக, கீரையாய் காயாய் காய்த்துக் கொடுக்கும் முருங்கை மரத்தின் மேலதிக அழகுக் காட்சி

தின்னத் தின்ன இனிமை தரும் பழத்தை, எய்யாமல் காய்த்து கொடுக்கும் கொய்யாவின் தாராளம்

பார்த்தாலே மனதைப் பூரிக்க வைக்கும், மாதுளம் பழத்தின் மினுமினுப்பு

சுவையில் சற்று உவர்ப்புடனும், உருவத்தில் சின்னஞ்சிறு பழமாய் சிவந்த நிறம் கொண்டு உருண்டு திரண்டு நிற்கும் செர்ரி பழத்தை விளைவித்துத் தரும் மரத்தின் குளிர்ந்த காட்சி

பக்கத்து வீட்டு மாமரம், இடையிலுள்ள சுற்றுச் சுவரையும் தாண்டி, எங்கள் வீட்டுப் பகுதிக்குக் கொண்டு வந்து தரும் மாங்கனிகளின் மாட்சி

இடம் கொள்ளாமல் அடர்ந்து வேரூன்றி வளர்ந்து, சுற்றுப்புற சூழலுக்குத் தாயாகி, கொள்ளக்குறையா மருத்துவக் குணங்களை அள்ளி வழங்கும் துளசியின் தரிசனம்

வீட்டைச் சுற்றிச் சுற்றி வளரும் கருவேப்பிலைக் கன்றுகளின் பசுமையான இலைகளின் காட்சி

தொட்டியில் வளரும் ஓமவல்லிச் செடியின் சுகந்த மணம்

இலை, பூ, காய், வேர் என அனைத்தும் மருத்துவ குணம் பெற்று, முள்ளுடன் படர்ந்து வளைந்து வளர்ந்து வரும் தூதுவளை

பச்சைப பசேலென இலை விரித்து, குத்துச்செடியாய் அடர்ந்து வளரும் லட்சைகெட்ட கீரையின் இச்சை தரும் காட்சி

பையப் படர்ந்து வரும் கிளைக் கொடியில், மெல்லிய அசைவாட்டம் பெற்றுத் திகழும் பசலைக் கீரையின் நடனக் காட்சி

தேன் எடுக்கத் தெரிந்த தேனீயின் ரீங்காரம்,

மரத்தில் அமர்ந்து வருவிருந்து வருவதைக் கண்டு கூறும் காக்கைக் குரலோசை

சுற்றுச்சுவரேறி வந்து, குப்பையைக் கிளறிப் போட்டு, மீளாத் தொல்லை தரும்,பக்கத்து வீட்டுக் கோழியும் சேவலும் சேர்ந்து கொக்கரிக்கும் இன்னோசை

பக்கத்து வீட்டு மாமரத்தில் குடியிருந்து, அதிகாலையிலேயேட குந்திக் குரலெடுத்துக் கூவும் குயிலோசை

மதிய உணவு வேளையில், வழக்கமாக, தூணின் தலையில் வைக்கும் உணவுப் பண்டங்களை ருசிக்க வரும் பறவைகளின் துள்ளல் ஓசை

மீனு, மீனு, என்று கூவி, மீனை விற்கக் கொண்டு செல்லும் மாதரசியின் இசைவான இன்னோசை

கிணற்று மேட்டில் காயவைத்த தின்பண்டங்களைக் கொரித்துத் தின்ன வரும் அணிலின் அன்புப் பார்வை

தந்திரமாய் வீட்டு வாசலில் வந்து படுத்துப் பதுங்கி யிருந்த நாயின் ஓட்டம்

துவைத்த துணி மணிகளைக் காயப்போடும் கயிற்றின் வழியே சாரை சாரையாக வந்து போகும் கடியெறும்புக் கூட்டம்

தத்தித் தத்தி வந்து, கொஞ்சிக் குலவும் மைனாக்களின் கிளர்ந்தெழச் செய்யும் அன்புக் காட்சி

பதுங்கிப் பதுங்கி, களவு கண்டு வரும் திருட்டுப் பூனையின் பயந்த பார்வையும் மயிர்ச் சிலிர்ப்பும்

இவ்வாறான இயற்கைச் சூழலுடன் உணர்வொன்றி வாழும் வாழ்விடம் மட்டுமன்று; முழுச் சுதந்திரத்துடன் வாழும் வாழ்விடம் தான் "வாழ்ந்து பழகிய இல்லம்"

இத்தகைய இனிய வாழ்வையும் வசதியையும் கொண்ட இல்லத்தை விட்டு விட்டு, முற்றிலும் புதிய சூழ்நிலையில் பிற நாட்டிற்குச் சென்று வாழும் பொழுது அங்கு இவை கிடைக்குமா?

இன்றைய சூழலில் பெற்றெடுத்த பிள்ளைகள், பிரான்ஸ் என்றும் ஸ்விட்சர்லாந்து என்றும் ஜெர்மனி என்றும் ஆஸ்திரேலியா என்றும், அமெரிக்கா, கனடா என்றும் இவ்வாறான பல்வேறு இடங்களில் பரவி வாழ்கிறார்கள். உள்நாட்டில் கூட, பாம்பே என்றும் டில்லி என்றும் கல்கத்தா என்றும் பெங்களூர் என்றும் இன்னும் பிற ஊர்களில் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரின் பாதுகாப்புக் கருதி, அவர்கள் மீதுள்ள பரிவு காரணமாக, அன்பு காரணமாக, அவர்களது வயது மூப்பினை மனதில் கொண்டு, அவர்களைத் தங்கள் இடத்திற்குக் கூட்டி வந்து தங்க வைக்க விரும்புகிறார்கள். இது ஏற்கத்தக்கதொரு சரியான செப்பமான முடிவுதான். எனினும் பெற்றோர்கள், பல வேளைகளில் அவர்களின் வேண்டுகோளை ஏற்கவும் இயலாமல் மறுக்கவும் முடியாமல் சூழ்நிலையின் அழுத்தத்தால் அங்கு சென்று அவர்களுடன் தங்கி வாழ நேர்கிறது. அங்கு சென்று அவர்கள் இடத்தில் தங்கி இருக்கும் பொழுது, வாழ்ந்து பழகிய தங்கள் இல்லத்தின் இனிய நினைவுகளை, ஏக்கமும் இயலாமையும் கலந்த உணர்வுகளோடு அவற்றை நெஞ்சில் சுமந்து கொண்டு வாழ்கிறார்கள்.

நாற்பது ஐம்பது ஆண்டுகள் தங்கி வாழ்ந்த வாழ்விடத்தை விட்டு விட்டு, இவ்வாறு பிற இடத்திற்குச் சென்று வாழ்வது காலத்தின் கட்டாயம். அவ்வாறு அங்கு சென்று வாழும் பொழுது அந்த இடத்திற்கும் அவர்களோடு பொருந்தி வாழும் வாழ்விற்கும் ஒத்திசைந்து போகும் வகையில், தங்கள் உணர்வுகளை வசப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த உணர்வுடன் அங்கு வாழ்ந்தால், அது தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளின் குடும்பத்திற்கும் ஒளியூட்டி இன்பம் தரும் ஒன்றாகும்

திருவாசகம் எனும் தேன்

டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்
ஆராய்ச்சியாளர், புதுவை

"திருவாசகத்துக்கு உருகாதார், ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பது தொடர்ந்து வழங்கி வரும் ஒரு பழஞ்சொல் ஆகும். அப்பரது - சம்பந்தரது தேவாரங்களின் பதிகங்களில் காணாத ஒரு ஈரத்தை, ஒரு நெகிழ்வை, அதிகக் கசிவை மாணிக்கவாசகரது திருவாசகத்தில் காணமுடியும். திருவாசகப்பாடல்கள் உருகி உருகிப் பாடப் பெற்றமையால், படிப்பவரையும் கேட்பவரையும் மனம் உருகச்செய்யும். வலிமை பெற்றது. அழுதால் பெறலாமே என்று உருகிக்கூறுவார் உணர்வின் வலிமை அறிந்த மணிவாசகப் பெருமான்.

மேலைநாட்டவர் தம் மதத்தினைப் பரப்பவே தமிழைப் பயின்றனர். டாக்டர் ஜி.யூ.போப்பும் அவர்களைப் போலவே தம்முடைய மதத்தைப் பரப்பவே தமிழ் கற்றாலும், சைவத் தமிழை, குறிப்பாகத் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மேலைநாட்டவர்க்கு அறிமுகப்படுத்தினார்.

திருவாசகத்துக்கு மேலும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. சிவன் தன்னுடைய சிந்தையிலே நின்றதனால், அவனுடைய திருவருளாலே அவனுடைய திருத்தாள்களை வணங்கி, மாணிக்கவாசகர் உரைத்த திருப்பாடல்கள் அவை.

அவற்றை சிவபெருமானே நேரில் வந்து, தன்னுடைய திருக்கரத்தினால் எழுதி, அந்நூலின் திருக்கடைக் காப்புப்பகுதியில், "இவை எழுதியது, அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து" என்று கையெழுத்திட்டு அருளிய நூல்; இத்தகைய பெருமைகள் பல கொண்ட இந்த நூலை நம்பியாண்டார் நம்பி எனும் மாமனிதர் , மாமன்னர் இராஜராஜன் துணைகொண்டு , தில்லைக் கோயிலில் இருந்து மீட்டு மக்களிடம் கொண்டு சேர்த்தாலும் ,அவைகள் ஓலைச் சுவடிகளில் இருந்தமையால் அவை பெருவாரியான மக்களைச் சென்றடையவில்லை .

தமிழ்க் கல்வி பரவிய வரலாற்றில் அச்சு நூல்களின் உருவாக்கம் அறிவுத்தேடலில் ஒரு புதிய பரி மாணத்தைத் தந்தது. ஏறத்தாழ கி.பி. 1800 வரைக்கும் ஏடுகளைச் சார்ந்தே தமிழ்க்கல்வி பயிற்றுவித்தல் அமைந்திருந்தது. பழந் தமிழறிஞர்கள் ஏடுகளின் வாயிலாகவே தம்புலமையை வளர்த்துக் கொண்டு அடுத்த தலைமுறைக்கு அதனைப் பதிவு செய்தனர்.

இந்தச் சூழலில் முதன்முறையாக திருவாசகத்தை அச்சில் பதிப்பித்தவர் திரு சிவக்கொழுந்து தேசிகர். அச்சில் பதிப்பித்தல் என்பது அத்துணை எளிய காரியம் அன்று. ஏட்டுச் சுவடியாக இருந்த திருவாசகத்தை 1834-ஆம் ஆண்டில் முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரே.

ஏடுகளில் இருந்த இத்தகைய அரிய தமிழ்ச் செல்வங்களை அப்போதைய தமிழ் அறிஞர்கள் அச்சு வடிவில் நூலுருவாக்கம் செய்யாமல் இருந்திருந்தால் எல்லோருக்கும் இத்தகைய கல்வி பரவலாகச் சென்று சேர்ந்திருக்காது. நமக்கெல்லாம் பயிலும் வாய்ப்பு கிட்டியிருக்குமா என்பது ஐயமே .

சுவடிகளினின்றும் அவற்றைப் பதிப்பிப்பதற்குப் புலமையும் பொறுமையும் கடின உழைப்பும் இன்றி யமையாதன. பழஞ்சுவடிகளில் ஒற்றெழுத்துகளுக்குப் புள்ளி இருக்காது. நெட்டெழுத்தைச் சுட்டும் கொம்பு வேறுபாடுகளும் சுவடிகளில் இரா. இவற்றை அறிந்து எழுதுவதற்குத் தக்க பயிற்சி வேண்டும்.பொறுமையும், பயிற்சியும், புலமையும் இப்பணிக்குத் தேவையாகும். சுவடிகளில் எழுதப்பெறும் எழுத்து வடிவங்களை எப்படியெல்லாம் படிக்க வேண்டும் என்பது பற்றியும், வேறுபாடங்களைத்

தந்தால் வரும் பொருள் மாற்றங்கள் குறித்தும் அனுபவமும், அறிவும் அதிகம் தேவை. திருவாசகத்தை முதல் முதலில் பிழைத்த திருத்தி அச்சில் கொண்டுவந்த ,

திரு.கொட்டையூர்சிவக்கொழுந்து தேசிகர்அவர்கள்தமிழ்நாட்டில்கும்பகோணத்துக்கு அருகில் உள்ள ஏரண்டபுரி என்ற ஊரைச் சேர்ந்தவர் ஏரண்டம் என்பதற்கு ஆமணக்கு என்ற கொடியின் கொட்டை என்பது பொருள்;இப்போது அந்த ஊர் கொட்டையூர் என்று அழைக்கப்படுகிறது . எதில் இருந்து எது வந்தது என்பது ஆய்வுக்கு உரியது .

இவரின் தந்தை பெயர் தண்டபாணி தேசிகர். சைவ மரபைச் சேர்ந்தவர். தமிழ் இலக்கியம், இலக்கணம் முதலானவற்றில் நன்கு தேர்ச்சி பெற்றவர். கொட்டையூருக்குத் தெற்கில் உள்ள ஊர் சத்திமுற்றம்.ஆகும். அங்குள்ள இறைவன் பெயர் சிவக்கொழுந்து, இந்த இறைவன் பெயரையே தன் மகனுக்கும் இட்டார். சிவக்கொழுந்து தேசிகர் தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றில் சிறந்தவராக விளங்கினார். இந்தக்குடும்பம் சுமார் 300 ஆண்டுகளுக்கு அதிகமாக அந்த ஊரில் வசித்து இருந்ததாகக் கூறப்படுகிறது. திரு வைத்திநாத தேசிகர் வம்சத்தினரும் , சில திருவாரூரில் இருந்த பெரும் புலவர்களும் இவரது ஆசிரியர்களாக அமைந்திருந்தனர். நிலம் வீடு போன்ற வசதிகள் இருந்ததால் இறைவழிபாடும், மாணவர்களுக்குப் பயிற்றுவித்தலும், சிறு நூல்கள் செய்வதுமாக இவரது இளம் வயது கழிந்தது .

இவரது அறிவுத் திறனைக் கேள்விப்பட்ட சரபோஜி மன்னர் இவரைத் தம் அரண்மனைப் புலவர் ஆக்கினார். முகலாய மன்னர்களின் ஆதிக்க ஆட்சியை எதிர்த்து வெற்றி பெற்றவர் சிவாஜி என்ற மராட்டிய மன்னர். சிவாஜியின் சகோதரர் வெங்கோஜி. இவர் ஏகோஜி என்றும் அழைக்கப் பட்டார். ஏகோஜி தஞ்சாவூரில் 1674-ஆம் ஆண்டில் மராட்டிய அரசை நிறுவியவர் ஆவார். அன்று முதல் 180 ஆண்டுகளில் 14 மராட்டிய மன்னர்கள் தஞ்சாவூரை

ஆண்டு வந்துள்ளனர். மராட்டிய மன்னர்களுள் ஒருவர் துளஜாஜி. இவருக்குக் குழந்தைகள் இல்லை. எனவே, ஓர் ஆண் குழந்தையை மகனாகத் தத்து எடுத்துக் கொண்டார். அந்தக் குழந்தைக்குத் தன் விருப்பக் கடவுளின் பெயரை இட்டார்.அவரது விருப்பக் கடவுள் திரிபுவனம் சரபேசர்.ஆகும் இதைச் சரபோஜி என்று அந்தக் குழந்தைக்குபெயராக இட்டார். ஆனால், இவருக்கு முன் சரபோஜி என்ற பெயரில் மூன்று மன்னர்கள் ஆண்டுள்ளனர். எனவே இவர் நான்காம் சரபோஜி ஆவார்.

சரபோஜி மன்னர் 1798-இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். ஆனால், இவருக்கு நாட்டை ஆள்வதில் விருப்பம் இல்லை. கலைகளில் மிகுந்த ஆர்வம் காணப்பட்டது. எனவே ஆங்கிலக் கம்பெனியாருடன் உடன்பாடு செய்துகொண்டு, ஆட்சிப் பொறுப்பில் இருந்து விடுபட்டார்.

தஞ்சாவூரில் சரசுவதி மகால் என்ற நூல் நிலையத்தை நிறுவினார். இன்றியமையாத நூல்கள் பலவற்றைப் பதிப்பிப்பதற்காக அச்சகம் ஒன்றையும் நிறுவினார். தம் அரண்மனையில் அரும்பொருள் காட்சி நிலையத்தையும் ஏற்படுத்தினார். அனைவருக்கும் மருத்துவ வசதி கிடைப்பதற்காக மருத்துவச் சாலை ஒன்றையும் உருவாக்கினார். இவ்வாறு பல்வேறு சிறப்புகளை உடையவராகச் சரபோஜி மன்னர் திகழ்ந்தார்.இந்த நூல்

நிலயத்தைப்பராமரிக்க சரபோஜி மன்னர் திரு சிவக்கொழுந்து தேசிகர் அவர்களை அழைத்து நூலகப் பொறுப்பைத் தந்தார்.அங்கு இருக்கும் போது சிவக்கொழுந்து தேசிகர் பல மருத்துவ நூல்களையும் கவிதை வடிவில் இயற்றினார்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய இலக்கிய நூல்கள்-

1. கொட்டையூர் உலா
2. திருவிடைமருதூர்ப் புராணம்
3. திருமண நல்லூர்ப் புராணம்
4. சரசக் கழிநெடில்
5. கோடீச்சுரக் கோவை
6. தஞ்சைப் பெருவுடையார் உலா
7. ஸ்ரீ சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம்.

இவ்வாறு, பல சிறப்புகளை உடைய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய நூல்களில் ஒன்றே 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' ஆகும்.

இந்த நூலின் பாட்டுடைத் தலைவர் சரபோஜி மன்னர்.

சென்னை மாநிலத்தில் அப்போது ஆட்சியிலிருந்த ஆங்கிலேய அரசு கல்விச் சங்கம் என்று ஒரு சங்கத்தை அமைத்துத் தமிழ்ப் புலவர்களை வரவழைத்துப் பழைய நூல்களை ஏடுகளில் இருந்து ஆய்வுகள் செய்து பதிப்பித்தனர். புதிய நூல்களும் இயற்றப்பட்டன.

அப்போது கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் புலமையைக் கேள்வியுற்ற ஆங்கில அரசு அவரைச் சென்னைக்கு அந்தக்கல்விக்கழகத்திற்கு அனுப்பப் கேட்டுக் கொண்டது. இத்தைத்தட்ட இயலாத சரபோஜி மன்னரும் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரைச் சென்னைக்கு அனுப்ப சம்மதித்தார்.

தண்டபாணி தேசிகர்

சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் தலைமைத் தமிழ்ப்புலவரான வித்துவான் தாண்டவராய முதலியாருக்கு உதவியாககொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் உடனிருந்து பணி செய்து வந்தார். சென்னையில் இருந்தபோதுதான் ஏட்டுச்சுவடியாக இருந்த திருவாசகத்தை 1834-ஆம் ஆண்டில் முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டார்.

இதுவே இவரின் பணிகளில் தலையானது. திருவாசகம் நம் அனைவரும் படிக்கக் காரணமாக இருந்தது திரு கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் போன்ற தலை சிறந்த மனிதர்களின் அயராத முயற்சிதான். ஆயினும் அவருக்கு நாம் தரவேண்டிய மதிப்பை நல்கவில்லை . இது தமிழரின் குறையாகும் .

90 ஆண்டுகள் வரை வாழ்ந்த சிவக்கொழுந்து தேசிகருக்கு இரு மனைவியர். இரு ஆண்மக்களும், ஐந்து பெண்களும் பிறந்தனர். முதல்

மனைவியாருக்குப் பிறந்த வடுகநாததேசிகரின் பெயரனான சிவக்கொழுந்து தேசிகருடைய குமாரரே காசிவாசி சுவாமிநாத தேசிகர் ஆவார். உ.வே.சா. அவர்கள் தமது சிவக்கொழுந்துதேசிகர்பிரபந்தங்கள்பதிப்பில்இவற்றைவிரிவாகக்குறிப்பிட்டிருக்கிறார். அப்புத்தகத்தைப் பார்த்தே நான் இந்த வரலாற்றை எழுதினேன் .1932ல் வெளிவந்த அப்புத்தக நகல் என்னிடம் உள்ளது .

திருவாசகத்தின் பெருமை குறித்து எத்தனை சொன்னாலும் நிறையுண்டாகாது . ஆயினும் ஒரே ஒரு பாடலைச் சொல்லி இதை நிறைவு செய்யலாம் .

போற்றி அகவல் – திருவாசகம்

“பாரிடை ஐந்தாய்” பரந்தாய்ப் போற்றி
” நீரிடை நான்காய் ” நிகழ்ந்தாய்ப் போற்றி
” தீயிடை மூன்றாய்” திகழ்ந்தாய்ப் போற்றி
” வளியிடை இரண்டாய்” மகிழ்ந்தாய்ப் போற்றி
” வெளியிடை ஒன்றாய்” விளைந்தாய்ப் போற்றி
நம் உடலில் ஐம் பூதங்களும் எந்த விகிதத்தில்

கலந்து இருக்கின்றான் என்பதை இப்பாடல் விளக்குகின்றது

பாரிடை ஐந்தாய் = மண் – 5 பாகங்களாக –மெய் , வாய், கண் , மூக்கு , செவி ஆகிய பாகங்களாக

நீரிடை நான்காய் = நீர் = 4 பாகங்கள் – கண்ணீர் , சிறு நீர் , ரத்தம் , அமுதம் ஆகிய பாகங்களாக

தீயிடை மூன்றாய்” = 3 பாகங்கள் – சூரியன் – சந்திரன் – அக்கினி ஆகிய பாகங்களாக

வளியிடை இரண்டாய்” = 2 பாகங்கள் –பிராணன் – அபானன் ஆகிய பாகங்களாக

வெளியிடை ஒன்றாய் = 1 பாகம் – சிதாகாஸப் பெருவெளியாக

எத்தனை அனுபவங்களை உணர்வுடன் தெரிவிக்கும் தேன் திருவாசகம்!

வான்கலந்த மாணிக்கவாசக! நின் வாசகத்தை,
நான்கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ்சற்றினிலே
தேன்கலந்து, பால்கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து,என்
ஊன்கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே!”

- வடலூர் ராமலிங்க அடிகளார்

\

மதுரையும் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தலங்களும்

சி. அபிஷேக்

இராமநாதபுரம் மாவட்ட வரலாற்று ஆர்வலர்

[கள ஆய்வில் தோளோடு தோள் கொடுத்து உதவிய நண்பர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்]

மதுரை வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரம் என்பது 6000 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் மாநகரமாக விளகங்குவதால் உறுதிப்படுத்தலாம். இந்நகரம் இரண்டாயிரம் ஆண்டுகளாக பாண்டியர்களின் மூதூராக விளங்குகிறது. கற்காலம் தொடங்கி தற்காலம் வரையிலான எத்தனையோ வரலாற்று ஆதாரங்கள் இங்குக் காணக் கிடைக்கின்றன. இத்தகைய பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும், ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு வரலாற்றுச் சின்னம் தெரிந்தோ தெரியாமலோ அழிக்கப்படுவதை அறிகிறோம். அதற்கு முக்கிய காரணம், மக்களுக்கு நம் வரலாறு குறித்த அறிவோ, பெருமித உணர்வோ இல்லாததே ஆகும். அவ்வாறான இடங்களைப் பாதுகாப்பதற்கெனவே மாநில அரசிலும், மத்திய அரசிலும் தனித்துறைகள் உருவாக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. ஒரு இடத்தின் தொன்மையைப் பற்றி படிக்கும் இயலுக்கு தொல்லியல் என்றும், அதனை பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்ட துறைக்கு தொல்லியல் துறை என்றும் பெயர்.

தொல்லியல் துறையானது மத்திய அரசிடமும், மாநில அரசிடமும் இயங்கி வருகின்றது. இக்கட்டுரை மத்திய மற்றும் மாநில தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில், மதுரையில் உள்ள வரலாற்று இடங்களைப் பற்றி விளக்குகிறது.

முதலில், மத்திய தொல்லியல் துறை (ARCHAEOLOGICAL SURVEY OF INDIA – ASI) கட்டுப்பாட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ள தொல்லியல் இடங்களைப் பார்க்கலாம். இத்துறையின் தமிழகத்திற்கான தலைமை அலுவலகம் சென்னை தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வருகிறது.



மதுரையில் மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் :-

1. திருப்பரங்குன்றம் உமையாண்டவர் குடைவரைக் கோயில் மற்றும் தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.



2. கீழக்குயில்குடி சமணர் மலை தொல்லியல் இடங்கள்.

3. கரடிப்பட்டி பெருமாள் மலை தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.



4. மேட்டுப்பட்டி சித்தர் மலை தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.

5. கீழவளவு பஞ்ச பாண்டவர் மலை தமிழி கல்வெட்டு உள்ள குகைத்தளம்.



6. கிடாரிப்பட்டி தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.



ஆகிய ஆறு இடங்கள் மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் ஒரு பாண்டியர் கால குடைவரைக் கோயிலும், ஆறு தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளங்களும் அடங்கும். மேட்டுப்பட்டி சித்தர் மலையைத் தவிர மற்ற அனைத்து இடங்களிலும் தீர்த்தங்கரர் சிற்பங்களும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கீழக்குயில்குடி, கரடிப்பட்டி, கீழவளவு மற்றும் கிடாரிப்பட்டி ஆகிய இடங்களில் "செஞ்சாந்து" மற்றும் "வெண்சாந்து" பாறை ஓவியங்களும் உள்ளன. இவை ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கருதப்படுகிறது. கீழவளவில், உள்ள ஒரு தீர்த்தங்கரர் சிற்பத்தில் 1000 ஆண்டுகள் பழமையான மூலிகை ஓவியங்கள் இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



தமிழக தொல்லியல் துறையின் (TAMILNADU ARCHAEOLOGY DEPARTMENT) தலைமை இடம் சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது. இதன் மதுரை மாவட்ட தொல்லியல் துறையானது திருமலை நாயக்கர் மகாலில் இயங்கி வருகின்றது.

மதுரையில் தமிழக தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் :-

1. அரிட்டாபட்டி குடைவரைக் கோயில்.



2. அரிட்டாபட்டி தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.

3. மீனாட்சிபுரம் தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.

4. கருங்காலக்குடி பஞ்ச பாண்டவர்கள் மலை தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.



5. நரசிங்கம் யானை மலை லாடன் குடைவரைக் கோயில்.

6. நரசிங்கம் யானை மலை சமணர் சின்னம்.

7. நரசிங்கம் யானை மலை தமிழி கல்வெட்டு உள்ள குகைத்தளம்.



8. திருவாதவூர் ஓவா மலை தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.

9. குன்னத்தூர் உதயகிரீசுவரர் குடைவரைக் கோயில்.

10. குன்னத்தூர் தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.



11. குன்னத்தூர் அஸ்தகிரீசுவரர் குடைவரைக் கோயில்.



12. கொங்கர்புளிங்குளம் தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்.



13. நாயக்கர் மகால் அரண்மனை.



14. குப்பல் நத்தம் சமணர் சின்னம்.

15. விக்கிரமங்கலம் தமிழி கல்வெட்டு உள்ள குகைத்தளம்.



16. முதலைக்குளம் தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளம்



ஆகிய 16 இடங்கள் தமிழக தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளன.



இவற்றில், முருகனுக்காக உருவாக்கப்பட்ட லாடன் குடைவரைக் கோயில், சிவனுக்காக உருவாக்கப்பட்ட அரிட்டாபட்டி குடைவரைக் கோயில், குன்னத்தூர் உதயகிரீசுவரர் மற்றும் அஸ்தகிரீசுவரர் குடைவரைக் கோயில்கள் ஆகிய முற்கால பாண்டியர் காலத்தைச் சேர்ந்த நான்கு குடைவரைக் கோயில்களும், 9 தமிழி கல்வெட்டுகள் உள்ள குகைத்தளங்களும், அதில் அரிட்டாபட்டி, கருங்காலக்குடி, யானைமலை, கொங்கர்புளிங்குளம், குப்பல் நத்தம் போன்ற இடங்களில் சமணர் சின்னங்களும் உள்ளது. இதுதவிர கருங்காலக்குடி, திருவாதவூர்,

கொங்கர்புளிங்குளம், விக்கிரமங்கலம், முதலைக்குளம், மாங்குளம் ஆகிய இடங்களில் பழமையான "செஞ்சாந்து" மற்றும் "வெண்சாந்து" பாறை ஓவியங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரிட்டாபட்டி மற்றும் யானை மலையில் உள்ள சமணர் சிற்பங்களில் 1000 ஆண்டுகளை கடந்த மூலிகை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

மத்திய மற்றும் மாநில தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் மொத்தமாக 6 + 16 = 22 இடங்கள் மதுரையில் உள்ளன. இதுதவிர 100 க்கும் மேற்பட்ட தொல்லியல் இடங்கள் பாதுகாக்கப்பட்ட இடங்களாக அறிவிக்கப்படமாலே உள்ளது என்பது வருத்தத்திற்குரியது.

பாதுகாக்கப்பட்ட சின்னம் :-

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இச்சின்னங்கள் 1966 ஆம் வருடத்துப் புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் எச்சங்கள் எனும் சட்டத்தின் (1966 எண் 25) கீழ் கொண்டுவரப்படுகிறது. இதை யாராவது சேதப்படுத்தினாலோ அகற்றினாலோ, அழிவுக்குட்படுத்தினாலோ சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள். இத்தண்டனை மூன்று மாதம் சிறை அல்லது ரூபாய் ஐந்தாயிரம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தொல்லியல் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 29 ன் படி விதிக்கப்படும்.

வரலாறு கடந்த காலத்தைப் பற்றியது. நிகழ்ச்சிகளைக் குறித்தது. நிகழ்ச்சிகள் தன்னிச்சையாக நிகழ்கின்றன. நிகழ்ந்தவை நிகழ்ந்தவைதான். காட்டில் மரம் விழுந்ததை யாரும் பார்க்கவில்லை அல்லது விழுந்த ஓசையைக் கேட்கவில்லை என்பதால் மரம் விழவில்லை என்றாகிவிடுமா ? ஆனால் மரம் விழுந்ததற்கான அடையாளமோ ஆதாரமோ இல்லாமல் அந்த நிகழ்ச்சியைப் பற்றி எழுத முடியாது. அதேபோன்று எழுத்துச் சான்றுகளின்றி வரலாற்றை வரைய இயலாது. கடந்த கால நிகழ்ச்சிகள் வரலாற்றாளரின் கட்டுப்பாட்டுக்கு வெளியே நிகழ்ந்தவை எனினும் இந் நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆவணச் சான்றுகளைக் கொண்டு வரலாற்றாளர் கடந்த காலத்தைப்

புதுப்பிக்கிறார். மறு பதிப்பு செய்கிறார். எனவே கடந்த காலத்துக்கு மறு உருவம் கொடுப்பது வரலாற்றின் சிறப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. (பழைய வரலாற்று புத்தகம் ஒன்றில் இருந்து எடுத்தது) வரலாறு அனைவருக்கும் பொதுவானது, ஆனால் அதைப் படிப்பவர்களின் கண்ணோட்டங்கள் வெவ்வேறு. ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் பல கேள்விகளுக்கான விடைகளை கண்டறிய முடியும்.

நன்றி !

கவிஞனின் காதலி - நூலாய்வு

முனைவர் ப. கிருஷ்ணன்

அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் மொழிபெயர்ப்பு விருதாளர், சென்னை.

காமம் என்பது மனத்தளவில் மிகவும் அடர்த்தியானது; உடலளவில் தன் இருப்பைமுடிந்தவரைபற்றிக்கொண்டுநிற்பது. காமம்இன்றேல்இனப்பெருக்கம் இல்லை; இனப்பெருக்கம் இன்றேல் உயிர்ப் பெருக்கமும் இல்லை; உலக இயக்கமும் இல்லை. இந்தத் கழிபெருங்காமத்தை மனித இனம் ஒன்றுதான் நெறிமுறைப்படுத்தியது; மாட்சிக்குரியதாக்கியது; சமூக வயப்பட்ட கல்வியாக்கியது.

ஆயிரம் கூறினும், காமம் என்பது உணர்ச்சியின் வடிகால்தான் எனப் பொருள்முதல் வாதமும் மெய்யறிவியலும் எடுத்துக்கூறும். உண்மைதான். ஆனால் காதல் என்னும் போர்க்களத்துக்கும் சில சட்டகங்களையும் கட்டுப்பாடுகளையும் வகுத்து இலக்கியப்படுத்தியது தமிழ். தமிழர் வாழ்வியல் சிந்தனையில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இது மலர்ச்சி பெற்றுவிட்டது. ஏறக்குறைய ஐம்பது இடங்களில் காமத்தைப் பற்றிப் பேசும் வள்ளுவர், அதன் ஏற்ற இறக்கங்களைச் சரிசெய்து 'மலரினும் மெல்லிது காமம்' என்று கூறிக் காமத்தைச் சமநிலைப்படுத்துகிறார்; அணிகலனாக்குகிறார். தங்கத்துடன் செம்பு கலந்தால்தான் அணிகலன்; காமம் என்னும் கச்சாப் பொருளுடன் அன்பும்

நிறையும் ஒன்று கலக்கும்போதுதான் மலரினும் மெல்லிதாக மாற்றம் பெறுகிறது. அந்த நிலையில்தான் காதல்/காமம் 'நிலத்தினும் பெரிதாக, வானினும் உயர்ந்ததாக, நீரினும் ஆழமுடையதாக' ஆகிறது. காமம், இணைவிழைச்சு என ஒரு பொருட்பன்மொழியாய் அமைந்த இன்ப நுகர்ச்சியை விழுமிய நிலையில் சிந்தித்து நாகரிகப்படுத்திய வரலாற்றுப் பெருமையும் வாழ்வியல் தொடர்ச்சியும் தமிழர்க்கு வழிவழியே வந்த முன்னோர் சொத்து.

நிற்க.



கவிஞர், உரைநடையாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பன்னூலாசிரியர், பேச்சாளர் எனப் பன்முகத் திறன்கள் ஒருசேர வாய்க்கப் பெற்றவர் - கல்விப் புலத்தில் தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருப்பவர் - மொழி ஆளுமைத் திறம்

பெற்றவர் - முனைவர் திருமதி இராஜேஸ்வரி செல்லையா அவர்கள், அவரது கவிதை மொழிபெயர்ப்பு நூல் ஒன்றினை அளித்துக் கருத்துரைக்க வேண்டினார்.

ஆங்கிலக் கவிஞர் ராபர்ட் பிரௌனிங்கைக் காதலித்துக் கரம்பிடித்த எலிசபத் பாரட் எழுதிய *Sonnets from the Portuguese* என்னும் பெயரில் அமைந்த 44 கவிதைகளின் தொகுப்பு நூல் பாரட்டின் காதற் குறுங்காவியம். எலிசபத் பாரட்டை, 'என் மனத்துக்கினிய போர்ச்சுகீசியே' என்று அன்புடன் விளிப்பாராம் கவிஞர் ராபர்ட். அந்த விளிப்பே பாராட்டுக்கு வேதமாயிற்று; நூலுக்கும் பெயராயிற்று. என்னும் சுவையான கதையைக் கூறுவர். இதன் மொழிபெயர்ப்பாளர், எத்தகைய அடைமொழியையும் சேர்க்காமல், 'கவிஞனின் காதலி' எனத் தலைப்பிட்டு, பாரட்டின் கவிச் சிந்தையைத் - கவிதைச் சிந்தனையைத் தமிழில் தந்துள்ளார். இஃதோர் மொழிபெயர்ப்பு நூல் எனச் சொன்னாலன்றி இதை மொழிபெயர்ப்பு நூலாக அறிய முடியாது. அந்த அளவிற்கு பாரட்டின் காதல் உணர்வினை உள்வாங்கித் தமிழில் தந்திருக்கிறார். ஒரு மொழிபெயர்ப்பாளர்க்கு இதைவிட வேறென்ன வெற்றி வேண்டும்?

நூலாசிரியர் முனைவர் திருமதி
செ. ராஜேஸ்வரி

1982-ஆம் ஆண்டு பாரட்டின் இந்த ஆங்கிலக்கவிதை நூல் எனக்கு அன்பளிப்பாக - புத்தம் புது நூலாகக் கிடைத்தது. ஆய்வுப் பேரறிஞர் திரு ஏ.வி. சுப்பிரமணியன் அவர்கள் இந்நூலை எனக்கு உவந்தளித்தார். அப்போதே பாரட் கவிதைகளை முழுமையாக வாசித்திருக்கிறேன். ஆனால் அந்நூலில் இடம் பெற்ற *44* கவிதைகளிலும் உள்ளகருத்தாழம் பிடிபட்ட அளவிற்கு அதன் உணர்ச்சிக் களம் எனக்குப் பிடிபடவில்லை. பாரட் கவிதைகளில் பொங்கியெழும் உணர்ச்சிக் கூறுகளை திருமதி ராஜேஸ்வரி செல்லையா அவர்களின் இந்த மொழிபெயர்ப்பின் வழியேதான் என்னால் முழுமையாகச் சுவைக்க முடிந்தது. இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இவர் இயல்பிலேயே படைப்பாற்றல் திறம் மிக்க கவிஞர் என்பதை இவரது ஏனைய கவிதை நூல்களின் வழியேயும் வெகுவாகச் சுவைத்திருக்கிறேன். கவிதைக்கே உரிய உணர்ச்சிக் கூறுகளை இம் மொழிபெயப்புக் கவிதை நூலிலும் உயிர்ப்புடன் அளித்திருக்கிறார்.

பாட்டுக்குப் பாட்டு ஒப்பீடு செய்து இம்மொழிபெயர்ப்பினை நான் விளக்கத் தேவையில்லை. ஆரவாரம் செய்யுமிடத்தில் புயற்காற்று; ஆற்றொழுக்காய் மிதந்து செல்லுமிடத்தில் தென்றல் காற்று. இந்த இரண்டுமே இவரது மொழிபெயர்ப்பில் மாறிமாறிச் செல்கிறது. சவுக்குத் தோப்பில் புகுந்து வெளிவரும் சத்தற்ற காற்றினைப் போல, பாரட் ஆழ்ந்த அமைதியில், தன்னை மறந்த நிலையில் காதலைப் பதிவு செய்வதையெல்லாம் வெகு நுட்பமாக இம் மொழிபெயர்ப்பில் கொணர்ந்திருக்கிறார்.

தன்னைவிட *6, 7* வயது இளையவரான ராபர்ட்டைக் காதலிக்கிறோம் என்னும் எச்சரிக்கை உணர்விலேயே பாரட் தம் காதலை நயமிகு சொல்லாடலில் வெளிப்படுத்துகிறார். வேட்கை குறைவு; வேண்டுதல் மிகுதி. புறநோக்கைவிட அகநோக்கு அதிகம். ஆனாலும் வாலிபம் வயதினை அறிவதில்லை. ராபர்ட் மிக்க மகிழ்ச்சியுடன்தான் பாரட்டைக் கைப்பிடித்தார்; இருவரும் வாழ்ந்து காட்டினார்கள்.

ஒரேயொரு கவிதை மொழி பெயர்ப்பை மட்டும் இங்கே ஒப்பீடு செய்ய விழைகிறது என் மனம். பாரட்டின் *43*ஆம் கவிதை.

How do I love thee? Let me count the ways
I love thee to the depth and breadth and height

எனத் தொடங்கும் கவிதை. இதை முனைவர் ராஜேஸ்வரி செல்லையா இவ்வாறு மொழிபெயர்க்கிறார்:

உன்னை நான் எப்படியெல்லாம் காதலிக்கிறேன்?
உன்னை நான் எப்படியெல்லாம் காதலிக்கிறேன் என்று எண்ணுவோமா?
உன்னை நான் ஆழமாக! விசாலமாக!
உயரம் உயரமாகக் காதலிக்கிறேன்.
இது நம் குறுந்தொகையின் 3ஆம் பாடலை நினைவுறுத்துகிறது.
நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரளவின்றே; சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே

தேவகுலத்தார் நான்கு அடிகளில் - ஆசிரியப் பாவில் பாடிய இப்பாடற் கருத்தும் பாரட் ஈரேழு வரிப் பாவில் பாடிய பாடற் கருத்தும் ஒன்றுதான். ஆனால் பாரட் இப்பாவில் பல இடங்களில்

'நான் உன்னைக் காதலிக்கிறேன், காதலிக்கிறேன்' எனக் கதறுகிறார்.
I love thee to the level of everyday
...
I love thee freely
...
I love thee purely
...
I love thee with the passion
...
I love thee with a love
...
I love thee with the breath
...
I shall but love thee better after death



என்று காதலைச் சொல்லிக் கதறுகிறார்.

'காதல் காதல் காதல்;
காதல் போயிற் காதல் போயிற் சாதல் சாதல்'

என பாரதி பாடியதை நினைவு கூர்கிறது. 'காதலே நிம்மதி,' 'காதல் காதலுக்காகவே' எனும் மன விரக்தியில் பாடுகிறாரா பாரட்? ஆனால் உண்மை என்ன? பாரட், ராபர்ட் மீது கொண்ட காதலை விட, ராபர்ட், பாரட் மீது கொண்ட காதல் சாலப் பெரிது. அதனால்தான், தன்னை விட ஏழு வயது மூத்தவரான பெண்ணைக் கைப்பிடித்துக் கணவனானார்.

இஃதொரு புறம் இருக்கட்டும்.

பாரட்டின் காதல் உணர்வுகளை மொழிபெயர்ப்பாளர் முனைவர் திருமதி ராஜேஸ்வரி நமக்கு எவ்வளவு அணியமாக்குகிறார் பாருங்கள்:

நான் உன்னைத் தினமும் தேடுகிறேன்
தினமும் காதலிக்கிறேன்.
... ...
மனிதரின் உரிமைக்கான வெறி போல
நான் உன்னை வெறித்தனமாகக் காதலிக்கிறேன்.
... ...
புகழ்ச்சிக்கு அலைவது போல
நானும் உன் காதலுக்கு அலைகிறேன்.
... ...
புனிதர்களை நினைவுகூர்வது போல்
நான் உன்னைக் காதலோடு நினைக்கிறேன்.
... ...
ஆண்டவருக்குச் சித்தமென்றால்
இறப்பிற்குப் பின்னும்
இன்னும் கூடுதலாக
மேலதிகமாக/
உன்னை நேசிப்பேன்.

(If God choose, I shall but love thee better after death)

கண்களில் உப்புக் கரிக்கின்றது - பாரட்டின் நிலையை எண்ணி. இன்னொருபுறம் கண்ணீர் உவந்து இனிக்கிறது. என் தாய்த்தமிழில் உயிரோட்டமாக பாரட்டின் உணர்வுகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதை எண்ணி.

ஒரு மொழி பெயர்ப்பு என்பதற்கும் அப்பால் இந்த 44 கவிதைகளும் முனைவர் திருமதி இராஜேஸ்வரி அவர்களின் சிந்தையில் மறு ஆக்கம் பெற்றிருப்பதாகவே உணர்கிறேன். அவர், படைப்புத் திறன் வளர்க; எழுதுகோல் இளமையுடன் இயங்கட்டும்

மரபின் வேர்கள் - 5
(முன் இதழ்த் தொடர்ச்சி)

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

நூல் பெயர்: மரபின் வேர்கள் (சொல்லாய்வுக் கவிதைகள்)
ஆசிரியர்: பாவலர் கருமலைத்தமிழாழன்
வசந்தா பதிப்பகம்
தொடர்பு எண்: 94434 58550
பக்கங்கள்: 160
விலை: உரூபா: 200 - 00

101) இலை - பூ - கனி என்னும் சொற்கள்:

இலை, பூ, கனி இவற்றின் ஒவ்வொரு பருவத்துக்கும் ஒவ்வொரு பெயர்கள் தமிழில் உள்ளன. இந்தப் பெருமையும் பெயர்களும் வேறு எந்த மொழியிலும் இருப்பது அரிதினும் அரிது. இந்த அரிதான பெர்களை பாவலர் நமக்கு நினைவூட்டுகிறார்.

மரங்கள்தாம் காற்றில் உள்ள மாசுகளை நீக்குகின்றன. மழையையும் பொழிய வைக்கின்றன. அதனால் மரங்களை மக்களின் தாய் என்கிறார் பாவலர். இந்த மரங்களின் கிளைகளில் மிகச் சிறியதாக இலைகள் தோன்றுகின்றன. அவற்றுக்குத் துளிர்கள் என்று பெயர். அந்தத் துளிர்கள் விரிந்து நிற்பதைப் பச்சை இலை என்கிறோம். இந்த இலை முதிர்ந்தால் பழுப்பு நிறமாகிவிடும். பழுப்பு இலை கீழே விழுந்து காய்ந்து போனால் சருகு எனச் சொல்லுகிறோம். ஆக, ஒரே இலைக்கு துளிர் என்றும் இலை என்றும் பழுப்பு இலை என்றும் சருகு என்றும் பெயர்கள் உள்ளன என்பதை அறிகிறோம்.

இது போலவே செடி கொடியில் பூவின் முதல் தோற்றம் 'அரும்பு' எனப்படுகிறது. அந்த அரும்பு சிறிது சிறிதாய் விரியும் பொழுது அது 'போது' எனப்படுகிறது. அது முழுவதும் விரிந்தவுடன் 'பூ' எனப்படுகிறது. அப் பூவானது வாடி விழும் பொழுது அது 'வீ' எனப்படுகிறது.

அந்தப் பூவில் சிறிதாகத் தோன்றுவது 'பிஞ்சு' எனப்படுகிறது. பிஞ்சு முழுமையானவுடன் 'காய்' எனப்படுகிறது. காய் முதிர்ந்து பழுக்கும் முன் 'செங்காய்' எனப்படுகிறது. செங்காயில்

சுவை மிகுந்தால் 'பழம்' எனப்படுகிறது. இந்த வேறுபாடுகளை மனதில் நிறுத்தி சொற்களைப் பயன்படுத்துவோம்.

102) மலர்கள் என்னும் சொல்:

மலர்களின் பொத்தாம் பொதுவான பயன்களைப் பற்றியும் அதன் பருவங்களைப் பற்றியும் இக்கவிதையில் பாவலர் பாடுகிறார்.

'மலர்' என்னும் சொல் மங்கலத்தை உணர்த்தி நிற்கிறது; மங்கையர்க்கு உவமையாகிறது; பெண்களின் கூந்தலில் அமர்ந்து மணம் வீசுகிறது; மாலையாகத் தொடுக்கப்பட்டு தலைவர்களின் கழுத்தை அலங்கரிக்கிறது; குழந்தைகளின் முகத்துக்கு உவமையாகச் சொல்லப்படுகிறது; இறைவனை அழகுபடுத்த எந்நாளும் உதவுகிறது; மூவேந்தரில் ஒருவன் சேரன் மார்பில் பனம்பூவாய்ப் பூக்கிறது; மீன் கொடியோன் பாண்டியன் மார்பில் வேம்பு மாலையாய் வெற்றி கொள்கிறது; கல்லணை கட்டிய சோழன் மார்பில் ஆத்திமாலையாய் அலங்கரிக்கிறது

என்றெல்லாம் எடுத்துக்கூறி மலர்களைப் பெருமைபடுத்துகிறார்.

103) சோலை - தோப்பு

தென்னை, மா, பனை, வாழை, போன்றவற்றின் தொகுப்புகளை நமது முன்னோர் தனித் தனிப் பெயரிட்டு அழைத்தனர். அவற்றைப் பாவலர் இங்கே தொகுத்துத் தருகிறார்.

மாமரத் தொகுப்பை மாந்தோப்பு என்று கூறுகிறோம்; பூக்களின் தொகுப்பை பூந்தோட்டம் என்று அழைக்கிறோம்; வாழை மரங்கள் நிறைந்த தொகுப்பை வாழைத் தோட்டம் என்று கூறுகிறோம்; தென்னை மரங்கள் நிறைந்த தொகுப்பைத் தென்னந் தோப்பு என்று அழைக்கிறோம்; கொய்யா மரங்கள் நிறைந்த தொகுப்பைக் கொய்யாத் தோப்பு என்று அழைக்கிறோம்; பனைமரங்கள் நிறைந்த தொகுப்பைப் பனங்காடு என்று சொல்லுகிறோம். வேற்கடலை, கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்கள் விளையும் நிலம் கொல்லை எனப்படும்.

இவ்வாறு முன்னோர் வகுத்தளித்தவாறு நமது மரபுச் சொற்களை நாமும் காத்து வருதலே தமிழுக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

104) அளவைகள்:

அளவைகளில் வேறு வேறு அளவைகள் உள்ளன. அவற்றின் பெயர்களைப் பாவலர் தமது கவிதையில் வடிக்கிறார்.

"சொல்லாலே ஒன்றிரண்டு மூன்று என்றே
சொல்லிஎண்ணும் அளவைக்கே எண்ண லளவை!"
"கச்சிதமாய்த் திடப்பொருளைக் கிலோக ணக்கில்
எடைபோட்டு வாங்குவது எடுத்த லளவை!"
"
"எண்ணெயினைப் பாத்திரத்தில் முகந்தெ டுத்துப்

படிலிட்டர் அளவுகளில் அளந்து வாங்கிப்
பயன்படுத்தும் அளவைக்கு முகத்தலளவை!"
"திட்டமுடன் நீளத்தை அளந்து சொல்லும்
திருத்தமான அளவைக்கே நீட்டலளவை!"

இவ்வாறு அளவைகளைப் பற்றி பாவலர் சொல்லும் சொற்களை நாம் பயன்படுத்தித் தமிழ் வளர்ப்போம்.

105) சுவரில் - சுவற்றில் என்னும் சொற்கள்:

சுவரில் என்பது சரியா? சுவற்றில் என்பது சரியா? இரண்டில் எது சரி? எது தவறு? தமிழ்ப் படித்தவர்களுக்கே தடுமாற்றம் தரும் வினா இது. பெரும்பாலோர் சுவற்றில் என்றுதான் எழுதுவார்கள். ஆனால் இப்படி எழுதுவது தவறு என்பதைப் பாவலர் விளக்குகிறார்.

அதாவது சுவர் என்னும் சொல் இடையின ர கரத்தைக் கொண்டிருக்கிறது. இந்த ர கரம் ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்றுச் சுவரை என்று திரிகிறது. அதனால் அப்படித் திரியும் போது அதே இனமான ர கர ஐதான் புணர்ச்சியில் உருமாறிச் சுவரை என்று திரியும். சுவற்றை என்று புணராது என்று பாவலர் எடுத்துரைக்கிறார்.

ஆனால் சுவர்களிலும் சுவரொட்டி விளம்பரங்களிலும் சுவற்றை என்று எழுதுகிறார்களே என்று பாவலர் வேதனைப்படுகிறார்.

106 பலசில - பலர் சிலர் என்னும் சொற்கள்:

நம்மில் பலருக்கும் பல, சில என்னும் சொற்களையும் பலர், சிலர் என்னும் சொற்களையும் எங்கே, எப்படிப் பயன்படுத்துவது என்று தெரிவதில்லை. பாவலர் இங்கே இதனைச் சுட்டிக் காட்டுகிறார்.

அதாவது, பல, சில என்னும் சொற்கள் அஃறிணைக்கு உரியவை என்றும் பலர், சிலர் என்னும் சொற்கள் உயர்திணைக்கு உரியவை என்றும் உணர வேண்டும் என்பதை எடுத்துக் கூறும் பாவலர், கழுதையினை, "வருகின்றார்" என்று சொல்லலாமா? என்று கேட்கிறார்.

பல மரங்கள், சில ஆடுகள் என்று சொல்லலாம். ஏனென்றால் மரங்களும் ஆடுகளும் அஃறிணைகள். ஆனால் உயர்திணையாகிய புலவர்களைப் புலவர்கள் பலர், நண்பர்கள் பலர் அறிஞர்கள் பலர் என்றுதான் சொல்லவேண்டும்.

பல புலவர்கள் என்று எழுதுவதும் பேசுவதும் குற்றம் ஆகும் என்பதை எடுத்துச் சொல்லி, அத்தகையக் குற்றங்களைக் களைவோம் என்கிறார் பாவலர். பாவலர் சொல்வதை ஏற்றுப் பிழையின்றித் தமிழ் எழுதப் பழகுவோம்.

107) 'என்ற', 'என்னும்' ஆகிய சொற்கள்:

'என்ற', 'என்னும்' ஆகிய சொற்களை நாம் அவரவர் வசதிக்கேற்பப் பயன்படுத்தி வருகிறோம். ஆனால் உண்மையில், 'என்ற' என்னும் சொல் இறந்த காலத்தைக் குறிக்கிறது என்பதைப் பலரும் உணர்வதில்லை. இதனை,

"------- என்ற
என்னும்சொல் என்என்னும் வினையாம் சொல்லின்
இன்றில்லா இறந்தகாலம் குறிப்ப தாகும்
இருப்பதனை என்றால் குறித்தல் குற்றம்!"

என்று பாவலர் கூறுகிறார். "கரிகாலன் என்ற மன்னன் சமரில் வென்றான்" என்று எழுத வேண்டும். ஏனென்றால் என்ற மன்னன் என்றால் என்று அழைக்கப்பட்ட மன்னன் என்று இறந்த காலத்தைக் குறிக்கிறது.

முக்காலமும் நிலைத்திருக்கும் திருக்குறள், போன்ற பொருள்களையும் வள்ளுவர், கம்பர், இளங்கோ அடிகள், பெரியார், அண்ணா போன்ற புகழுடம்பு எய்திய அறிஞர்களையும் பற்றிக் கூறும்போது திருக்குறள் என்னும் நூல், கம்பர் என்னும் மா கவிஞன், என்று 'என்னும்' என்ற சொல்லால் கூறுதல் வேண்டும். "திக்கெல்லாம் போற்றும் திருக்குறள் என்ற நூல், பெரியார் என்ற சமுதாயச் சிற்பி" என்றால் இப்போது அவர்கள் புகழுடம்போடு இல்லை என்னும் இறப்பைச் சுட்டுவிடும். ஆகவே 'என்ற', 'என்னும்' ஆகிய சொற்களைப் புரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும் என்று பாவலர் கூறுவதைப் புறந்தள்ள முடியாது.

108) அல்ல - அன்று என்னும் சொற்கள்:

இந்த 'அல்ல', 'அன்று' என்னும் சொற்களைப் பொருத்தவரை ஏறக்குறைய நாம் அனைவருமே தவறாகத்தான் பயன்படுத்துகிறோம். ஆம். 'அல்ல' என்னும் சொல் பன்மைக்குரிய சொல்லாகும்; 'அன்று' என்னும் சொல் ஒருமைக்குரிய சொல்லாகும். ஆனால் இந்தச் சொற்களை ஒருமை, பன்மை பார்த்து நாம் பயன்படுத்துகிறோமா என்பதுதான் எனது வினா. பாவலர் இந்த வினாவுக்கான விடையை இங்கே சொல்லிச் செல்லுகிறார்.

"உயிர் காக்கப் பொய் சொல்லல் குற்றமல்ல" என்று சொன்னால் இந்த சொற்றொடர் தவறு என்று பாவலர் கூறுகிறார். ஏன்? ஏனெனில் 'குற்றம்' என்னும் சொல் ஒருமை. ஆனால் 'அல்ல' என்னும் சொல் பன்மையைக் குறிப்பதாகும். ஒரு சொற்றொடர் ஒருமையில் தொடங்கினால் ஒருமையில்தான் முடிய வேண்டும். பன்மையில் தொடங்கினால் பன்மையில்தான் முடிய வேண்டும். ஆனால் இந்தச் சொற்றொடர் ஒருமையில் தொடங்கிப் பன்மையில் முடிகிறது. எனவே தான் இது தவறான சொற்றொடர் ஆகும். இதுபோலவே, "பயன் தந்தோன் குற்றவாளி அல்ல" என்னும் சொற்றொடரும் தவறான சொற்றொடர் ஆகும். 'குற்றம்' என்பது அஃறிணைச் சொல். 'குற்றவாளி' என்பது உயர்திணைச் சொல். அஃறிணைக்கும் உயர்திணைக்கும் 'அல்ல' என்னும் அஃறிணைப் பன்மைச் சொல் பெய்யப்பட்டிருப்பது தவறுதானே! "குற்றம் அன்று" எனவும், "குற்றவாளி அல்லன்" எனவும் எழுதப்பட வேண்டும். அதுதான் சரி.

"இத்தவற்றைச் செய்தது நான் அல்ல" என்று எழுதினால் அது தவறு; "இத் தவற்றைச் செய்தது நான் அல்லன்" என்று என்று எழுதவேண்டும் என்று சொல்லுகிறார் பாவலர். இதுதான் சரி. ஆனால் இப்படி இக்காலத்தில் யாருமே எழுதுவதில்லையே என்ன செய்வது? இது போலவே,

"----------நேற்று
முன்னிரவு வந்ததுநீ அல்லை; அங்கே
சத்தமுடன் உரைத்ததுநீர் அல்லீர் என்று
சரியாக இடம்எண்பால் திணையைப் பார்த்து
நித்தமும்நாம் கவனமுடன் எழுதி னால்தான்
நில்லாதுபி ழைபோகும் தமிழும் வாழும் "

என்று பாவலர் கூறுவதும் சரியே. எனினும் மெத்தப் படித்தவரகளே இதனைப் பின்பற்றுவது இல்லையே! "நீ அல்லை"; "நீர் அல்லீர்" என்பது மிகவும் சரியான தமிழ்தான். ஆனால் ஒருவரும் இப்படி எழுதுவது இல்லை. எழுதினாலும் அவற்றைப் புரிந்துகொள்வார் யார்?

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே "

என்னும் பவனந்தியாரின் கருத்து இங்கே ஏற்புடைத் தாகாதா என்னும் வினா எழுகிறது.

109) தன் - தம் என்னும் சொற்கள்:

நாம் பல சொற்களைத் தவறாகப் பயன்படுத்துவது போலத் 'தன்' என்னும் சொல்லையும் 'தம்' என்னும் சொல்லையும் பலர் தவறாகப் பயன்படுத்துவதைப் பவலர் இங்கே எடுத்துக் காட்டுகிறார்.

'தன்' என்னும் சொல்லை ஒருமைக்குப் பயன்படுத்த வேண்டும்; 'தம்' என்னும் சொல்லைப் பன்மைக்குப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக் காட்டாக, "அவன் தன் பணியாற்ற எழுந்து சென்றான்"; "அவர் தம் பணியாற்ற வந்தார்" என்னும் இரு சொற்றொடர்களையும் காணலாம். இங்கே 'அவன்' என்னும் சொல்லுக்குத் 'தன்' என்னும் சொல்லும் 'அவர்' என்னும் சொல்லுக்குத் 'தம்' என்னும் சொல்லும் வந்துள்ளது. இதுதான் சரி.

மாறாக, 'அவர்' என்னும் சொல்லுடனும் 'அவை' என்னும் சொல்லுடனும் 'தன்' என்னும் சொல் வரக்கூடாது. "அவர் தன் மாடுகளை ஓட்டிச் சென்றார்" என்னும் தொடரும், "அவை தன் குஞ்சுகளைக் கூட்டிச் சென்றது" என்னும் தொடரும் தவறானவை ஆகும். ஏனெனில் 'அவர்' என்னும் சொல்லும் 'அவை' என்னும் சொல்லும் பன்மையைக் குறிக்கும் சொற்கள். எனவே 'அவர்' என்னும் சொல்லுக்குப் பின்னும் 'அவை' என்னும் சொல்லுக்குப் பின்னும் 'தம்' என்னும் சொல்லே வரவேண்டும்.

இந்த ஒருமை, பன்மைச் சொற்களை உணர்ந்து பயன்படுத்தினால் தமிழில் பிழைகள் ஏற்பட வாய்ப்பு இராது.

110) ஒரு - ஓர் என்னும் சொற்கள்:

'ஒரு', 'ஓர்' என்னும் இரு சொற்களையும் எவ்வளவு பேர் சரியாகப் பயன்படுத்த வில்லையோ அவ்வளவு பேரும் தமிழை ஒழுங்காகப் பயிலவில்லை என்று பொருள். இந்த இரண்டு சொற்களும் எங்கே வரவேண்டும் என்பதைப் பாவலர் தம்

கவிதையில் கூறுகிறார். ஒரு அமைச்சர் ஊழல் செய்கிறார் என்றும் ஒரு ஆம்பல் மலர்ந்தது என்றும் ஒருவர் எழுதுகிறார். இது தவறாகும்; ஓர் அமைச்சர் என்றும் ஓர் ஆம்பல் என்றும் எழுதவேண்டும் என்று பாவலர் கூறுகிறார். இப்படி எழுதினால்,

"சீறிடுவர் தமிழறிந்தோர் இதனைக் கேட்டால்"

என்று சீறுகிறார் பாவலர். காரணம்,

"வருமொழியின் முதலெழுத்தாய் உயிர்இ ருந்தால்
வாய்த்தஒரு ஓர்என்றே திரிந்தொ லிக்கும் "

என்பதுதான். எனவே ஒரு அமைச்சர், ஒரு ஆலமரம், ஒரு இயந்திரம் ஒரு ஈ, ஒரு உயிர், ஒரு ஊர் என்று எழுதாமல் ஓர் அமைச்சர், ஓர் ஆலமரம், ஓர் இயந்திரம் ஓர் ஈ, ஓர் உயிர், ஓர் ஊர் என்று எழுதவேண்டும் என்று உயிர் எழுத்துகளுக்கு முன் ஓர் என்னும் சொல் வரவேண்டும் என்று பாவலர் கூறுவது சரிதானே!

111) அது - அஃது என்னும் சொற்கள்:

அஃதுஎன்னும்உயரியசொல்லைமிகஅரிதாகவேஒருசிலர்பயன்படுத்துகிறார்கள். அது, அஃது என்னும் சொற்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று பாவலர் இங்கே சொல்லுகிறார். வருமொழியில் உயிரெழுத்து வந்தால் அங்கே அஃது என்னும் சொல் வரும். எ. கா.: அஃது ஆடு; அஃது ஏடு. இதனைப் பாவலர்,

வருமொழியில் உயிர்வந்தால் அஃது நிற்கும்
வருவதெது அஃதுஆடு அஃது ஏடு
வருவதுயிர் மெய்யென்றால் அதுவென் றாகும்
வந்ததெது அதுபாம்பு அதுகொத் தாது
பெருமைமிகு அதுஅஃதை உயிர்மெய் உயிர்க்கே
பெயர்த்தெழுதி நிலைமொழியில் செப்பம் செய்து
வருமொழியின் எழுத்தறிந்து சுட்டும் சொல்லின்
வகையறிந்து தவறுகளைக் களைவோம் நாமும் "

என்று பகர்கிறார்.

112) அவை - அவைகள் என்னும் சொற்கள்:

இன்றைக்குப் பலபேர் செய்யும் தவறுகளில் ஒன்று 'அவைகள்' என்னும் சொல். இச் சொல் அஃறிணைப் பன்மைக்குப் பயன்படுத்துவது ஆகும். 'அது' என்னும் சொல் அஃறிணை ஒருமையைக் குறிக்கும். 'அவை' என்னும் சொல் அஃறிணைப் பன்மையைக் குறிக்கும். ஆனால் 'அவைகள்' என்று ஒரு சொல் கிடையாது.

இல்லாத ஒரு சொல்லைப் பயன்படுத்துவது தவறல்லவா? ஆனாலும் பலர் 'அவை' என்னும் சொல்லுடன் 'கள்' விகுதி சேர்த்து 'அவைகள்' எனத் தவறாக எழுதுகின்றனர். இப்படி எழுதுவதைத் தவிர்த்து 'அவை', 'அவற்றை' என்று எழுத வேண்டும் என்று பாவலர் கூறுகிறார்.

113) உண்ணல் - தின்னல் என்னும் சொற்கள்:

உண்ணல் என்னும் சொல்லுக்கும் தின்னல் என்னும் சொல்லுக்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கவே உண்ணல் - தின்னல் என்னும் கவிதை அமைந்துள்ளது.



கடித்தல், மெல்லுதல், சப்புதல், உறிஞ்சுதல், நக்குதல், குடித்தல் தின்னுதல், உண்ணுதல் போன்ற சொற்கள் யாவும் சாப்பிடுதலின் பல வகைகளைக் குறிக்கும் சொற்களாகும்.

சோற்றை உண்ணுதல் என்று சொல்ல வேண்டும்; கறிகாயைத் தின்னுதல் என்று சொல்ல வேண்டும்; கரும்பைக் கடித்தல் என்று சொல்ல வேண்டும்; கடித்தபின் மெல்லுதல் என்று சொல்ல வேண்டும்; பழச்சாற்றை உறிஞ்சுதல் என்று சொல்ல வேண்டும்; தேனை நக்குதல் என்று சொல்ல வேண்டும்; தண்ணீரைக் குடித்தல்

என்று சொல்ல வேண்டும்; பாவலர் இங்கே உண்ணல், தின்னல் என்னும் இரண்டைப் பற்றி மட்டும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

114) அடி என்னும் சொல்:

அடி என்னும் சொல் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதை "அடி" என்னும் கவிதை எடுத்துச் சொல்லுகிறது.

இறைவனின் திருவடியே தஞ்சம் என்றால் இறைவனை முழுதும் நம்பி வணங்குதல் ஆகும். இறைவன்தன் திருவடியே தஞ்சம் என்றால் அடைக்கலத்தை உணர்த்தும்.இறையடியார் என்று சொன்னால் முற்றும் துறந்த துறவி ஆவார். இறையடியில் கிடக்கின்றேன் என்றாலோ இறைவனையே நம்பியுள்ளேன் என்பதாகும்.அடியெடுத்து வைக்காதே என்று சொன்னால் வீட்டுக்குள் வராதே என்று பொருள்.அடிவருடி என்று சொன்னால் தலைவன் சொல்வதைத் தட்டாமல் செய்பவன் என்று பொருள்.

அடியொற்றி நடத்தல் என்றால் சான்றோர் அறிவுரைப்படி நடத்தல் ஆகும். அடிப்படை இது என்றால் அதுவே மூல காரணம் என்று பொருள்.அடியற்ற மரம்போல் வீழ்ந்தார் என்றால் நிலைகுலைந்து போனார் என்று பொருள். அடிதடியில் இறங்கினான் என்றால் கலவரம் செய்தான் என்று பொருள்.அடியாட்கள் என்று சொன்னால் குற்றேவல் செய்வோர் ஆவர்.அடிமை என்றால் உரிமையற்ற வேலையாள் என்று பொருள்.அடியேன் என்றாலோ அடக்கமானவன் என்று பொருள்.

இப்படி அடி என்னும் சொல் பலவாறாகப் பயன்படுவதைப் பாவலர் எடுத்துரைக்கிறார். சொற்களின் பொருள் உணர்ந்து சொல்லால் அடியெடுத்து வைப்போம்.

115) கால் என்னும் சொல்:

கால் என்னும் சொல் எங்கெல்லாம் பயன்படுகிறது; என்னென்ன பொருளில் பயன்படுகிறது என்பதை பாவலர் எடுத்துச் சொல்லுகிறார். அவை என்ன என்பதைப் பார்ப்போம்.

மனிதரின் உடலில் கால் பகுதியாக இருப்பதனால் கால்களைக் கால் என்று சொல்லுகிறோம்.கால் ஊன்றி விட்டான் என்றால் நிலையாக இருக்கிறான் என்று பொருள்.கால் எடுத்து வைத்துள்ளான் என்றால் முயற்சி செய்கிறான் என்று பொருள். கால்கட்டுப் பொடு என்றால் திருமணம் செய்து வை என்று பொருள்.கால்மாறி என்றால் நிலையாக எந்தப் பணியும் செய்யாதவன் என்று பொருள்.கெஞ்சி ஒரு பணி முடிப்பவனை கால் பிடித்துப் பணி முடித்தான் என்று சொல்லுவர். ஓடிக்கொண்டே இருப்பவனை காலில் சக்கரம் கட்டியுள்ளான் என்பர்.உடனிருந்துக் கெடுத்தவனைக் கால்வாரிவிட்டவன் என்பர்.உழைப்பின்றி உண்பவனைக் காலாட்டி உண்போன் என்பர்.நிலையாக இல்லாதவனை கால் போன போக்கில்

போகிறவன் என்பர்.செய்ய முடியாத ஒரு செயலைச் செய்வோனை அகலக்கால் வைப்போன் என்பர்.

இவை யாவும் பாவலர் சுட்டும் சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

116) வயிறு என்னும் சொல்:

வயிறு என்னும் சொல் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதை எடுத்துக் கூறும் பாவலரின் சொல்லோட்டங்களை நாம் இங்கே பார்ப்போம்.

நமது உடலை எண்சாண் என்று நமது முன்னோர் சொல்லுவர். ஆனால் வயிற்றைப் பற்றிச் சொல்லும்பொழுது சாண் வயிறு என்று சொல்வார்கள்.வயிற்றுக்கு நாம் உணவைத் தருகிறோம்.வயிற்றில் பால் வார்த்தான் என்றால் வந்த துன்பம் நீங்கியது என்று பொருள்.ஆனால் வயிற்றில் அடித்தான் என்றால் வருமானத்தைத் தடுத்தான் என்று பொருள்.வயிற்றில் புளியைக் கரைத்தான் என்றால் கடும் அச்சத்தை ஏற்படுத்தினான் என்று பொருள்.வயிறு எரிந்து சாகின்றான் என்றால் பொறாமைப் படுகிறான் என்று பொருள்.வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி என்றால் வெகு சிக்கனமாக என்று பொருள்.அளவில்லாமல் தின்றுக் கொழுத்தவனை வயிற்றாலே சீரழிந்தான் என்பார்கள்.வாயும் வயிறுமாக என்றால் கர்ப்பம் தரித்தவள் என்று பொருள்.

இப்படி வயிறு தொடர்பான சொற்கள் வெவ்வேறு வகையாகப் பயன்பட்டு நமது கருத்துக்கு வளம் சேர்க்கிறது.

நூலாசிரியர் பாவலர் கருமலைத்தமிழாழன்

117) கழுத்து என்னும் சொல்:

கழுத்து என்னும் சொல்லின் பயன்பாடு பற்றி பாவலரின் சொல்லோவியத்தைப் பார்ப்போம்.

நாம் தலை நிமிர்ந்து நிற்கவேண்டுமானால் நமக்குக் கழுத்துச் சரியாக இருக்க வேண்டும். நமது கழுத்தில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் நம் கழுத்துக் கோணல் மாணலாக இருக்கும்.அணிகலன்களை அணிந்து அழகு பார்க்க வேண்டுமானால் நம் கழுத்துச் சரியாக இருக்க வேண்டும்.மூவேந்தர்களும் கழுத்தில்தான் தங்களது ஆத்தி மாலையையும் பனம் மாலையையும் வேப்பம் பூ மாலையையும் அணிந்துப் போருக்குச் சென்றார்கள்.நம் அரசியல் தலைவர்களுக்கு மேடைதோறும் கழுத்திலே மாலையை அணிவிப்பார்கள்.கழுத்து என்னும் சொல் ஓர் உறுப்பாக மட்டும் இல்லாமல் பல பொருள்களைத் தரும் பெயராகவும் இருக்கிறது.எப்பொழுதும் பேசிக்கொண்டே இருப்பவர் வந்துவிட்டால் கழுத்தறுப்பு வந்துவிட்டது என்பார்கள்.வறுமையில் வாழும் பெற்றோருக்காக விருப்பம் இல்லாமல் கழுதை நீட்டி வயதான கிழவரோடு வாழ்வதாகச் சில பெண்கள் சொல்வர்.கட்டாயப்படுத்தி ஒரு வேலையைத் திணித்துவிட்டால் கழுத்திலே கட்டிவிட்டார் என்பார்கள்.கட்டாயப்படுத்தி வெளியேற்றி விட்டால் கழுத்தைப் பிடித்து தள்ளிவிட்டார் என்பார்கள்.

இவ்வாறு கழுத்து என்னும் சொல் வெவ்வேறு கருத்துகளுக்குத் துணை நிற்கிறது.

118) வாய் என்னும் சொல்:

வாய் என்னும் இந்தச் சொல்லின் பயன்பாட்டை இங்கே பார்க்கலாம்.

நமக்கு ஏற்படும் நோய்களுக்கெல்லாம் காரணமாக இருப்பதும் நம்முடைய வாய்தான். அந்த நோய்களைத் தடுப்பதும் வாய்தான்.நாய்போல் குரைப்பதும் வாய்தான்; நயமாகப் பேசுவதும் வாய்தான்.அடக்கமின்றிப் பேசுகின்றப் பெண்ணை வாயாடி என்பார்கள்.வாய் நீளம் என்பார்கள் துடுக்காகப் பேசுவோனை.இப்படி இன்னும் வேறு வேறு வகையில் வாய் என்னும் சொல் விரிந்து செல்கிறது.

119) நாக்கு என்னும் சொல்:

நமக்கு நாக்கு என்பது ஓர் இன்றியமையாத உறுப்பாகும். அந்த நாக்கு தொடர்பான சொற்கள் யாவை? அந்தச் சொற்கள் தரும் கருத்துகள் யாவை என்பதைப் பார்ப்போம்.

பல் போனால் சொல் போகும் என்பது பழமொழி. ஆம். பல் போனால் சொல் மட்டும்தான் போகும். ஆனால் நாக்கினால் பகுத்துணரும் திறன் போனால் சுவையே போய்விடும் என்று கூறுகிறார் பாவலர். உண்மைதான்.

நல்லவன் யார்? கெட்டவன் யார்? என்பதை அவர்களுடைய நடத்தையை வைத்து நாம் அறிந்துகொள்ளலாம்; அவர்களது சொல்லை வைத்து அறிந்து கொள்ள முடியாது.தீய சொற்களை நெருப்பாகக் கொட்டும் அதே நாக்குதான் நயமாகவும

பேசுகிறது;சொல் விளையும் நெற்களமாக இருந்து நற்கருத்துகளையும் கொட்டுகிறது.நாக்கினில் நரம்பின்றிப் பேசுவோன் நன்றி இல்லாதவன் ஆவான். பண்புடன் அமைதியாகப் பேசுவோனை நாவடக்கம் உடையவன் என்பர்.மானம் கெட்டு வாழ்வதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் என்பர் சான்றோர். ஈனமானம் இல்லாமல் சாப்பிடப் போவோனை நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு போவோன் என்பார்கள்.தீய சொல் சொல்பவனைக் கரி நாக்கன் என்பார்கள்.என்று சொல்லிவிட்டு, முத்தாய்ப்பாக,

"தானத்தை விடநிதானம் பெரிதாம்; நாக்கு
தருமடக்கம் அதனினும்நல் உயர்வாய் உணர்வீர்"

என்று சொல்லுகிறார்.

120) மூக்கு என்னும் சொல்:

நாக்கு, வாய், கழுத்து, வயிறு, கால் ஆகியவற்றைப் பற்றி எடுத்துச் சொன்ன பாவலர் அடுத்து, மூக்கைப்பற்றிக் கூறுகிறார்.

நாற்றம் என்னும் சொல் தற்காலத்தில் கெட்ட வாசனை என்னும் பொருளில் பேசப்படுகிறது. உண்மையில் நாற்றம் என்னும் சொல் நல்ல நறுமணம் என்னும் பொருளில் பழந் தமிழகத்தில் வழங்கி வந்தது. நாமும் அதே பொருளில் பயன்படுத்துவதே சிறப்பாகும்.

ஆடு மாடுகள், நாய், குதிரை போன்ற விலங்குகளிலும் பறவை இனங்களிலும் வேறு வேறு வகைகள் இருந்தாலும் அவற்றில் உயர்வு தாழ்வு என்று பார்க்காத நாம், மனித இனத்தில் மட்டும் உயர்வு தாழ்வைக் கற்பிக்கிறோம்.

மலர்களில் வெவ்வேறு பிரிவு இருந்தாலும் அவற்றை அழகான மாலையாகத் தொடுத்துச் சூடுகின்றோம். அதுபோல மனிதர்களிலும் சாதி சமய வேறுபாடு பார்க்காமல் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் என்று பாவலர் கூறுகிறார்.

எல்லோரும் மூக்கின் மேல் விரலை வைத்து வியப்பது போல நற்செயல்கள் செய்ய வேண்டும்.பிறர் தூற்றுமாறு மூக்கு அறுபட்டு வீழ்தல் கூடாது.நல்லோர் அவையில் மூடர்கள் தம் மூக்கை நீட்டுதல் கூடாது.மூக்கு உடைபட்டான் என்னும் பழியை ஏற்குமாறு நடந்து கொள்ளக் கூடாது.

இப்படி மூக்கு தொடர்பான மரபுச் சொற்களைப் பற்றி மூக்கு என்னும் கவிதையில் பாவலர் சொல்லுகிறார்.

பராசக்தியும் மொழிப்போரும் (3)

முனைவர் சிவ இளங்கோ
புதுச்சேரி.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் முதல் மொழிப்போர் (1937-1940) தற்காலிகமாக ஒரு முடிவுக்கு வந்தாலும், அது ஏற்படுத்திய விளைவுகள் பின்னாட்களில் தமிழ்நாட்டின் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.

முதல் மொழிப்போர் சென்னை மாகாணத்தின் அரசியல்வாதிகளால் தொடங்கப்படவில்லை. மாறாக, தமிழ்ப் பற்றுள்ள சான்றோர்களால் தான் முதலில் தொடங்கப்பட்டது. சென்னை மாகாணத்தில் 1937 ஆம் ஆண்டு தேர்தல் நெருங்கியிருந்த வேளையில், இந்தியாவில் பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இந்தி மொழியே இருக்க வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சி முடிவு செய்தது. இதற்கு எதிர்வினையாக, மறைமலை அடிகள், "இந்தி பொதுமொழியா?" என்ற நூலை எழுதினார். நாவலர் சோமசுந்தர பாரதியார், "இந்தி கட்டாயப் படமா?" என்ற நூலை எழுதினார். அத்தேர்தலில் பெரியார் காங்கிரசைக் கடுமையாக எதிர்த்தாலும், அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி முதன் முறையாக வென்றது. பெரியார் ஆதரித்த நீதிக்கட்சி வெற்றி பெறவில்லை.

15. 7. 1937 அன்று காங்கிரஸ் அமைச்சரவையின் பிரதான அமைச்சராகப் பதவியேற்ற ராஜகோபால் ஆச்சாரி, 21. 4. 1938 அன்று சென்னை மாகாணப் பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயம் கற்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தார். இதனை எதிர்த்து, 1.6.1938 ஆம் நாளிலிருந்து அறப்போர் தொடங்கப் போவதாக ஈழத்துச் சிவானந்த அடிகள் அறிக்கை வெளியிட்டார்.

இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ்ச் சான்றோர்கள் செய்த போராட்ட முறையைப் பெரியார் ஆதரிக்கவில்லை. இப்படி மறியல் செய்வது, காங்கிரசார் மேற்கொள்ளும் பயன் தராத முறை என்றார். ஆனாலும் தமிழ்ச் சான்றோர்கள் தொடர்ந்து மறியல் நடத்தி வரவே, பெரியார் அவர்களை அனுசரித்துத் தானும் அப்போராட்டத்தில் கலந்து கொண்டார். சென்னை மாகாணத்தில், 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது மொழிப் போரில் ஈழத்துச் சிவானந்த அடிகள் உட்படத் தமிழ்ச் சான்றோர்கள் பலரது பங்களிப்பும் மிக இன்றியமையாததாகும்.

இந்நிலையில், பெரியார் ஆதரித்த நீதிக்கட்சி அத்தேர்தலில் தோற்றதால், நீதிக்கட்சியின் நெடுநாளைய தலைவர்களில் பலர் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டனர். பெரியார், சுயமரியாதை இயக்க தலைவராகத் தொடர்ந்து மொழிப்போரில் ஈடுபட்டு வந்தார். ஒரு கட்டத்தில் பெரியாரும் கைது செய்யப்பட்டுச் சிறைக்குச் சென்றார். அவருடைய சிறைவாசத்தின் போது நீதிக்கட்சியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறையை விட்டு வெளியில் வந்தார். ஏற்கனவே சமூக இயக்கமாகத் தொடங்கியிருந்த சுயமரியாதையை இயக்கத்தின் தலைவராகவும், அரசியல் கட்சியாக வளர்ந்திருந்த நீதிக் கட்சியின் தலைவராகவும் ஒரே நேரத்தில் அவர் தனது பணிகளைத் தொடர்ந்தார். இந்தப் பின்னணி, எதிர்காலத் தமிழ்நாட்டின் அரசியலிலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பல விளைவுகளை ஏற்படுத்தியது.



இந்தி எதிர்ப்புப் போராட்டம் - இரண்டாம் கட்டம்

பத்தாண்டுகளுக்குள் இந்தித் திணிப்பு மீண்டும் தலை தூக்கியது. சென்னை மாகாணத் தலைமை அமைச்சராக ஓமந்தூர் ராமசாமி இருந்த போது கட்டாய இந்தியைக் கொண்டு வந்தார். சற்றும் தாமதிக்காமல், 1948 செப்டம்பர் 15 அன்று பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். "தமிழ்நாட்டில் கட்டாய இந்தி மீண்டும் தலைகாட்டி விட்டது. அதன் அடக்குமுறை ஆர்ப்பாட்டங்களுக்குப் பல நூற்றுக்கணக்கான தோழர்கள் இதுவரை ஆட்பட்டு விட்டனர். இனியும் ஆட்படுவோர் பலர். முன்னைவிட

இப்பொழுது, இந்தியின் பாதுகாப்புக்கென அனுப்பப் பட்டிருக்கும் படை வரிசைகள், அதிக வலிமை பொருந்தியவை என்பதை யாவரும் அறிவர். சுயராஜ்ய ஆட்சில்லவா இது! எனினும் பெரியார் தொடுத்த போர் சூழ்ச்சிக்காரரின் ஏளன எல்லையையும் தாண்டிவிட்டது. திராவிடர் மேற்கொண்ட வீரப்போர், வெற்றியின் எல்லையை நாடி அடி வைத்து விட்டதை அவர்களே அறிவர்" என்று, 'இந்தி மறுப்புப் பாடல்கள்' என்ற தனது கவிதை நூலின் பதிப்புரையில் (22/9/1948) கவிஞர் புதுவைச் சிவம் குறிப்பிட்டிருப்பது இரண்டாம் கட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் நிலையைத் தெளிவாக்குகின்றது.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் - மூன்றாம் கட்டம்

இந்திய குடியரசுத் தலைவரால் 7.6.1955 அன்று ஆட்சி மொழி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது அக்குழுவின் பணிகள் இந்தித் திணிப்பை முதன்மையாகக் கொண்டவை. இதனைத் தொடர்ந்து 17.7.1955 அன்று, திருச்சியில் கூடிய திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகக் குழு, மத்திய அரசின் இந்தித் திணிப்புப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தியத் தேசியக் கொடியைக் கொளுத்துவது என்று தீர்மானித்தது. இதனால் அதிர்ந்து போன அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சர் காமராஜர், தேர்வுகளில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்காது என்றும், இந்தி திணிக்கப்படாது என்றும் உறுதிமொழி அளித்ததை அடுத்து கொடியைக் கொளுத்தும் போராட்டத்தை ஒத்தி வைப்பதாகப் பெரியார் அறிவித்தார்.

மத்திய அரசு 1955 இல் ஏற்படுத்தியிருந்த ஆட்சி மொழி ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்டிருந்த பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில், சென்னை மாகாணத்தைச் சேர்ந்த டாக்டர் சுப்பராயன், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சுனில் குமார் சட்டர்ஜி இருவரும் இந்தித் திணிப்புக்கு எதிரான அறிக்கையைக் கொடுத்தனர். ஆனாலும் ஆட்சி மொழி ஆணையத்தின் அறிக்கையை மீண்டும் ஆய்வு செய்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் வல்லப பந்த் தலைமையில் முப்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு, ஒன்றிய அரசால் அமைக்கப்பட்டது. எதிர்பார்த்தபடியே அக்குழுவின் அறிக்கை ஆட்சிமொழி ஆணையத்தின் இந்திமொழித் திணிப்பு நடவடிக்கைகளை வரவேற்று அறிக்கை தந்தது. இதனால் 1958 ஆம் ஆண்டில் இந்தி பேசாத மக்கள் மீண்டும் தங்கள் எதிர்ப்பைப் போராட்டங்கள் வழித் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

இதற்கிடையே, 1957ஆம் ஆண்டு மெட்ராஸ் ஸ்டேட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதன்முதலாகக் களத்தில் இறங்கிய திமுகவிற்கு, 15 சட்டமன்ற உறுப்பினர்கள் கிடைத்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களாக ஈ.வெ.கி.சம்பத், தர்மலிங்கம் ஆகிய இருவர் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். இது பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட மொழிப் பிரச்சனையில் ஈ.வெ.கி. சம்பத் விவாதங்களில் காட்டமாகப் பங்கு கொள்ள வழிவகுத்தது. மேலும் ஈ.வெ.கி.சம்பத், தலைமை அமைச்சர் நேருவைச் சந்தித்து, இந்தி பேசாத மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தார். இது நேருவுக்கு உண்மையான புரிதலைக் கொடுத்தது என்று கூற வேண்டும். இது தொடர்பான கடிதங்களில், "இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி மொழி அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது" என்ற உறுதி மொழியை

சம்பத்திடம் எழுத்துப் பூர்வமான கடிதமாக நேரு அளித்தார். இதன் தொடர்ச்சியாக இந்தியத் தலைமை அமைச்சர் நேரு தன் பாராளுமன்ற உரையில், "இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி திணிக்கப்படாது என்றும், இதற்கான முடிவு கூறும் உரிமை இந்தி பேசாத மக்களிடமே இருக்கும் என்றும் 7. 8.1959 அன்று உறுதிமொழியாக அளித்தார். நேருவின் இந்த வாக்குறுதியை நம்பி இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள் கைவிடப்பட்டன.

திராவிட நாடு பிரிவினை தடைச் சட்ட மசோதா

1962 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் நடந்த பொதுத் தேர்தலில் மெட்ராஸ் ஸ்டேட்டில், திமுக 50 இடங்களிலும், நாடாளுமன்றத்துக்கு ஏழு இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தது. சட்டமன்றத் தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த அண்ணா, 20/4/1962 அன்று நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராளுமன்றத்தில் அவருடைய உரைகளால் காங்கிரஸ் அரசாங்கம் அரண்டு போனது. அவருடைய கன்னிப் பேச்சிலேயே, "திராவிட இன வழி வந்த எங்களுக்குச் சுய நிர்ணய உரிமை வேண்டும்" என்று கோரினார். அண்ணாவின் இந்த பேச்சு, திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்துவதாகக் காங்கிரஸ் கருதியது. அதனால் பிரிவினைத் தடைச்சட்டத்திற்கான மசோதாவைப் பாராளுமன்றத்தில்

கொண்டு வந்தது. அந்த விவாதத்தில் 25 .1 .1963 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய அண்ணா, "இந்தியா முழுவதும் சென்று எல்லா அரசியல் கட்சிகளையும் சந்தித்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, மக்களாட்சி முறையின் நாகரிகத் தன்மைக்காவது திமுகவைத் தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. ஒரு சாமானிய மனிதனான என்னை சமாளிப்பதற்காக இத்தனை பலம் வாய்ந்த இந்திய நாடாளுமன்றம் ஒரு சட்டத்தை உருவாக்குவது விற்பளிக்கிறது" என்று கூறினார். ஆனாலும் பிரிவினைத் தடை சட்ட மசோதாவைக் காங்கிரஸ் நிறைவேற்றியதால் திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட வேண்டிய கட்டாயத்திற்கு திமுக தள்ளப்பட்டது. அதனால் "இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைப் பெற்று நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது" என்று 3.11.1963 அன்று கூடிய திமுக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் - நான்காம் கட்டம்

பாராளுமன்றத்தில் 13. 4. 1963 அன்று உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி ஆட்சி மொழி மசோதாவை அறிமுகப்படுத்திய போது, 1965 ஜனவரி 26 ஆம் நாள் முதல் இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழியாகும் என்று அறிவித்திருந்தார். இதனால், 3.8.1963 அன்று திமுகவின் பொதுக்குழுக் கூட்டத்தில், இந்தித் திணிப்பை எதிர்த்து திமுக நேரடிப் போராட்டங்களைத் தொடங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து இந்தி எதிர்ப்பு மாநாடுகள் சேலம், தஞ்சாவூர், நெல்லை, சென்னை உள்ளிட்ட பல பகுதிகளிலும் நடத்தப்பட்டன. 13.10.1963 அன்று சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில், இந்தித் திணிப்பை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவைத் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டமும், மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்பாக மறியல் நடத்தும் போராட்டமும் அறிவிக்கப்பட்டன.

இப் போராட்டங்கள், ஒவ்வொரு மாவட்டமாக, 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தொடர்ந்து நடத்தப்படும் என்ற அறிவிப்பும் வெளியானது. இதனையொட்டிக் காங்கிரஸ் அரசாங்கம் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் 144 தடை உத்தரவைப் பிறப்பித்தது. தமிழ்நாடு முழுவதும் 1963 இறுதி தொடங்கி, அரசியல் சட்ட எரிப்புப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அண்ணாவும் அவரோடு இருந்து திமுக தலைவர்களும் காஞ்சிபுரத்தில் இருந்து சென்னை வரும் வழியில் 16.11.1963 அன்று கைது செய்யப்பட்டனர். ஆனாலும் அரசியல் சட்டப் பிரிவு கொளுத்தும் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இந்நிலையில் 27. 5. 1964 அன்று திடீரென்று தலைமை அமைச்சர் நேரு காலமானார். ஆதலால் போராட்டச் சூழ்நிலை மாறியது.

(தொடரும்)

மலைகளில் இளைய மலை: இமயமலை

ச. சபாரத்தினம்,

புவியியலாரீ, கோவை, இமயமலை

ஆம், இருக்கின்ற மலைகளிலேயே இமயமலை இளைய மலை. நாம் வாழும் பூமியின் வயது 4,500 மில்லியன் ஆண்டுகள் (1 \text{ மில்லியன்} = 10 \text{ லட்சம்}). இமயமலையின் வயது 50 மில்லியன் ஆண்டுகள் மட்டுமே.

அப்போது, இந்தியாவின் தீபகற்ப முக்கோணப் பகுதியும், வடக்கில் உள்ள நிலப்பகுதியும் மோதிக் கொண்டன. தட்டு நகர்வுக் கொள்கையின் படி (Plate Tectonics) சொல்வதென்றால், இந்தியத் தட்டும், யூரேசியத் தட்டும் மோதிக் கொண்டதால், பூமியின் மேற்பரப்பில் பெரிய பெரிய வளைவுகளும், மடிப்புகளும் தோன்றின. இவ்வாறு தோன்றியது தான் இமயமலை. இமயமலைத் தொடர்கள் மடிப்புகளுடன் அடுக்கடுக்காகக் காணப்படுவதால், மடிப்பு மலைகள் (Folded mountain) என்று அழைக்கப்படுகின்றன.

இமயமலை இன்று இருக்கின்ற இடத்தில் டெத்திஸ் (Tethys) என்னும் கடல் இருந்ததற்குச் சான்றாக, அங்கு பல கடல் படிமங்கள் (Marine fossils) காணப்படுகின்றன. ஒரு காலக்கட்டத்தில் வாழ்ந்து மடிந்து போன உயிரினங்களின் எஞ்சிய உடற்பகுதிகளே படிமங்கள் எனப்படுகின்றன. இவற்றில் திசுக்கள், சதைகள் போன்ற மெல்லிய பகுதிகள் அழிந்து போய், ஓடுகள், சிப்பிகள் போன்ற உறுதியான கூறுகளில் சிலிக்கா, கார்பொனேட் போன்ற

அனைத்துப் பொருட்கள் ஆக்கிரமித்து, உருவம்

மாறுபடாமல் இருக்கும். இந்தப் படிமங்களைத் தொல்லுயிர் எச்சங்கள் என்றும் கூறலாம்.

இமயமலைத் தொடரில் குறிப்பாக, கைலை - மானசசரோவர் பகுதிகளில் கடல்வாழ் உயிரினங்களின் படிமங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. டெத்திஸ் கடலில் வாழ்ந்து மறைந்த கடல் நத்தைகளின் படிமமான "அம்மோனைட்" என்பதே, சாளக்கிராமம் என்ற பெயரில், வைணவக் குடும்பங்களில் பூஜை அறையில் வைத்து வணங்கப்படுகிறது.

இமயம் வடமேற்கிலிருந்து தென்கிழக்காகப் பரவியுள்ளது. இமயமலைத் தொடர் என்பது ஒரு தனிப்பட்ட மலையின் தொடர் அல்ல. ஒன்றுக்கொன்று இணையாக உள்ள பல மலைத் தொடர்களும், பள்ளத்தாக்குகளும், பீடபூமிகளும் கொண்ட அமைப்பாகும்.

சிந்து கங்கை சமவெளியில் தொடங்கி வெளி இமயமலைப்பகுதி, சிறு இமயமலைப்பகுதி, உள் அல்லது பெரிய இமயமலை என்ற வகைப்படுத்திப் பிரிக்கலாம்.

பெரிய இமயமலைத் தொடர் என்பது, சிறிய இமயமலைத் தொடர் மற்றும் காரகோரம், இந்து குஷ் போன்ற மலைத் தொடர்கள் இதனோடு தொடர்புடையவனாகக் காணப்படுகின்றன.

மேற்கண்ட தொடர்களில் எவரெஸ்ட், கஞ்சன் ஜங்கா, கே2, காட்வின் ஆஸ்டின்.

நவகிரி, நங்கபர்வதம், நந்தாதேவி போன்ற பல சிகரங்கள் உள்ளன.

கயிலை மலை உத்திரப்பிரதேசத்திலுள்ள "அல்மோரா" என்ற இடத்திலிருந்து சுமார் 380 கி.மீ தொலைவிலும், திபெத்தின் தலைநகர் லாசாவில் இருந்து சுமார் 1200 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

கயிலை மலையை வலம்வர வேண்டுமென்றால் அதன் சுற்றளவான 52 கி.மீ தொலைவைக் கடக்க வேண்டும். இந்தச் சுற்றுப்பாதையில் பல பௌத்த மடங்கள் உள்ளன. இந்துக்களைப் போலவே பௌத்தர்களுக்கும், கயிலாய மலை ஒரு புண்ணியத் தலமாகும்.

கயிலாய மலையின் தெற்குப் பகுதியில், சுமார் 32 கி.மீ தொலைவில் மானசசரோவர் - ராட்சஸ்தல் ஆகிய இரட்டை ஏரிகள் உள்ளன. இவை முறையே நன்மை, தீமைகளின் சின்னங்களாக ஆன்மிகத்தில் நம்பப்படுகின்றன. எனினும் அறிவியலின்படி, இரண்டும் நன்னீர் கொண்ட ஏரிகளே.

கயிலாய மலையின் சுவர்கள் "கங்ளாமரேட்" (Conglomerate) எனப்படும் உருளைக் கற்களின் தொகுப்பாலான பாறைகளாகும். அவை "இயோசின்" (Eocene) என்னும் காலகட்டத்தைச் சார்ந்தவையாகும். அதாவது ஏறக்குறைய 55 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். தவளகிரி, நங்கபர்வதம், நந்தாதேவி போன்ற பல சிகரங்கள் இமயமலைத் தொடரில் காணப்படுகின்றன. கயிலை மலை உத்திரப்பிரதேசத்திலுள்ள "அல்மோரா" என்ற இடத்திலிருந்து சுமார் 380 கி.மீ தொலைவிலும், திபெத்தின் தலைநகர் லாசா விலிருந்து சுமார் 1200 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

கயிலை மலையை வலம்வர வேண்டுமென்றால் அதன் சுற்றளவான 52 கி.மீ தொலைவைக் கடக்க வேண்டும். இந்த சுற்றுப்பாதையில் பல பௌத்த மடங்கள் உள்ளன. இந்துக்களைப் போலவே பௌத்தர்களுக்கும், கயிலாய மலை ஒரு புண்ணியத் தலமாகும்.

கயிலாய மலையின் தெற்குப் பகுதியில், சுமார் 32 கி.மீ தொலைவில் மானசரோவர் - ராட்சஸ்தல் ஆகிய இரட்டை ஏரிகள் உள்ளன. இவை முறையே நன்மை, தீமைகளின் சின்னங்களாக ஆன்மிகத்தில் நம்பப்படுகின்றன. எனினும் அறிவியலின்படி, இரண்டும் நன்னீர் கொண்ட ஏரிகளே.

கயிலாய மலையின் சுவர்கள் "கங்ளாமரேட்" (Conglomerate) எனப்படும் உருளைக் கற்களின் தொகுப்பாலான பாறைகளாகும். அவை "இயோசின்" (Eocene) என்னும்

காலகட்டத்தைச் சார்ந்தவையாகும். அதாவது ஏறக்குறைய 55 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும்.

இமயமலையின் பெரும்பகுதிகள் வெகு காலம் வரை ஆராயப்படாமல் இருந்தது. பின்னாளில் எவரெஸ்ட் சிகரம், திபெத், காரகோரம் போன்ற பகுதிகளில் மலையேற்றமும், ஆராய்ச்சியும், பெருந்தகவல்களைக் கொண்டு வந்தன. பெரிய இமயமலைத் தொடரின் (Great Himalayan Range) மைய அச்சின் நீளம் 2,500 கி.மீ ஆகும். அகலம் 160 லிருந்து 400 கி.மீ வரை ஆகும்.

இமயமலைப் புவியியல்

இந்திய புவியியல் பற்றிய ஆய்வுகளில் "இமயமலைப் புவியியல்" (Himalayan Geology) என்பது ஒரு முக்கியமான பிரிவாகும். டாக்டர் ஓல்டு ஹேம், டாக்டர் ஹைடன் முதலிய ஆங்கிலேய புவியியலாளர்கள் இத்துறையில் முன்னோடிகளாக இருந்தனர்.

டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன், டாக்டர் டி. என். வாடியா ஆகிய இந்திய புவியியல் அறிஞர்களும் இத்துறையில் சிறப்பாகப் பணியாற்றினர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது, முதல் சர்வேயர் ஜெனரலாக நியமிக்கப்பட்ட வில்லியம் லேம்ப்டன், முசோரிக்கும், கன்னியாகுமரிக்கும் இடையிலான பெரு வரைவுக் கோடு (Great Meridional Arc) வரைந்து, முக்கோண நில அளவைப் பணியைத் தொடங்கும் திட்டத்தை ஆரம்பித்து நடத்தினார். ஆனால் அந்த ஆராய்ச்சிகள்

முழுமை அடையுமுன் அவர் காலமாகிவிடவே, ஜார்ஜ் எவரெஸ்ட் பொறுப்பேற்று அதை நிறைவு செய்தார். இந்த பெரும் முக்கோண நில அளவைப் பணியின் விளைவாகத் தான், உலகிலேயே உயர்ந்த சிகரம் கண்டுபிடிக்கப்பட்டது. ஜார்ஜ் எவரெஸ்ட் மறைவிற்குப் பின், அவர் நினைவாக அந்த சிகரத்திற்கு "எவரெஸ்ட் சிகரம்" என்று பெயர் சூட்டப்பட்டது.

இமயமலைப் பகுதிகளில் தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு, பாறை உப்புகள், சுண்ணாம்புக்கல், சில்வர் முதலிய கனிமவளங்கள் அறியப்பட்டுள்ளது. ஆனால் அவற்றை அகழ்ந்து எடுத்துப் பயன்படுத்த முடியுமா என்பது இன்னும் ஆராய்ச்சிக்கு உரியதாகும்.

இமயத்தில், மலைப்பகுதிகளுக்கே உரிய வண்ணப் பூச் செடிகள், பாறைகளில் தவழும் கொடி வகைகள், புல் வகைகள், நீர்த் தாவரங்கள், காளான்கள் ஆகியவை உள்ளன. தாவரவியல் அறிஞர்கள், சித்த, ஹோமியோபதி மருத்துவர்கள் ஆகியோருக்கு இவை மருத்துவ ஆராய்ச்சிக்குப் பயன்படும்.

வனப்பகுதிகளில் சிறுத்தைகள், கரடிகள், மற்றும் காட்டெருமை, குதிரை வகைகள், ஆடு வகைகள், கஸ்தூரி மான்கள், நீர்நிலைகளில் மீன்கள் காணப்படுகின்றன. புகழ்பெற்ற

பறவையியல் அறிஞர் சலீம் அலி, இமயத்தில் காணப்படும் எண்ணற்ற பறவை வகைகளைப் பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் சிறப்புகள் பெற்ற இமயமலை, நம் நாட்டுக்கு வடக்கு எல்லையாக நின்று, நாட்டின் அரணாகவும் விளங்குகிறது.

“பௌதிக அறிவியலின் தோற்றமும் பண்டய இந்தியாவின் பங்களிப்பும்--1

டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்

ஆராய்ச்சியாளர், புதுவை

முன்னுரை

பௌதிக-சடப்பொருள் உலகின் இருப்பை சாதாரண மக்கள் எவரும் ஐயுறுவதில்லை. காண்பானிற்கு புறத்தே உலகம் சுயாதீனமாக இயங்குகிற தென்பதில் அவர்களிற்கெதுவித சந்தேகமுமிருப்பதில்லை. ஆனால் மெய்யியலாளர்களோ மேற்படி கூற்றின் உண்மை/பொய் பற்றிக் காலங் காலமாக விவாதித்து வந்துள்ளனர். சடப்பொருள் உலகின் இயல்பை நிறுவுவது மிகவும் சிரமமானதென்பது உண்மையே எனினும், இற்றைவரை அவர்கள் தம்முயற்சியைக் கைவிடவில்லை.

ஐயவாதிகளான மெய்யியலாளர்கள் உலகின் இருப்பை நிறுவுவதென்பது தருக்க ரீதியாக ஒரு பொழுதும் சாத்தியமில்லையென எடுத்துக்காட்டிய பின்னருங் கூட இம்முயற்சிகள் ஓய்ந்த பாடில்லை. இன்னமும் முழுமையாக இந்தியா தொல் குடிகளின் சிந்தனை மரபு ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை ,இப்போது இது சரியான தருணம்

பௌதிக அறிவியல் என்பது இயற்கையின் அடிப்படை இயக்கங்களையும், பண்புகளையும் ஆராயும் ஒரு அறிவியல் துறையாகும். இது ‘‘கடின அறிவியல்’’ என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது அறிவியல் முறைமைகளைப் பயன்படுத்தி சோதிக்கக்கூடிய கருதுகோள்களை உருவாக்குகிறது. இந்தியாவில் பௌதிக அறிவியல் பல நூற்றாண்டுகளாக பரிணாமம் அடைந்து வந்துள்ளது. இந்தக் கட்டுரை, பௌதிக அறிவியலின் அடிப்படைகள், இந்தியாவின் பங்களிப்பு, தத்துவத்துடனான அதன் தொடர்பு, மற்றும் அதன் சமூகப் பின்னணி ஆகியவற்றை ஆராய்கிறது.

பௌதிக அறிவியலின் பிரிவுகள்

பௌதிக அறிவியல் பல முக்கிய கருத்துகளை உள்ளடக்கியது. இவற்றில் சில முக்கியமானவை:

1. இயக்கம் (Motion):

இயக்கம் என்பது பௌதிக அறிவியலின் மையக் கருத்து. இயக்கத்தைப் புரிந்துகொள்ள வேகம், திசைவேகம் போன்ற அளவீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இயக்கம் பல இயற்பியல் செயல்முறைகளை உள்ளடக்கியது, இது புரிந்துகொள்ளப்படுவது அவசியம்.

2. ஆற்றல் (Energy):

ஆற்றல் என்பது ஒரு பொருளின் நிலையை மாற்றும் திறனைக் குறிக்கிறது. சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், புவிவெப்ப ஆற்றல் போன்றவை ஆராயப்படுகின்றன. எதிர்காலத்தில் இணைவு ஆற்றல் *(fusion energy)* போன்ற புதிய ஆற்றல் மூலங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

3. வெப்பம் (Heat):

வெப்பம் ஒரு தனித்துவமான ஆற்றல் வடிவம். இது ஒளியை உருவாக்கி, பொருளை திட நிலையிலிருந்து திரவமாகவும், திரவத்திலிருந்து வாயுவாகவும் மாற்றும் திறன் கொண்டது. வெப்ப ஆற்றல் மூலம் இயந்திர ஆற்றலையும் உருவாக்க முடியும்.

இந்தியாவில் பௌதிக அறிவியலின் தோற்றம்

பண்டைய இந்தியாவில் பௌதிக அறிவியல் முறைப்படுத்தப்பட்ட தனித்துறையாக இல்லாவிட்டாலும், மருத்துவம், உலோகவியல், கட்டுமானத் தொழில்நுட்பம், மற்றும் துணி உற்பத்தி போன்ற துறைகளில் அதன் பயன்பாடுகள் காணப்பட்டன. இவை பெரும்பாலும் அனுபவ அடிப்படையிலும், சோதனை மற்றும் ''பிழை அதில் செய்யபடும் திருத்தம் ''முறையிலும் உருவாகின. இயற்கை நிகழ்வுகள்—கடல் அலைகள், மழை, சூரியன், நிலவு, பருவ மாற்றங்கள்—பற்றிய ஆய்வுகள் வேத இலக்கியங்களில் , தமிழ் சித்தர்கள் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக, சூரிய வெப்பத்தால் நீராவி ஆவியாகி மேகங்களாக மாறி மழையாகப் பொழிவது பற்றிய குறிப்புகள் உள்ளன.

தத்துவமும் பௌதிக அறிவியலும்

இந்தியாவில் பௌதிக அறிவியலின் வளர்ச்சி தத்துவத்துடன் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்திருந்தது.

மத நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள், மற்றும் சடங்குகள் அறிவியல் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்தபோதிலும், பகுத்தறிவு தத்துவம் அறிவியலை முன்னெடுத்துச் சென்றது. வைசேஷிகர்களின் *(6*ஆம் நூற்றாண்டு கி.மு.*)* ஆரம்பகால நூல்கள் தாவரங்கள் மற்றும் இயற்கைப் பொருட்களின்

பண்புகளை பதிவு செய்தன. இயற்கை நிகழ்வுகளை வகைப்படுத்தி, பொருளின் அடிப்படைக் கூறுகள் பற்றிய கோட்பாடுகளை முன்வைத்தன.

வைசேஷிகம் (வைசேடிகம்): இந்திய தத்துவ மரபுகளில் ஒன்று. ஆறு தரிசனங்கள் என்று இந்து மரபு வகுத்துரைப்பனவற்றில் ஒன்று. தொன்மையான அணுக்கொள்கையை முன்வைப்பது. பொருட்களின் நுண்வடிவமான அணுவுக்கு உள்ள தனித்தன்மைகளே அப்பொருளின் இயல்பாக ஆகின்றன என வரையறை செய்கிறது.

இது இந்து ஞானமரபின் ஆறு தரிசனங்களான சாங்கியம், யோகம், வைசேஷிகம், நியாயம், பூர்வமீமாம்சம், உத்தரமீமாம்சம் என்னும் ஆறில் ஒன்று.

இந்திய தர்க்கவியலான நியாயம் வைசேஷிகத்தின் துணைத்தரிசனம். இதன் ஆசிரியர் கணாதர்.

துகள் இயற்பியல் (Particle Physics)

இந்தியாவில் துகள் இயற்பியல் கருத்துகள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றின.

இந்து, பௌத்த, சமண தத்துவப் பள்ளிகள் அணுக்கள் பற்றிய கருத்துகளை முன்வைத்தன. அணுக்கள் பிரிக்க முடியாதவை, அழிக்க முடியாதவை என்றும், அவை இரட்டையாகவோ (dyads) மூவிலியாகவோ (triads) இணைந்து பொருட்களின் பண்புகளை தீர்மானிப்பதாகவும் கருதப்பட்டது.

சமணர்கள் வினையூக்கி (catalyst) அணுக்களின் பங்கையும் குறிப்பிட்டனர்.

இது மூலக்கூறு கோட்பாட்டிற்கு (molecular theory) வழிவகுத்தது. மருத்துவம், உலோகவியல் போன்ற துறைகளில் வினையூக்கிகளின் பயன்பாடு இதை உறுதிப்படுத்தியது. இந்த ஆறிவுதான் தொல் தமிழர்களை உருக்கு இரும்பு செய்ய உதவியது .

ஒளியியலும் ஒலியியலும் (Optics and Sound)

தொலைவில் நிற்கும் உங்கள் நண்பரை நீங்கள் அழைக்கும்போது, உங்கள் குரலை அவர் கேட்க முடிகிறது. ஒலி எவ்வாறு உங்கள் நண்பரை அடைகிறது? ஒலி ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் பரவுவதாலேயே அவரால் அதைக் கேட்க முடிகிறது. ஒலி என்பது ஒரு வகை ஆற்றல் மற்றும் அது பரவ ஒரு ஊடகம் தேவை.

ஒளி மற்றும் ஒலி பற்றிய ஆய்வுகளும் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்பத்தில் ஒளி கண்களிலிருந்து வெளிப்படுவதாகக் கருதப்பட்டாலும், சுஸ்ருதர் (கி.பி. 1ஆம் நூற்றாண்டு) ஒளி வெளிப்புற மூலத்திலிருந்து வருவதாகத் திருத்தினார். சக்ரபாணி ஒளியும் ஒலியும் அலைகளாகப் பயணிப்பதாகவும், ஒளி அதிக வேகத்தில் செல்வதாகவும் கூறினார்.

பிரஸ்தபாதர் ஒலி காற்றால் பரவுவதாகவும், நீரில் ஏற்படும் சிற்றலைகளைப் போல வட்டங்களாக விரிவதாகவும் விளக்கினார். இசைத் தொனிகள் அதிர்வுகளின் அளவு மற்றும் அதிர்வெண்ணைப் பொறுத்து அமைவதாகக் கருதப்பட்டது.

இந்த அறிவு கோயில் கட்டும் போது சபை அமைப்பு , மணி ஓசை இவைகளில் மிகவும் பயன்படுத்தபட்டது .

வானியலும் பௌதிக அறிவியலும் *(Astronomy and Physics)*

ப ண்டைய இந்திய வானியல் ஆய்வுகள், வேத காலம் முதல் இடைக்காலம் வரை, மத நடைமுறைகள், கணிதம், மற்றும் வானியல் நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதில் முக்கிய பங்கு வகித்தன, ஆர்யபட்டா, பிரம்மகுப்தா, பாஸ்கரா போன்ற வானியலாளர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளனர்.

கணிதத்தில் முன்னேற்றம்:

பூஜ்ஜியம் உட்பட கணிதத்தில் இந்தியர்கள் முன்னேற்றம் அடைந்தனர், இது வானியல் கணக்கீடுகளுக்கு உதவியது.

வானியல் நிகழ்வுகள்:

கிரகணங்கள், வால்நட்சத்திரங்கள் மற்றும் கோள்களின் இயக்கம் போன்ற வானியல் நிகழ்வுகளை ஆவணப்படுத்தினர், இது வானியல் அறிவுக்கு பங்களித்தது.

ஆரியபட்டா:

ஆரியபட்டா சூரிய குடும்பத்தின் சூரிய மைய மாதிரியை முன்மொழிந்தார், பூமி அதன் அச்சில் சுழல்கிறது என்றும், சூரிய மைய கட்டமைப்பில் கிரகங்களின் நிலைகளுக்கான கணக்கீடுகளை வழங்கினார் என்றும் கூறினார்.

பிரம்மகுப்தா & பாஸ்கரா:

பிரம்மகுப்தா மற்றும் பாஸ்கரா போன்ற வானியலாளர்கள் வானியலில் கணித மாதிரிகளை வழங்கினர்.

இடைக்காலம்:

இடைக்காலத்தில், வானியல் அறிவு மேலும் வளரத் தொடங்கியது, பல வானியல் நூல்கள் எழுதப்பட்டன, வானியல் கருத்திகள் உருவாக்கப்பட்டன.

பங்களிப்புகள்:

பண்டைய இந்திய வானியலாளர்களின் பங்களிப்புகள் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன.

பண்டைய இந்திய வானியல் அறிமுகம்:

பண்டார்கர் ஓரியண்டல் ஆராய்ச்சி நிறுவனம், புனே போன்ற நிறுவனங்கள் பண்டைய இந்திய வானியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன.

வானியல் ஆய்வுகள் பௌதிக அறிவியலை மேம்படுத்தின. ஆர்யபட்டர் (5-6ஆம் நூற்றாண்டு) கோள் இயக்கம் பற்றிய முன்னோடி கண்டுபிடிப்புகளை மேற்கொண்டார். வாசஸ்பதி மிஸ்ரா (கி.பி. 840) முப்பரிமாண வடிவியலை (coordinate geometry) முன்னறிவித்தார். நேரம் மற்றும் இடத்தை அளவிடுவதற்கான மிகச் சிறிய அலகுகள்—க்ஷணம் (0.044 வினாடிகள்), த்ருதி ($2.9623*10^{-4}$)—போன்றவை வரையறுக்கப்பட்டன.

தமிழர்களின் பங்களிப்பு இதில் அதிகம் உண்டு . இவைகள் ஆவணபடுத்தபடவேண்டும்

இயக்க விதிகள் (Laws of Motion)

வைசேஷிகர்கள் இயக்க வகைகளை வகைப்படுத்தினர். பிரஸ்தபாதர் (7ஆம் நூற்றாண்டு) நேர்கோட்டு இயக்கம், வளைவு இயக்கம், சுழல் இயக்கம், மற்றும் அதிர்வு இயக்கம் ஆகியவற்றை விவரித்தார். புவியீர்ப்பு, புரிதிறன் (elasticity), மற்றும் எதிர்ச்செயல் (reaction) ஆகியவற்றால் ஏற்படும் இயக்கங்களையும் அவர் குறிப்பிட்டார். பின்னர், பாஸ்கராச்சார்யர் (12ஆம் நூற்றாண்டு) சராசரி வேகத்தை $v=s/t$ என்ற சூத்திரத்தில் அளவிட்டார். ஆயினும், இந்தியாவில் பின்னர் இயக்க விதிகளை மேலும் அளவீடு செய்யும் முயற்சிகள் தொடரவில்லை.

சோதனை முறை எதிராக உள்ளுணர்வு (Experimentation vs. Intuition)

ஐரோப்பாவில் சோதனை முறைகள் அறிவியலை முன்னேற்றின, ஆனால் இந்தியாவில் உள்ளுணர்வு அடிப்படையிலான அணுகுமுறை பெரும்பாலும் நீடித்தது. உதாரணமாக, சங்கர மிஸ்ரா (15-16ஆம் நூற்றாண்டு) மின்னியல் ஈர்ப்பு, மேற்பரப்பு பதற்றம் (surface tension) போன்றவற்றை கவனித்தாலும், அவற்றின் காரணங்களை ஆழமாக ஆராயவில்லை. வானியலைத் தவிர மற்ற துறைகளில்

அளவீடு மற்றும் ஆய்வு குறைவாகவே இருந்தது.உள்ளுணர்வு என்பதும் ஒரு ஆற்றல் வாய்ந்த சக்திதான் , இதுவும் இப்போது ஆயவிர்க்குண பயன்படுகிறது .

சமூகப் பின்னணி

வானியல் ஆய்வுகள் புரவலர் ஆதரவைப் பெற்றன, ஏனெனில் அவை மழைப்பொழிவு கணிப்பு மற்றும் சோதிடத்திற்கு உதவின. ஆனால் பிற துறைகளில் அறிவியல் ஆர்வம் குறைவாகவே இருந்தது.

நமது நாட்டில் மதம் மற்றும் மூடநம்பிக்கைகள் அறிவியல் முன்னேற்றத்தைத் தடுத்தன.

ஐரோப்பாவோ, கிழக்கின் அறிவைப் பயன்படுத்தி, சோதனை முறைகளால் அதை மேம்படுத்தியது. இந்தியாவில், 15-16ஆம் நூற்றாண்டுகளில் அறிவியல் ஆர்வம் குறைந்து, கலை மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.ஆனால் அதே காலகட்டதில் ஐரோப்பாவில் தொழில் புரட்சி ஏற்ப்பட்டது , பல புதிய காண்டுபிடிப்புகள் நடந்தன . நாம் அப்போது அன்னியர் ஆட்சியில் இருந்து பின்தங்கி விட்டோம் . நம்மிடம் இருந்ததையும் சொல்ல தக்க ஆட்கள் இல்லை .

முடிவுரை

இந்தியாவின் பௌதிக அறிவியல் பங்களிப்பு பண்டைய காலத்தில் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஆயினும், சோதனை முறைகளின் பற்றாக்குறை மற்றும் சமூகக் காரணிகள் அதன் முன்னேற்றத்தைத் தடுத்தன. சுதந்திரத்திற்குப் பின், இந்திய அறிவியல் மீண்டும் உயர்ந்து வருகிறது

இந்தக் கட்டுரை ஆவணத்தில் உள்ள கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு தமிழில் எழுதப்பட்டுள்ளது.

இந்த கட்டுரை நாம் படித்த ஒரு ஆங்கில கட்டுரையைத் தழுவி எழுதியது . இது ஆர்வம் ஏற்ப்படுதினால் தொடர்ந்து இன்னமும் எழுதுகிறேன். அன்புடன்

எளிய முறையில் யாப்பறிவோம்.

நெருப்பலையார்.இராம இளங்கோவன்

பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்

பாடம்: 40.
தரவு கொச்சகக் கலிப்பா - வேறு வகை ஓசை:

தரவு கொச்சகக் கலிப்பா *என்பது, ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வரும் கொச்சகம் தரவுக் கொச்சகம் ஆகும். அதாவது, பெண்கள் புடவையை இடுப்பில் கட்டிக் கொள்ள பல மடிப்பாகக் கொய்து உடுப்பர். அப்படிக் கொய்து உடுப்பதைக் கொச்சகம் என்பர். கொசுவம் போல் பல மடிப்பாக மடித்து வருவது போல் கொச்சகமாய் வந்த பாடலே கொச்சகம் ஆயிற்று. அந்த வகையில் கொச்சகக் கலிப்பாவில்* ***தரவு, தாழிசை, அராகம், சுரிதகம்*** *என்று கொசுவம் போல் அடுக்கி வந்த* ***தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசை, பஃறாழிசை, மயங்கிசை*** *ஆகியப் பெயர்களைப் பெற்று வரும்.*

ஆனால், இந்தக் கொச்சகம் என்பது நான்கடியாக, ஐந்தடி, எட்டடியாகத் தனித்து வருவதற்கும் பொருந்தும். ஆனால், இது ***தரவு, தனிச்சொல், ஆசிரியச் சுரிதகம்*** *இரண்டு முறை மாறி மாறி வரும் வேறு வகையான* ***தரவு கொச்சகக் கலிப்பா*** *ஆயிற்று. முதலில் நான்கடித் தரவும், அடுத்து, தனிச்சொல்லும், இரண்டடிச் சுரிதகமும் பெற்று வந்த பாடல் இறுதி பெறும். இரண்டடிக்கோர் எதுகைப் பெற்று வரும்.*

அடி தோறும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமையும். சுரிதகத்தின் ஈற்றடியில் ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடியும். தரவு கொச்சகக் கலிப்பாவில் இரண்டு வகையுண்டு. இதில் இது ஒரு வகையாகும். தரவு பாடலில் இயற்சீர்களும், காய்ச்சீர்களும் கலந்து வரலாம். ஆனால், சுரிதகத்தில் இயற்சீர்கள் மட்டுமே அமைந்து வரும்.

கீழே தரவு கொச்சகக் கலிப்பாவுக்கான எடுத்துக் காட்டுப் பாடல்கள் காண்போம்:

பறவையாய்ப் பறப்போம் சிறகடித்து!

(தரவு கொச்சகக் கலிப்பா - வேறு வகை)

1)

நான்கடித் தரவு:

விழியிரண்டின் இமையிரண்டும் விழிப்பறவைச் சிறகுகளே!
விழிதிறந்த கிழக்குமுதல் விழிமூடும் மேற்குவரை
அழியாத பரிதியான அதுபறக்கும் சிறகுகளே!
இழிவகற்ற உழைப்போரின் இருகையும் சிறகுகளே!

தனிச்சொல்*: அதனால்,*

இரண்டடி ஆசிரியச் சுரிதகம்:

சிறகை விரித்துச் சிரித்து வாழு;
உறவை எங்கும் உனக்கென ஆக்கியே!

2)

நான்கடித் தரவு:

மலைக்கும் வெண்முகிலே மகிழ்வூட்டும் சிறகாகும்;
அலைகளே கடலெனும் அரும்பறவைச் சிறகாகும்;
கலைகளில் இசைப்பறவைக் கருவிதரும் இசைச்சிறகாய்
நிலையென மாந்தாநீ நெடுந்தொலைவு பறந்திடுவாய்!

தனிச்சொல்: *எப்பொழுதும்,*

இரண்டடி ஆசிரியச் சுரிதகம்*:*

எதுகை மோனை என்கிற சிறகால்
அதுவும் பறக்கும் அரும்பா பறவையே!

இப் பாடத்தில் ***தரவு கொச்சகக் கலிப்பா*** வகையில், ***தரவு, தனிச்சொல், ஆசிரியச் சுரிதகம்*** ஆகியவை மாறி மாறி இரண்டு முறை பயின்று வரும் வேறு வகையான ***தரவு கொச்சகக் கலிப்பா*** வைப் பயின்றோம். அடுத்த பாடத்தில் ***தரவிணைக் கொச்சகக் கலிப்பா***வைப் பற்றி ஆய்ந்து அறிந்து கொள்வோம்.

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

Translator, Publisher, Madurai

Chapter 14

2038, New York

Renauld read all the reports of Dev. Dr.Maran had discussed each and every point in that, so Renauld had no way to rise any questions or doubts. Maran had attached a digital print of Dev's brain as well.

He could clearly notice a search for the truth related to the genesis of a language. It is a search based on a historical present. He coined the term 'historical present

He looked for the next search in the digital print of his brain.

That is.... primitive age.

Snow cladded land and shivering people around. They had wrapped themselves with the hides of the animals, only to protect from the chill weather and not to cover their bodies. They planned to move to someplace where they could have some sunlight and vegetation. Here, this snow is not suitable for people to live in. Many die day after day. So they started in search of a warm place. Many died on the way. Those who survived found mountain caves and entered in. There they found some deer and tigers too. Animals also found their way into those caves. Initially, they lived with beasts and reptiles. If it rains, they went into the caves otherwise, they come out in search of food. They made weapons with stones. They sharpened them and used them to kill animals and shared the meat among themselves. They learned to make fire by rubbing stones and started cooking the meat and found it tasty. The dancing fire gave them warmth at night and added taste to food. So they started to keep the fire burning for nights and days. If it is put off, it was again a difficult process to bring out. One person was good at it. One day when he died, people stopped bringing fire.



When the cold season started, they needed fire for warmth. A woman found the dried nests of the birds and tried to burn them with the fire she made by rubbing the stones. A raindrop fell down and put off her fire. The group shouted at her, but she reacted back. She cried, showing her teeth and nails in a gesture to attack them. A young man approached her and helped her to bring the fire again. Then she brought the dried nests and twigs to keep the fire burning. Now the secret of fire is known.

They cooked food, wrapped it with the hides, and now started communicating with sounds and gestures. When the spark hurt a man, he cried thii and the sound of the fire was in a rhyme of theep theep.

It rained heavily and the water sources were full. The fire rescued them from all dangers and protected them for centuries. Now they used many monosyllabic words like poe, vaa, thaa, kai, kaal and many others. They had almost a hundred words to communicate essential matters. They had names such as Aathan, Nhithan, Saaththan, Nhaathan, Murukan, Arukan, Manthi, Thaathi, Neeli, Valli, Alli, and so on.

After the rain stopped and the sky is clear. A hunter from the hills guided them. He was called Seevan.

Dev felt that he had another name called Kadamaban. On another hill lived a young man called Kadamban. He placed a stone in the burial place when somebody died. Finally, he added Valli to his list of women. Once she refused to marry him, but when the elephant chased her, she came and embraced Kadamban and the physical contact led them to marry each other.

It was bubbling from Dev's memory of Kadamban, Kaarththikeyan, Murugan, Velan, and Subramaniyan. Oh, how many names for a single man! No, they are the names of the chiefs of their clans in the Tamil-speaking group. One person had a dialogue with Avvai, another had fought and killed an asuran, the next one had an argument with his dad, and one more person married Theiyvayanai. All are Murugan. Our great grandfather,...

This race developed their language in the script and started recording important and lovable happenings in their lives.

Dev thought 'Why don't we marry a Valli'? He planned to marry a girl name, Valli. Why did we leave the habit of marrying a woman? Let me marry a girl now? If the marriage didn't work out, I shall easily come out of it. No problem.

It is the golden moment a tiny sharp blade of grass shot out into dry land.

Renauld stopped his digital analyzer. He called Dr. Maran and asked, 'Had Dev married Valli or in a plan to marry Valli? Please let me know that.'

Maran said, Yes Sir.

He wondered and asked himself 'Is there a name Valli'.

புதிய வெளியீடுகள்









சந்திரோதயம் பதிப்பகம், மதுரை-18.
போன் 7010997639